



விலை ரூபா 80

பக்கங்கள் - 24

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 07 வள்ளுவ ஆண்டு 2055
கார்த்திகை மாதம் 09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (24.11.2024)





# வடக்கு, கிழக்கில் முதலீடு செய்ய விரும்பும் சீனா

## பச்சைக்கொடி காட்டத் தயாராகும் அரசாங்கம்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களை மையப்படுத்தி சீனா அதிக முதலீடுகளை மேற்கொள்வதற்கான முயற்சிக ளில் ஈடுபட்டுள்ளதுடன், அதற்கான முதல்படியா கவே இங்குள்ள விவசாயிகள், மீனவர்கள் மற்றும் வறுமையானவர் களுக்கான உதவிகளை இலங்கைக்கான சீனதுதரகம் செய்து வருவதாக இராஜ தந்திர தகவல் கள் தெரிவிக்கின்றன.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முதலீ டுகளை மேற்கொள்வதற்கான பல்வேறு நகர்வுகளில் சீனா இறங்கியிருந்தது.

ஆனால், (தொடர்ச்சி...) 02

# திகாமடுல்ல முடிவுகளை மீள எண்ண வேண்டும்

## ஆணையத்தில் அதாஉல்லா மகஜர் !



( நூருல் ஹுதா உமர் )

கடந்த பொதுத் தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் புதிய ஜனநாயக முன்னணியின் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட தேசிய காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ.எல். எம். அதாஉல்லா தலை மையிலான (தொடர்ச்சி...) 02

## ஜனாதிபதியின் ஆலோசகராக பேராசிரியர் கோமிக



விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக பேராசிரியர் கோமிக உடுகமசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் அமெரிக்க ஹுஸ்டன் பல்க லைக்கழகம் மற்றும் எம்.டி எண்டர்சன் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியராவார். அவருக்கான நியமனக் (தொடர்ச்சி..) 02

## அரிசி தட்டுப்பாடு

# ஆலை உரிமையாளர் மீது சீறிப்பாயும் அரசாங்கம்




அரிசியை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய அரசாங்கம்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

பாரிய அரிசி ஆலை உரிமையா ளர்கள் நெல்லைப் பதுக்கி வைத்திருக்கின்றமையாலேயே சந்தையில் அரிசிக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. என்றாலும் நுகர்வோருக்கும், விவசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வண்ணம் அரிசியை இறக்குமதி செய்து சந்தையில் தட்டுப்பாடின்றி விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

சந்தையில் பாரிய அளவில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாடு, வெள்ளை, சிவப்பு உட்பட உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு அரிசி வகைகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு ள்ளது. அதிக கேள்வியுள்ள நாட்டரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

அரிசி தட்டுப்பாட்டுக்குத் தற்காலிக தீர்வை வழங்கும் நோக்கில் 70 ஆயிரம் மெற்றிக் தொன் நாட்டு 02

## ஐ.நா: சட்ட ஆணைக்குழுவில் இலங்கைக்கு உறுப்புரிமை



(சுப்ரமணியம் நிஷாந்தன்)

சர்வதேச வர்த்தகச் சட்டத்திற்கான ஐ.நா வின் ஆணைக்குழு விற்கு (UNCITRAL) இலங்கை, 31ஆவது நாடாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் தெரிவுசெய்யப் பட்டுள் ளது. இலங்கை ஆசிய பசுபிக் குழுவிலிருந்து இந்த ஆணைக்கு ழுவில் ஆசனமொன்றைப் பெற கடந்த 20ஆம் திகதி நடை பெற்ற வாக்கெடுப்பில் (தொடர்ச்சி...) 02

## கிழக்கிலும் இராணுவ முகாம்கள் அகற்றப்படுவது அவசியம்

(செல்லையா-பேரின்பராசா )



வட மாகாணத்திலுள்ள இராணுவ முகாம்களை அகற்றும் செயற்பாடுகள் போன்று கிழக்கு மாகாணத்திலுள்ள இராணுவ முகாம்களை அகற்றி நீண்ட காலமாக மூடப்பட்டிருக்கும் வீதிகளைத் திறக்க உத்தரவிட வேண்டுமென்று கோரிக்கை விடுப்பதாக கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் இரா.துரைரத்தினம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறி ப்பிட்டுள்ளார். (தொடர்ச்சி...) 02

## கனேடிய தமிழ் காங்கிரஸ் பிரிவினையை தூண்டுகிறது

### தேசிய சுதந்திர முன்னணி

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

தமிழ் பிரிவினைவாதிகளின் கோரிக்கைகளுக்கும், நிகழ்ச்சி நிரலுக்கும் ஜனாதிபதியும், தேசிய மக்கள் சக்தியும் இடமளிக்க கூடாது என தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளர் ஜயந்த சமரவீர தெரிவித்தார். தேசிய சுதந்திர முன்னணியின் தலை மையகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கரு த்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

இனவாதம்,மதவாதத்துக்கு எதிரானதே இந்த மக்கள் ஆணை என ஜனாதிபதி கூறியுள்ளதுடன்,வடக்கு,கிழக்கு தெற்கு என அனைத்து தரப்பு மக்களின் எதிர்ப்பார்ப்பும் அதுதான் என்றும் கூறி யுள்ளார். ஜனாதிபதி (தொடர்ச்சி...) 02

## அர்ச்சுனா எம்.பிக்கு எதிராக முறைப்பாடு



புதிய நாடாளுமன்ற உறுப்பினராக பத விப் பிரமாணம் செய்து கொண்ட வைத்தியர் அர்ச்சுனா இராமநாதனுக்கு எதிராக சிவில் செயற்பாட்டாளர்கள் குழுவொன்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் (தொடர்ச்சி...) 02

### லொஹான் ரத்வத்தேயின் மனைவிக்கு

## விளக்கமறியல் நீடிப்பு

சட்டவிரோதமான முறையில் வாகனம் ஒன்றை பயன்படுத்திய சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன் னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தேயின் மனைவி, சஷி பிரபாவை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் (தொடர்ச்சி...) 02

### கனடாவில் கொடூரம்:

## தந்தையைக் கத்தியால் குத்திக் கொன்ற மகன்



தந்தையை மகன் கத்தியால் குத்திக் கொலை செய்த அதிர்ச்சி தரும் துயரச் சம்ப வம் கனடாவில் கடந்த வியாழக்கிழமை நள் ளிரவு இடம்பெற்றுள்ளது. மகனைக் கனே டியப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். யாழ்ப்பாணம், அரி யாலையைச் சேர்ந்த 66 வயதுடைய குலத் துங்கம் (தொடர்ச்சி..,) 02

## மன்னார் போராட்டத்தை வன்முறையாக்கியவர்களை கைது செய்ய நடவடிக்கை

மன்னார் பொது வைத்தியசாலையில் இறந்த இளம் தாயின் மரணத்திற்கு நீதி கோரி கடந்த புதன்கிழமை (20) மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாக மக்கள் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது பொது சொத்துக்களை (தொடர்ச்சி...) 02

# இந்தியாவின் கடும் அழுத்தம் அவசியம்



(சுப்ரமணியம் நிஷாந்தன்)

"இலங்கையின் தேசிய இனப்பிரச்சி னைக்கு நிரந்தர அரசியல் தீர்வு வேண்டும். இது தொடர்பில் அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான இலங்கையின் புதிய அரசுக்கு இந்திய மத்திய அரசு கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்." என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடா ளுமன்றக் குழு வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் (தொடர்ச்சி...) 02

## மீண்டும் சி.ஐ.டியில் ஆஜரான பிள்ளையான்



முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என்றழைக்கப்பும் சிவநேச துரை சந்திரகாந்தன் வாக்குமூலம் வழங்குவதற்காக கடந்த 20ஆம் மற்றும் 22ஆம் திகதிகளில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகி னார். ஈஸ்டர் ஞாயிறு (தொடர்ச்சி...) 02

## வடக்கு...

இந்தியாவின் கடுமையான எதிர்ப்பால் இதற்கு சாத்தியமில்லாதிருந்தது.

இந்த நிலையில் தற்போதைய அரசாங்கம் சீனாவுடன் ஓரளவு நெருக்கமாக பணியாற்றக் கூடியது என்றும் கடந்த ஆண்டு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சீனாவுக்கு மேற்கொண்டிருந்த இரகசிய பயணத்தில் சில கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

தற்போதைய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் வடக்கு, கிழக்கை மையப்படுத்தி சீனா முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வமாக உள்ளதாகவும் அதற்கான ஆரம்பக்கட்ட முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் இராஜதந்திர தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு 1.5 பில்லியன் அளவிலான நிதியை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்துக்கு சீன தூதரகம் செலவு செய்துள்ளது. இந்த நிதியின் ஊடாக வறுமையான மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளதுடன், மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கும் பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளது.

பொதுத் தேர்தலின் பின்னர் கடந்த 19ஆம் 20ஆம் திகதிகளில் வடக்கு மாகாணத்துக்குச் சென்ற இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென்ஹொங், 12 மில்லியன் அளவிலான உதவிகளை வழங்கியுள்ளார். அதேபோன்று கிழக்கு மாகாணத்துக்கு 8 மில்லியன் அளவிலான நிதி உதவிகளை வழங்கியுள்ளார். இவ்வாண்டு மாத்திரம் இதுவரை 1.5 பில்லியன் அளவிலான உதவிகளை சீன தூதரகம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கியுள்ளது.

நன்கொடை நிகழ்வுகள் ஊடாக இங்குள்ள சமூகங்களுடன் சீனா சுமுகமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளது. சீனாவின் பிரசன்னம் வடக்கு, கிழக்கில் அதிகரித்துள்ளதாக கடந்த காலத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் கடும் எதிர்ப்பையும் வெளியிட்டிருந்தனர்.

இந்தப் பின்புலத்தில் கடந்த 20ஆம் திகதி யாழ்.ஊடக அமையத்தில் சீன தூதுவர் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில்,தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வழங்கிய ஆதரவை வரவேற்றிருந்தார். சீனாவின் இந்த நகர்வுகள் எதிர்காலத்தில் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் பல்வேறு முதலீடுகளை மேற்கொள்வதற்கு சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கும் என்றும்

## இந்தியாவின்...

ஜாவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வியாழக்கிழமை கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவில் அதன் தலைவரும் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், ஞானமுத்து ஸ்ரீநேசன், இளையதம்பி சிறிநாத், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பிலும், தமிழரசுக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் அத்தகைய அரசியல் நகர்வுகளில் இந்தியாவின் வகிபங்கு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், இலங்கையின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண புதுடில்லியின் கடும் அழுத்தத்தின் அவசியத்தை தமிழரசுக் கட்சி இந்திய உயர்ஸ்தானிகரிடம் எடுத்துரைத்ததுடன், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு இதுதொடர்பில் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் தமிழரசுக் கட்சி உயர்ஸ்தானிகரிடம் வலியுறுத்தியுள்ளது.

## கனடாவில்...

மதிசூடி என்பவரே இவ்வாறு குத்திக் கொலை செய்யப்பட்டவராவார்.

தமிழினப் பற்றாளரும் கனேடியத் தமிழ் வானொலி, பத்திரிகைத் துறையின் முன்னோடி பிரபல சமூக சேவையாளருமான குலத்துங்கம் மதிசூடி கடந்த 40 வருடங்களாக கனடாவில் வாழ்ந்து வருகின்றார்.

அவ்வப்போது இலங்கைக்கு வந்து பலவிதமான சமூக சேவைகளை வடக்கு, கிழக்கில் வழங்கி வந்தவர். வருடமொருமுறை காரைதீவு வந்து செல்கின்றவர். அம்பாறை மாவட்டத்தில் பல சமூக செயற்பாடுகளைச் செய்தவர். அவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர்.

அவரது மகன் இளங்கோ காதல் முறிவு காரணமாக மனநிலை பாதிக்கப்பட்டு இருந்தவர் என்று சொல்லப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை இரவு தாயை ஒரு அறையில் பூட்டிவிட்டு தந்தையைக் கத்தியால் குத்தி கொலை செய்திருக்கின்றார் என்று அவரது சகோதரி வாக்குமூலம் அளித்துள்ளார்.

உடனடியாகக் கனடா பொலிஸார் அவரைக் கைது செய்து காவலில் வைத்துள்ளனர். பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன.

கனேடிய ஊடகங்கள் இந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டு வருகின்றன.

## ஐ.நா...

போட்டியிட்டது.இதன்போது இலங்கைக்கு சார் பாக 177 வாக்குகள் கிடைக்கப்பெற்றதால் ஆணைக்குழுவில் இணை யும் வாய்ப்பு கிடைத்துள்ளது. (தொடர்ச்சி..)

தேர்ந்தெடுக்கப்பட்ட 31 நாடுகளில் வாக்கெடுப்பில் இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான வாக்கை இலங்கையே பெற்றுக்கொண்டது.

மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், வியட்நாம், சீனா, ஜப்பான் மற்றும் கொரிய குடியரசு ஆகியவை ஆசிய பசிபிக் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஏனைய உறுப்பு நாடுகளாகும். 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அடுத்துவரும் ஆறு வருட காலத்திற்கு இலங்கை இந்த ஆணைக்குழுவில் பணியாற்றும்.

சர்வதேச வர்த்தக சட்டத்திற்கான ஐ.நாவின் ஆணைக்குழு 1966ஆம் ஆண்டு ஐ.நாவால் நிறுவப்பட்டதுடன், வியன்னாவை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. இது சர்வதேச வர்த்தகத் துறையில் முக்கிய சட்ட அமைப்பாகும். வர்த்தகத்திற்கான தடைகளை நீக்குதல் மற்றும் வர்த்தகச் சட்டங்களை ஒத்திசைத்தல் ஆகிய பணிகள் இந்த ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படுகிறது.

சர்வதேச வர்த்தகச் சட்டத்திற்கான ஐ.நாவின் ஆணைக்குழு உறுப்பு நாடுகளுக்கு தொழில்நுட்ப உதவியையும் வழங்குகிறது.

இலங்கை இதற்கு முன்னர் 2004 – 2007 வரையும் 2016 – 2022 வரையும் சர்வதேச வர்த்தகச் சட்டத்திற்கான ஐ.நாவின் ஆணைக்குழுவில் உறுப்பினராக பணியாற்றியுள்ளது.

## லொகான்...

டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

நுகேகொட நீதவான் நீதிமன்றில் அவரை நேற்று (22) முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## திகாமடுல்ல...

தேசிய காங்கிரஸ் நிர்வாகிகள் நேற்று (22) தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்திற்கு விஜயம் செய்து நடந்து முடிந்த பொதுத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் அடங்கிய மனுவொன்றை உத்தியோகபூர்வமாக கையளித்தார்கள்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள தேசிய காங்கிரஸ் நிர்வாகிகள், திகாமடுல்ல மாவட்டத்தின் தேர்தல் முடிவுகளை மீள எண்ணப்பட வேண்டும் . கடந்த தேர்தல் காலத் தில் தேசிய காங்கிரஸ் தலைவரான முன்னாள் அமைச்சர் ஏ.எல். எம். அதாஉல்லா அவர்களை குறிவைத்து பின்னப்பட்ட பல நகர்வுகளையும் இடையூறுகளையும் உள்ளடக்கிய பல்வேறு விடயங்கள் இம்மனுவில் விஷேடமாக உள்ளடக்கப்பட்டு இருந்தது என்று தெரி வித்தனர். மேலும், நியாயத்திற்காக எப்போதும் குரல் கொடுக்கும் தேசிய காங்கிரஸ் இது தொடர்பான விரிவான விளக்கங்களை மிக விரைவில் மக்கள் முன்றில் சமர்ப்பித்து அதன் அரசியல் போராட்டத்தை தொடரும் என்றனர். இந்த விஜயத்தில் தேசிய காங்ரஸின் பிரதித் தலைவர் டாக்டர் ஏ. உதுமாலெப்பை, பொருளாளர் ஜே.எம். வஸீர், சட்டத்தரணி மர்சூம் மௌலானா கலந்து கொண்டிருந்தனர்.

## கனேடிய...

பிரிவினைவாதத்துக்கு எதிராக செயல்பட வேண்டும். அதனையே இந்த மக்கள் ஆணை வெளிப்படுத்தியுள்ளது.

தமிழீழத்தை கோரி பிரிவினைவாதம் பேசிய சுமந்திரனை மக்கள் வீட்டுக்கு அனுப்பியுள்ளனர். மதவாதம் பேசிய ஹக்கீம் கூட மயிரிழையில் தான் வெற்றிபெற்றார்.

தற்போது புலம்பெயர் தமிழர்கள் தமது பிரிவினைவாதக் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள இந்த மக்கள் ஆணையை ஏணியாக பயன்படுத்திக்கொள்ள பார்க்கின்றனர். கனேடிய தமிழ் காங்கிரஸ் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளதுடன், பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றமைக்கும் வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

வாழ்த்துக்களை தெரிவித்துள்ளதோடு உடனடியாக தமிழ் பிரிவினைவாதிகளின் கோரிக்கையை நிறைவேற்றுமாறும் கனேடிய தமிழ் காங்கிரஸ் கோரியுள்ளது. 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள், மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள், பிரிவினைவாதம் கொண்ட புதிய அரசியலமைப்பொன்றை கொண்டுவாருங்கள், வடக்கு, கிழக்கில் உள்ள பௌத்த விகாரைகளை பாதுகாப்பதையும், அபிவிருத்தி செய்வதையும் நிறுத்துங்கள் என இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மக்கள் ஆணையை சரியாக உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த ஆணையானது இனவாதத்துக்கும், மதவாதத்துக்கும் எதிரானது போன்று பிரிவினைவாதத்துக்கும் எதிரானது என்பதை உணர்ந்துக்கொள்ள வேண்டும். அதனைதான் வடக்கு மக்கள் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

நாட்டின் ஏனைய மாவட்ட மக்களுக்கும் இதனைத்தான் கூறியுள்ளனர். தமிழ் பிரிவினைவாதிகளின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கமும் ஜனாதிபதியும் செயல்படக் கூடாது. பிரிவினைவாதிகளின் நிகழ்ச்சி நிரலை கொண்டுசெல்ல முற்பட்டால் அதற்கு எதிராக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை ஒன்றிணைத்து நாம் கடுமையாக எதிர்ப்போம்.” என்றார்.

## அரிசி...

எதிர்வரும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் இறக்குமதி செய்ய உள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகச்சந்திப்பில் கருத்து வெளியிட்ட விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த,

“பண்டிகை காலத்தில் நுகர்வோருக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தீர்க்கும் வகையில் இந்தியாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக மற்றும் விவசாய அமைச்சு ஒன்றிணைந்து கூட்டு அமைச்சரவைப் பத்திரமொன்றை இதற்காக சமர்ப்பித்துள்ளது. விவசாயிகளுக்கும் பிரச்சினை ஏற்படாத வண்ணம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் நுகர்வோருக்கும், விவசாயிகளுக்கும் பாதகம் ஏற்படாத வகையில் தீர்மானங்களை எடுத்து வருவதுடன், இடைநிலை தரகர்களுக்கு கொள்ளையடிக்க நாம் அனுமதியளிக்க மாட்டோம்.

பாரிய நெல் ஆலையாளர்களுடன் எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. அனால், நாட்டில் தேவைக்கு மேலதிகமாக நெல் உற்பத்தி இடம்பெற்றுள்ளது. அவ்வாறெனின் சந்தைக்கு விநியோகிக்கப்படாத நெல் அவர்களிடமே இருக்க வேண்டும்.

அதனால் அரிசியைத் தட்டுப்பாடின்றி மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், தற்போதுள்ள கட்டுப்பாட்டு விலைக்கே விற்பனையும் செய்யப்படும்.

நுகர்வோர் இவ்வாறு பாதிப்புகளை எதிர்கொள்ளப் பிரதான காரணம் விவசாய திணைக்களம் நெல் கொள்வனவுகளை மேற்கொண்டிருக்காமைதான். அவ்வாறு கொள்வனவு செய்திருந்தால் உரிய வகையில் அவற்றை சந்தைக்கு விநியோகித்து சந்தையில் போட்டித்தன்மையை உருவாக்க முடிந்திருக்கும்.” என்றார்.

## கிழக்கிலும்...

வேண்டுமென்று கோரிக்கை விடுப்பதாக கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் இரா. துரைரத்தினம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விமான நிலையத்தை விமானப்படையின் கீழ் கொண்டுவரும் செயற்பாட்டை நிறுத்தி அதனை சிவில் நிர்வாக சேவையின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன் மிக நீண்ட காலமாக மூடப்பட்டுள்ள மட்டக்களப்பு விமான நிலைய புதிய வலையிறவு வீதி உட்பட மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல வீதிகளைத் திறந்து விடுவதுடன் தனியாருக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களில் உள்ள படை முகாம்கள் பொலிஸ் நிலையங்கள் என்பவற்றை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

இதே வேளை பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதி வடமாகாணத்தில் இராணுவ முகாம்களை அகற்ற மேற்கொள்ளும் நல்லெண்ண செயற்பாட்டைக் கைவிடுமாறு கூறி மீண்டும் இனவாதத்தைத் தூவ முற்படுவதை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

மேலும் இலங்கையின் அரசியல் வரலாற்றில் புதிய அத்தியாயம் படைக்கும் வகையில் மாற்றுத் திறனாளி ஒருவரை தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக்கி கௌரவமளித்தமை ஜனாதிபதியின் உயரிய சிந்தனையின் வெளிப்பாடாகும் இதனையிட்டு பாராட்டுகின்றேன்.

அத்துடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் சுமார் பன்னிரெண்டாயிரம் வேலையற்ற பட்டதாரிகள் தொழில் வாய்ப்பின்றி பல வருட காலமாக விரக்தியுடன் வாழ்ந்து வருகின்றனர் இவர்களுக்குத் தொழில் வாய்ப்பை ஜனாதிபதி வழங்க வேண்டுமென்றும் கேட்டுள்ளார்.

## மன்னார்...

சேதப்படுத்தி வன்முறையை தூண்டும் விதமாக செயற்பட்ட நபர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக வைத்தியசாலைக்குள் நுழைந்து கண்ணாடிகளை சேதமாக்கியவர்கள்,பொலிஸார் மீது கற்கள் வீசியவர்கள் ,டயர்கள் உள்ளிட்ட பொருட்களை வீதிகளில் எரித்து மக்களின் போராட்டத்தை திசை திருப்பியவர் களை கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வைத்தியசாலை ஊஊவுஏ கேமரா மற்றும் போராட்டத்தின் போது எடுக்கப்பட்ட காணொளிகளை சேகரித்து அதன் ஊடாக அமைதியான போராட்டத்தை திசை திருப்பி வன்முறை ஆக்கியவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களை கைது செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## மீண்டும்...

பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் பிரித்தானியாவின் செனல் 4 ஒளிபரப்பிய நிகழ்ச்சி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கு அமைய அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

கடந்த புதன்கிழமை (20) குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகிய சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழிலும் வாக்குமூலம் வழங்க விரும்புவதாகத் தெரிவித்த நிலையில், இது தொடர்பான மொழி பெயர்ப்பு வேலைகளைத் தயாரித்து நேற்று வருமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக, செனல் 4 கடந்த ஆண்டு ஜூன் 8ஆம் திகதி சர்ச்சைக்குரிய வீடியோவை ஒளிபரப்பியது.

சுமார் 50 நிமிடங்கள் ஒளிபரப்பான குறித்த காணொளியில், சுவிட்சர்லாந்தில் தங்கியுள்ள பிள்ளையான் அணியின் ஊடகப் பேச்சாளரான அசாத் மௌலானா என்பவரே பேட்டியளித்திருந்தார்.

பின்னர், சம்பந்தப்பட்ட காணொளியின் உள்ளடக்கம் குறித்து ஆராய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சகத்துக்கு முறைப்பாடு கிடைத்ததையடுத்து, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணையைத் தொடங்கியது.

இதன்படி, மேற்படி விசாரணை தொடர்பான வாக்குமூலங்களைப் பெறுவதற்காக முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் கடந்த 12ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

எவ்வாறாயினும், அன்றைய தினம் முன்னாள் இராஜாங்க அமைச்சர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகாத நிலையில், சட்டத்தரணிகள் ஊடாக வாக்குமூலத்தை வழங்குவதற்கு வேறு திகதியை அவர் கோரியிருந்தார்.

அதன் பிரகாரம், மீண்டும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு கடந்த புதன்கிழமை அவருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராகியிருந்தார். சுமார் 5 மணிநேரம் வாக்குமூலம் வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அர்ச்சுனா...

முறைப்பாடளித்துள்ளது. முகநூல் சமூக வலைதளத்தில் இது தொடர்பில் அவர் வெளியிட்ட தகவலை விசாரிப்பதற்காக சிவில் செயற்பாட்டாளர்களால் இந்த முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

10 ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றிருந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு குறித்த தினத்தில் எந்தவொரு ஆசனத்திலும் அமர்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா சம்பிரதாயபூர்வமாக எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒதுக்கப்படும் ஆசனத்தில் அமர்ந்தார்.

எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒதுக்கப்படும் ஆசனம் என்றும் வேறு ஆசனத்தில் அமருமாறும் அர்ச்சுனா எம்.பி யிடம் நாடாளுமன்ற படைக்கள சேவிதர் ஒருவர் கேட்டுக்கொண்டார் இதற்கு மறுப்பு தெரிவித்த அர்ச்சுனா எம்.பி பணியாளருடன் விவாதித்ததை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றினார். இந்தவிடயம் சமூக வலைத்தளங்களில் பெரிதும் வைரலானது. ஆகவே இதுதொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு அவருக்கு எதிராக முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியின்...

கடிதத்தை நேற்று (22) ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க வழங்கினார்.

கொழும்பு டி. எஸ்.சேனநாயக்க கல்லூரியின் பழைய மாணவரான இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் பட்டதாரியாவார். பேராசிரியர் கோமிக உடுகமசூரிய, அமெரிக்காவின் மிச்சிகனில் உள்ள வெய்ன் ஸ்டேட் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும், டெக்சாஸ் தென்மேற்கு மருத்துவ மையத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். பல காப்புரிமைகளைப் பெற்றுள்ள இவர், அமெரிக்க அரச பணியிலிருந்து விலகி, கௌரவ சேவையாக ஜனாதிபதியின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் பதவியில் இணைந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

# மக்களை அலைக்கழிக்காமல் தேவைகளை நிறைவேற்றுவது அவசியம்

## வடக்கு ஆளுநர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்



அரச அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களின் தேவைகளை எவ்வளவு விரைவாக நிறைவேற்றிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அதைச் செய்து முடிப்பது அரச அதிகாரிகளின் கடமை என வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண துறைசார் மீளாய்வுக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றிய ஆளுநர்,பொதுமக்களை தனிப்பட்ட ரீதியில் பழிவாங்கும் வகையில் அலுவலர்கள் செயற்படக்கூடாது என்றும், அரச அலுவலகங்களை நாடிவரும் பொதுமக்களின் தேவைகளை எவ்வளவு விரைவாக நிறைவேற்றிக் கொடுக்க முடியுமோ அவ்வாறு செய்து முடிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

"மக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் ஆளுநர் அலுவலகத்துக்கு வருகின்றார்கள். அந்த நிலைமையை மாற்றியமைக்கும் வகையில் ஒவ்வொரு அலுவலகங்களும் வினைத்திறனாக பணியாற்ற வேண்டும்" என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

மேலும், விவசாயிகளின் நீண்ட காலப் பிரச்சினையான அவர்களின் உற்பத்திக்கான சந்தை வாய்ப்பு மற்றும் 10 சதவீதக் கழிவு தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டிய ஆளுநர், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் விவசாய உற்பத்திப் பொருள்களைச் சேகரிக்கக் கூடிய மையங்களை உருவாக்குவது தொடர்பில் ஆராயுமாறும் பணித்தார்.

# மன்னார் வைத்தியசாலை மரணங்கள்: உரிய விசாரணைகள் வேண்டும்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பொது வைத்தியசாலையில் செவ்வாய்க் கிழமை (20) பிரசவத்தின் பொழுது மரணித்த தாய் மற்றும் சிசு தொடர்பில் உரிய விசாரணையை நடாத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதுடன் மன்னார் வைத்தியசாலை தொடர்பில் மக்களின் அச்சத்தைப் போக்குமாறும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை இவ்வாறான அசாதாரண சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெறாமல் உரியவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதுடன் மக்களுக்கு உயரியதும் பாதுகாப்பானதுமான சேவை கிடைப்பதை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மன்னார் வைத்தியசாலையில் அண்மைக்காலமாக பிரசவத்திற்கு அனுமதிக்கப்பட்ட தாய்மார் இறந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளமை கவலை அளிக்கிறது. நோயாளர்கள் தங்களது மருத்துவ தேவைகளுக்காக வைத்தியசாலைக்கு செல்வதற்கு அச்சமடைந்த திருப்பதாகவும் அறிய முடிகிறது. நடந்த சம்பவம் தொடர்பாக குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் மேலும் தெரிவித்துள்ளார்.



# வெயாங்கொடையில் தொடரும் புதையல் தேடும் பணி

வெயாங்கொட வதுரவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற மத்திய அதிவேக நெடுஞ்சாலைக்கு அருகில் புதையல் ஒன்றைத் தேடும் பணி நேற்று முன்தினம் (21) ஆரம்பமானது.

அத்தனகல்ல நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுக்கு அமைய இந்த தேடுதல் பணி நடைபெற்று வருகின்றது.

பல ஆண்டுகளாக இங்குப் புதையலைத் தோண்டிய பலரை உபகரணங்களுடன் பாதுகாப்புப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

இதன் காரணமாக, சதுப்பு நிலப்பகுதியில் அமைந்துள்ள இந்த இடத்தில் தொல்பொருள் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வின்போது அங்கு புதையல் எதுவும் இல்லை என தகவல் வெளியாகியது.

ஆனால்,பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நடத்திய விசாரணையில் பூமிக்குள் ஏதோ ஒன்று இருப்பது தெரியவந்துள்ளது.

இதன்படி, அத்தனகல்ல நீதவான் நீதிமன்றில் ஆதாரங்களை அறிக்கை செய்ததன் பின்னர், தொல்பொருள் திணைக்களம், சுரங்க மற்றும் புவியியல் பணியகம், வெயாங்கொடை பொலிஸ், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மீரிகம பிரதேச செயலகம் ஆகியவற்றின் பங்குபற்றலுடன் அதிகாரிகளின் மேற்பார்வையில் பொது மக்களின் ஒத்துழைப்புடன் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்த்திகை மாதம் 09ஆம் நாள் சனிக்கிழமை

**மேஷம்:** நிதி தொடர்பில் பேசும்போது வேகமாக முடிவு எடுக்காதீர்கள்.

**ரிஷபம்:** நீண்டகாலமாக நிலுவையில் இருந்த கடன்கள் உங்களை வந்தடையும்.

**மிதுனம்:** அனுபவ வாய்ந்த ஒருவரின் ஆலோசனையின்றி செயற்படுவதை தவிர்க்கவும்.

**கடகம்:** தூரத்து உறவினரிடமிருந்து எதிர்பாராத செய்தி உங்கள் மகிழ்ச்சியாகும்.

**சிம்மம்:** குடும்பத்தில் அமைதியை ஏற்படுத்துபவராக செயல்படுவீர்கள்.

**கன்னி:** தேவையற்ற பணம் செலவழிப்பதை தவிர்க்கவும் இல்லையேல் கடன்பெற நேரிடும்.

**துலாம்:** நீண்ட கால அடிப்படையில் நீங்கள் முதலீடு செய்தால் கணிசமான லாபம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** வீட்டில் சின்ன சின்ன பொருட்களால் உங்கள் பணம் செலவாக கூடும்.

**தனுசு:** துணைவரின் ஆரோக்கியத்தில் முறையாக அக்கறையும் கவனமும் காட்ட வேண்டும்.

**மகரம்:** பல்வேறு வழிகளில் பண வரவு இருக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கும்பம்:** புத்திசாலித்தனமாக முதலீடு செய்தாள் வெற்றி நிச்சயம்.

**மீனம்:** நுட்பங்களை சரியாகக் கையாண்டால் இன்று கூடுதல் பணம் சம்பாதிப்பீர்கள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** அஷ்டமி திதி இரவு 11:45, அதன் பிறகு நவமி திதி.

**நட்சத்திரம்:** மகம் நட்சத்திரம் இரவு 11:34, அதன் பிறகு பூரம் நட்சத்திரம்.

**யோகம்:** சித்த-அமிர்த யோகம்.

**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** உத்திராடம், திருவோணம்.

**இராகு காலம்:** காலை 09:00 AM முதல் 10:30 AM வரை.

**குளிகை:** காலை 06:00 AM முதல் 07:30 AM வரை,

**எமகண்டம்:** மதியம் 01:30 முதல் 03:00 வரை.

# மாகாண சபைத் தேர்தலை அரசு உடன் நடத்த வேண்டும்

## அரசாங்க பொது ஊழியர் சங்கம்



மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் கோரியது.

இத்தொழிற்சங்கத்தின் கல்முனை தலைமை காரியாலயத்தில் வைத்து ஊடகவியலாளர்களை நேற்று வெள்ளிக்கிழமை சந்தித்து பேசிய தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்ததாவது,


மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக மாகாணங்களுக்கான சுயாட்சி இதன் மூலம் நிலைநாட்டப்பட வேண்டும்.

மாகாண சபைகள் முறைமை இல்லாமல் செய்யப்படும் என்று நாம் நம்பவில்லை. ஆனால் அவ்வாறான அச்சம் சிறுபான்மை மக்கள் மத்தியில் முளை விட்டிருக்கிறது.

இன பிரச்சினைக்கான தீர்வு முயற்சியாக இந்திய அரசாங்கத்தின் பங்களிப்புடன் கொண்டு வரப்பட்ட மாகாண சபைகள் முறைமை தமிழர்களின் பிரச்சினைக்கான சாத்திய தீர்வாக உள்ளது.அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலமான தீர்வை தமிழ் மக்கள் எதிர்பார்த்து நிற்கின்ற நிலையில் அதை எதிர்க்க வேண்டிய அவசியம் தேவையற்றது.

மத்திய அரசாங்கத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் அமைச்சர்கள் யாரும் இல்லை என்ற விமர்சனத்தை அரசாங்கம் வெற்றி கொள்ள வேண்டியும் உள்ளது என்றார்.

# கருப்பையிலிருந்து நீக்கப்பட்ட 10 கிலோ எடையுள்ள கட்டி



(து.சிந்துஜா)

கதிர்காமப் பிரதேசத்தில் வசிக்கும் பெண்ணொருவரின் கருப்பையிலிருந்து 10 கிலோ எடையுள்ள கட்டி அறுவை சிகிச்சையின் மூலம் நீக்கப்பட்டுள்ளது. குறித்த பெண்ணுக்கு 40 வயதாகும் நிலையில் உணவு உண்ணுதல் மற்றும் சுவாசிப்பதில் ஏற்பட்ட சிரமம் காரணமாக மருத்துவ ஆலோசனையை நாடியுள்ளார். அப் பெண்ணுக்கு சத்திர சிகிச்சை செய்யும்படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பெண் நலமுடன் இருப்பதாக மகப்பேற்று வைத்திய நிபுணர் சமந்த சமரவிக்ரம தெரிவித்துள்ளார். கருப்பையில் உள்ள உயிரணுக்களின் அசாதாரண வளர்ச்சி நீர்க்கட்டிகளை உருவாக்குவதற்கு வழி வகை செய்கிறது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வயிற்றில் ஏற்படும் அசௌகரியங்களைப் புறக்கணிப்பது நோயாளியின் உயிருக்கு ஆபத்து என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வகுப்பறையில் பெயர் பலகைகள் சேதம்: பழைய மாணவர் இருவர் கைது

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி, ஹந்தரிலியத்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரங்குமுவ கனிஷ்ட மகா வித்தியாலயத்தின் ஆறு வகுப்பறைகளின் பெயர்ப் பலகைகளை அகற்றி சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பில் பாடசாலையின் முன்னாள் மாணவர்கள் இருவர் கண்டி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் (20) கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் கடந்த 10ஆம் திகதி இரவு சட்டவிரோத மதுபானம் அருந்தி பாடசாலைக்குள் பிரவேசித்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதிர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் 24 மற்றும் 19 வயதுடையவர்கள் ஆவர்.

பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் திலக் சமரநாயக்க தலைமையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## கடந்த 5 ஆண்டுகளில் செய்யப்பட்ட

# கல்வி சீர்திருத்தங்களை மீளாய்வு செய்ய தீர்மானம்

கல்வித்துறையில் கடந்த 5 ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பான பல்வேறு திட்டங்களை மீளாய்வு செய்ய கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. தேசிய கல்வி நிறுவனம் NIE உள்ளிட்ட பல்வேறு கல்வி துறைசார் நிறுவனங்களால் அண்மைக்காலமாக கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பான பல்வேறு முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்துள்ளார்.

எனினும், அந்த முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படும் நிலையை எட்டவில்லை.இந்த முன்மொழிவுகள் மற்றும் வேலைத்திட்டங்களை மீளாய்வு செய்த பின்னர், தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க புதிய கல்வி சீர்திருத்த முன்மொழிவு முன்வைக்கப்படும் என்றும் செயலாளர் மேலும் கூறியுள்ளார்.

# பஸ் சில்லில் சிக்கி வயோதிபப் பெண் பலி

(ராமு தனராஜா)

தனியார் பேருந்தின் சில்லில் சிக்குண்டு வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

62 வயதுடைய எல்லந்த களுகஹ பிட்டமாறுவ பகுதியை சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மீகாகியூலையிலிருந்து பிட்டமாறுவ நோக்கி சென்ற பேருந்து, ரோபேரி சிறி நாகாராம விகாரைக்கு அருகில் நிறுத்தப்பட்ட போது குறித்த வயோதிப் பெண் பேருந்திலிருந்து இறங்கியுள்ளார். சாரதி மீண்டும் பேருந்தை முன்னோக்கி நகர்த்திய போதே அவர் பேருந்தின் பின் சில்லில் சிக்குண்டு உயிரிழந்துள்ளதாக மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்தின் சாரதி பொலிஸ ரால் கைதுசெய்யப்பட்டு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

# முஷர்ரப் தலைமையில் புதிய கட்சி

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி முஷர்ரப் தலைமையில் புதிய கட்சியொன்று உருவாக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய தலைமுறைக் கட்சி என்ற பெயரில் உருவாக்கப்படவுள்ள குறித்த கட்சி குறித்த முக்கிய அறிவிப்பை வெள்ளிக்கிழமை பொத்துவில் நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் முஷர்ரப் அறிவித்துள்ளார்.

# பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இருக்காது

## விவசாய அமைச்சர்



பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு எதுவும் ஏற்படாது என விவசாய அமைச்சர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"அத்தியாவசிய உணவு பொருட்களின் விலை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சந்தையில் நாடு வகை அரிசிக்கு நிலவும் தட்டுப்பாடு மற்றும் விலை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி இதன் குறுகிய கால தீர்வாக இந்தியாவிலிருந்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான கூட்டு அமைப்பு பத்திரம் எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும். அரிசி இறக்குமதி செய்வதனால் தேசிய விவசாயிகள், நுகர்வோருக்கு எதுவித பாதிப்பும் இல்லை. இடைத் தரகர்களின் முறையற்ற செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது. தேசிய மட்டத்தில் விவசாயத் துறையை மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" எனத் தெரிவித்துள்ளார்.

## ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# அர்ச்சுனா கற்க வேண்டியது!

இலங்கைத்தீவின் நாடாளுமன்றம் 225 அங்கத்தவர்களைக் கொண்ட ஓரவைச் சட்டமன்றமாகும். இது பிரித்தானிய நாடாளுமன்றத்தின் தன்மையைக் கொண்டது. சபாநாயகர் அல்லது அவர் சமூகமளிக்காத போது பிரதி சபாநாயகர் அல்லது குழுக்களின் தலைவர் அல்லது குழுக்களின் பிரதித் தலைவர் சபைக்கு தலைமை தாங்குவார் என்பது மரபு.

1972 மார்ச் 22 ஆம் ஆண்டு இலங்கை பிரித்தானியாவிடம் இருந்து முற்று முழுதான இறைமை கொண்ட நாடாகியது. அதாவது குடியரசானது. அதனையடுத்து பிரதிநிதிகள் சபைக்குப் பதிலாக தேசிய அரசுப் பேரவை உருவாக்கப்பட்டது.

இதற்கு 168 பேர் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1977 ஆம் ஆண்டில் புதிய அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்டு இலங்கை நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை மற்றும் மரபுகள் சம்பிரதாயங்கள் ஆகியவற்றைப் பேணும் வகையில் நிலையியற் கட்டளைச் சட்டமும் உண்டு. ஜனாதிபதி, பிரதமர், சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு நிரந்தரமான இடத்தில் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கும். ஏனைய உறுப்பினர்களின் ஆசன இடங்கள் அவ்வப்போது மாறுபடும்.

ஒரு உறுப்பினர் இன்னுமொரு உறுப்பினரின் ஆசனத்தில் அமர்ந்திருக்கலாம். ஆனால், குறித்த உறுப்பினர் உரையாற்றும் நேரம் வரும்போது அவருக்குரிய ஆசனத்தில் இருக்க வேண்டும். அந்த ஆசனத்துக்குரிய ஒலிவாங்கியில் தான் அந்த உறுப்பினர் பேசவும் வேண்டும்.

ஆக! வரவுசெலவுத் திட்ட விவாதத்தில் நடைபெறும் அமைச்சுக்களுக்கான குழு நிலை விவாதத்தின்போது மாத்திரம் எந்த ஒரு உறுப்பினரும் வேறு ஆசனங்களில் இருந்து உரையாற்ற முடியும்.

ஆகவே, இந்த மரபுசார்ந்த நடைமுறைகள் உறுப்பினர்களுக்குரிய ஒழுக்கங்கள். உறுப்பினர்களுக்குரிய சிறப்புரிமை என்பது விசேடமானது. நாடாளுமன்றத்தில் ஒரு உறுப்பினர் எந்த விடயத்தையும் துணிந்து பேசலாம். சுட்டிக்காட்டலாம்.

ஆனால், தகவல்கள் தவறாக இருக்கக்கூடாது. தகவல்கள் தவறு என்று வேறு யாராவது ஒரு உறுப்பினர் சுட்டிக்காட்டினால் குறித்த அந்த உரையின் சில பகுதிகள் ஹன்சாட் பதிவுப் புத்தகத்தில் இருந்து நீக்கப்படும் சபாநாயகர் அதற்கு அனுமதி வழங்குவார்.

ஆகவே நாடாளுமன்ற நிலையியற் கட்டளை விதிகள் அவற்றின் கீழ் உள்ள நடைமுறைகள், விவாதம் மற்றும் சபையினுள் உறுப்பினர்களது நடத்தை என்பன சீரமைக்கப்பட்டுள்ளன.

நிலையியற் கட்டளைகளின் பிரதான நோக்கமானது, நாடாளுமன்றத்தின் ஒழுங்கமைதியுடைய, காத்திரபூர்வமான செயற்பாட்டுக்குத் தேவையான நடவடிக்கைகளை வரையறுப்பதாகும்.

நிலையியற் கட்டளைகள் நாடாளுமன்ற நடவடிக்கைகளின் முக்கியமான மூல ஆதார ஏடாகவும் மற்றும் விவாதங்களுக்கு அதிக சந்தர்ப்பம் அளிப்பனவாகவும், பரிசீலனையின் பின்பு தீர்மானங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்குகின்றன.

இப் பின்புலத்தில் இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பு தமிழ் மக்களுக்கான அதிகாரங்கள் - உரிமைகளை வழங்க மறுக்கலாம். மறுத்தும் உள்ளது. ஆட்சி அதிகாரத்தில் அதன் கொள்கைத் தீர்மானங்களில் தமிழர்கள் பங்குகொள்ளக்கூடிய ஏற்பாடுகள் இந்த அரசியல் யாப்பில் இல்லை என்பதும் பகிரங்கமானதுதான்.

ஆனால், நாடாளுமன்றம் என்பது ஒரு "அரச சபை" அதற்குரிய "மாண்புகள்" "மரபுகள்" பேணப்பட வேண்டும். எந்த ஒரு எதிரி நாட்டின் நாடாளுமன்றத்திற்குச் சென்றாலும் அங்குள்ள மரபுகளை பேண வேண்டியது கட்டாயம். அது ஒரு அரசியல் பண்புடன் கூடிய நாகரிகம்.

ஏதிர்த்தரப்பு உறுப்பினர்களுடன் வாதிடும்போதுகூட நாகரிகம் உண்டு. வார்த்தைகள் ஏற்புடையதாக இருக்க வேண்டும். ஒருவர் சபைக்குச் சமூகமளிக்காத நேரத்தில் அவரைப் பற்றிப் பேசுவதுகூட நாடாளுமன்ற மரபல்ல.

இவ்வாறானதொரு கட்டமைப்பு உள்ள நிலையில் புதிதாகத் தெரிவான உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா, 10 ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு கூடியபோது எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார்.

அது முதலாவது அமர்வுதான். புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட முன்னமே ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரைக்காக முதலாவது அமர்வு கூடிய முறையும் கேள்விக்குரியதுதான்.

ஆனாலும், மரபு பற்றிய புரிதல் என்பது மிக முக்கியமானது. "அரச சபை" என்றால் நிச்சியமாக ஆசன ஒதுக்கீடுகள் இருக்கும் அதுவும் எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனம் பிரத்தியேகமானது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று.

அதுவும் அனுபவமுள்ள நாடாளுமன்ற படைக்கல உதவி சேவிதர்கள் அது பற்றி விளக்கமளித்தபோதும் அதனை மறுத்துரைத்த அந்த உறுப்பினர், அதற்கு வழங்கிய விளக்கம் அரசியல் பண்பல்ல. பல மூத்த உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தின் மாண்புக்கு மாறாகச் செயற்பட்டிருக்கின்றனர் என்பது வேறு. ஆனால், போரினால் பாதிக்கப்பட்டு இன்றுவரை அரசியல் விடுதலை கோரி மெதுமெதுவாகச் சிதைவடைந்து வரும் ஒரு சமூகத்தின் புதிய பிரதிநிதியாக சபைக்குள் வந்த ஒரு புதிய உறுப்பினர் அநாகரிகமாக நடந்துகொள்வதானது வாக்களித்த மக்களை மேலும் தலைகுனிய வைக்கிறது.

1983 ஆம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இருந்து உருவாக்கப்பட்ட சட்ட சபைகள் மற்றும் 1948 இன் பின்னரான நாடாளுமன்றங்களில் மாபெரும் தமிழ் சட்ட மேதைகள் உறுப்பினர்களாக இருந்த இடத்தில் சில தமிழ் உறுப்பனர்கள் நடந்துகொள்ளும் முறை வெட்கக்கேடானது.

2004 ஆம் ஆண்டு ஈழவேந்தன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது தனது எதிர்க்கட்சி ஆசனத்தை விட்டு அரச தரப்பு ஆசனங்களிலும் மாறி அமர்ந்த கதைகள் உண்டு. ஆனால் ஈழவேந்தனை அறிவுசார் உறுப்பினராக ஏனைய சிங்கள உறுப்பினர்கள் மதிப்புக்கொடுத்திருந்தனர்.

ஈழவேந்தன் வயது மூப்பினால் அவ்வாறு செயற்படுகிறார் என்ற வாதங்கள் அன்று இருந்தன. அப்போது சபாநாயகராக இருந்த வி.ஜே.மு லொக்குபண்டார ஈழவேந்தனின் ஆங்கில மொழி உரைகளை செவிமடுத்து அதற்கு மேலும் பொருள் விளக்கம் கேட்டதையும் மறுப்பதற்கில்லை.

நாடாளுமன்றத்தில் வரப்பிரசாதங்கள் உண்டு. சிறப்புரிமைகள் உண்டு என்பதற்காக ஒவ்வொரு உறுப்பினர்களும் தமக்கு வாக்களித்த மக்களின் சுயமரியாதையை அவமதிக்க முடியாது. அதுவும் புதிய தமிழ் உறுப்பினர்களின் செயற்பாடுகள் முற்போக்கான மற்றும் அரசியல் அபிலாஷை நோக்கில் இயங்க வேண்டியது அவசியமானது. இது ஒவ்வொரு தமிழ் உறுப்பினர்களுக்கும் சமர்ப்பணம்.

# மருத்துவர் ஷாபிக்காக ஊடகங்கள் ஆதரவு குரல் எழுப்பாதது ஏன்..?

## நூல் வெளியீட்டு விழாவில் கண்டனம்

அருள் சத்தியநாதன்

சில தினங்களுக்கு முன்னர் வெளியான நீதிமன்றத் தீர்ப்பில் மருத்துவர் ஷாபி மீதான அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் அவர் விடுவிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. நம்ப முடியாத குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டபோது ஊடகங்கள் அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தன. அவை விஞ்ஞான மருத்துவ ரீதியாக சாத்தியமானவை தானா என்பதை வெளிப்படுத்த எந்த ஊடகமும் முன்வரவில்லை என கொழும்பில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்திருந்தார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றிய தனது அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஷிராணி திசாநாயக்க எழுதியுள்ள "கெட்டலைசிங் குட் கவர்னன்ஸ் த்ரூ நெஷனல் மீடியா" (Catalyzing Good Governance through National Media) என்ற நூல் வெளியீட்டு விழா கடந்த ஏழாம் திகதி கொழும்பு கதிர்காமர் நிலையத்தில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் மருத்துவர் ஷாபி விவகாரத்தில் ஊடகங்கள் தமது நியாயத்தின் பக்கம் நிற்கும் கடமையை ஆற்றத் தவறியிருந்தன என்பதை சுட்டிக்காட்டினார்.

ஷாபி மீது உள்நோக்கங்கள் கொண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதால் தனிப்பட்ட ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் அவர், பெரிதும் பாதிக்கப்பட்டார். அவரது குடும்பம் வெளியே தலைகாட்ட முடியாத நிலைக்கு ஆளானதோடு அவரது பிள்ளைகளின் கல்வியும் பாதிக்கப்பட்டது. பிரசவத்துக்கான சிகிச்சை செய்யும் போது கருத்தடை சிகிச்சை செய்வது நடைமுறை சாத்தியமா என்பதை எந்த ஊடகமும் ஆய்வுக்கு உட்படுத்தவில்லை. உள்ளாடைகளிலும், கொத்து ரொட்டியிலும் கருத்தடை மாத்திரைகளை கலந்து கொடுத்தால் அதை உடல் ஏற்றுக் கொள்ளுமா என்பது குறித்து விஞ்ஞானபூர்வமான விளக்கங்களைப் பெற்று வெளியிடுவதற்கு ஊடகங்கள் முன்வரவில்லை என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் திறப்புவிழாவில் கலந்து கொண்ட அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன, ரூபவாஹினி சத்யவாஹினியாகத் திகழ வேண்டும் என்று குறிப்பிட்டதை பாக்கியசோதி நினைவு கூர்ந்தார். தேசிய ஊடகங்கள் நல்லாட்சிக்கு எவ்வாறு உறுதுணையாக இருக்க முடியும் என்பதை கருப்பொருளாகக் கொண்ட இந்த ஆங்கில நூலை எழுதியுள்ள ஷிராணி திசாநாயக்க, சுதந்திர ஊடகமாக இயங்கத் தொடங்கிய ரூபவாஹினி நிலையம், பக்கச் சார்பான அரசியலுக்குள் சிக்கி எவ்வாறு மக்களின் நன்மதிப்பை படிப்படியாக இழந்தது என்பதை இந்நூலில் விளக்கியுள்ளார். இதில் கூறப்பட்டுள்ளவை ஏனைய அரச ஊடகங்களுக்கும் பொருந்தும் எனவும் ஒரு நல்லாட்சியை நாட்டில் ஏற்படுத்துவதற்கு அரச ஊடகங்களின் பங்களிப்பு அவசியம் என்பதால் அவை சுதந்திரமாக செயல்படுவதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும் எனவும் இங்கே கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

தொடர்ச்சியான அரசியல் தலையீடுகள், முழுமையாக அரசியல்மயப்படுத்தப்பட்டமை, தகுதியற்றவர்களின் நியமனங்கள் என்பனவே ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தர மற்றும் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் என்று இந்நூலில் தெரிவித்திருக்கும் நூலாசிரியர், ஒரு அமைச்சரின் கீழ் வரக்கூடிய தகவல்துறைக்குக் கீழிருந்து அரச ஊடகங்கள் செயலாற்றும் வரை அவற்றால் சுதந்திரமாக செயல்படமுடியாது என்றும் அரச ஊடகங்கள் ஒரு தனி சுதந்திர அமைப்பொன்றின் கீழ் கொண்டு வரப்படுவது அவசியம் என்றும் குறிப்பிடுகிறார். நல்லாட்சி என்ற மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு சுதந்திர தேசிய ஊடகங்களினால் உந்து சக்தியாக விளங்க முடியும் என்பது இந்நூலின் கருப்பொருளாக உள்ளது.



இந்நூல் வெளியீட்டு விழாவில் பாக்கியசோதி சரவணமுத்து, காமனி கொரயா நிதியத்தின் பணிப்பாளர்களான கலாநிதி ஹர்ஷா அதுருபான, ரவிநாத் ஆரியசிங்க மற்றும் காமனி கொரயா நிதியத்தின் தலைவர் லொயிட் பெர்னாண்டோ ஆகியோருடன் ஏராளமான பிரமுகர்களும் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர். ரூபவாஹினி நிறுவனத்தை விமர்சிக்கும் வகையில் அமைந்துள்ள இந்நூலின் முதல் பிரதியை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவரான கலாநிதி செனவிரத்ன திசாநாயக்க பெற்றுக் கொண்டதோடு, நன்றி தெரிவித்து உரையாற்றுகையில், நிலைமைகளை மாற்றுவதற்கு முடிந்த அளவில் செயலாற்றுவேன் எனக் குறிப்பிட்டது, முக்கியமான மாற்றம் என சபையோரால் கவனிக்கப்பட்டது.

# அரிசி இறக்குமதி நிரந்தர தீர்வு அல்ல

கிழக்கத்தேய நாடுகளின் தானியக் களஞ்சியம் என இலங்கை ஒருகாலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த நாட்டில் போதுமான தானியங்கள் சேமிக்கப்படுகின்றன அல்லது உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதே அதனால் அர்த்தப்படுகிறது. அதற்கு ஊவா வெல்லஸ்ஸே மேலும் ஒரு சான்றாகும்.

எனினும், காலப்போக்கில் அரிசியை தங்கள் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ள வேண்டிய நெருக்கடியை நாட்டு மக்கள் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தகவல்களின்படி நாட்டில் மாதாந்த அரிசியின் தேவை 200,000 மெட்ரிக் டொன்களாகும். அதன்படி, ஆண்டுக்கு 24 இலட்சம் மெட்ரிக் டொன் அரிசி தேவை. ஒரு நபருக்கு அரிசி நுகர்வு ஆண்டுக்கு 107 கிலோ மட்டுமே. அதாவது வருடத்திற்கு 100 கிலோவிற்கும் அதிகமான அரிசியை உட்கொள்ளும் நுகர்வோர் நாட்டில் உள்ளனர்.

இவ்வாறு அரிசியின் தேவை அதிகரித்துள்ளதால், அரிசி விலை பலரின் வாழ்வாதாரத்தை வெகுவாக பாதித்துள்ளது.

எந்த ஒரு பொருளுக்கும் தட்டுப்பாடு ஏற்படுவதும், இதன் காரணமாக விலை உயருவதும் இலங்கையில்



சகஜம்.

தேவைக்கு ஏற்ப விநியோகம் இல்லாதபோது பற்றாக்குறை உருவாகிறது. அதுதான் இன்று அரிசிக்கும் நடந்துள்ளது.

நம் நாடு அரிசியில் தன்னிறைவு அடைந்துள்ளது என்பது அரசியல் மேடைகளில் நாம் அடிக்கடி கேட்கும் கருத்து. அப்படியிருக்கையில் எப்படி அரிசி தட்டுப்பாடு ஏற்படும் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இது பெரிய அளவிலான அரிசி ஆலைகளால் உருவாக்கப்பட்ட செயற்கை பற்றாக்குறை என்பது அண்மையில் வெளிப்படையாகியிருந்தது.

அரசாங்கம் உர மானியம் வழங்குவதுடன் உரங்களின் விலையைக் குறைத்ததாலும், அதிக மகசூல் பெறக்கூடிய புதிய ரக விதைகளை அறிமுகப்படுத்தியதாலும், புதிய நுட்பங்களை அறிமுகப்படுத்தியதாலும், சில நெல் விளையும் பிராந்தியங்கள் அதிக மகசூலைப் பதிவு செய்துள்ளன.

உதாரணமாக, அம்பாந்தோட்டை, உடவலவ, அம்பாறை, பொலன்னறுவை, இரத்தினபுரி போன்ற பிரதேசங்களில் ஒரு ஹெக்டேர் அரிசியின் விளைச்சல் 12 மெட்ரிக் டொன்னைத் தாண்டியுள்ளது.

இவை உண்மையாக இருந்தால், இன்று அரிசி தட்டுப்பாடு என்பது சாத்தியமில்லை. நாட்டு அரிசி உட்பட பல வகையான அரிசிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால், சில பல்பொருள் அங்காடிகள் நுகர்வோருக்கு வழங்கப்படும் அரிசியின் அளவை மட்டுப்படுத்தியுள்ளன.

மேலும் சில கடைகளில் தற்போதைய விலைக்கு அரிசி விற்க முடியாததால் அரிசி விற்பனை செய்வதை தவிர்த்து வருகின்றனர். தற்போது அரிசிக்கு தட்டுப்பாடு நிலவி வருவதால் விவசாயிகள் பலர் அதனை மொத்த சந்தைக்கு விற்பனை செய்யாமல் தங்களின் உணவு தேவைக்காக வைத்திருந்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் சந்தையில் அரிசி தட்டுப்பாடு மேலும் மோசமடைவதை தடுக்க முடியாது.

இலங்கையில் அரிசியின் விலையை கட்டுப்படுத்துவது, அரிசியை சந்தைக்கு விடுவிப்பது, நெல் கொள்முதல் விலையை தீர்மானிப்பது, நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுத்துவது இலங்கையில் உள்ள பாரிய அரிசி ஆலைகளின் உரிமையாளர்களிடம்தான் உள்ளது. நாட்டின் முக்கிய நுகர்வுப் பொருளான அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தும் ஏகபோக அதிகாரம், அரிசி ஆலை உரிமையாளர்களின் கைகளில் இருக்கும் வரை இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமா என்பது கேள்விக்குறிதான்.

எவ்வாறாயினும், தற்போது அரிசியை இறக்குமதி செய்யவுள்ளதாக அரசாங்கம் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது. குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட அதே தினத்தில் சுமார் 22 இலட்சம் மெட்ரிக் டொன் அரிசி மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டது.

இவ்வாறான விடயங்களால் பாதிக்கப்படுபவர்கள் விவசாயிகளும், நுகர்வோருமே. ஆகவே, அரிசி ஆலை உரிமையாளர்களால் இவ்வாறு செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ள அரிசி தட்டுப்பாட்டுக்கு அரசாங்கம் உடனடி தீர்மானம் மேற்கொள்ள வேண்டும்.

உற்பத்திக்கான அடிப்படை இருந்தும் இறக்குமதியை தீர்வாக மேற்கொள்வது நிரந்தர தீர்வாக அமையாது.



# பதவிப் பிரமாணம் செய்த பிரதி அமைச்சர்கள்



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதியமைச்சர்கள் 29 பேர் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் பதவி பிரமாணம் செய்து கொண்டனர்.



பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சராக சுந்தரலிங்கம் பிரதீப்.



வெளிவிவகார வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சராக அருண் ஹேமச்சந்திரா



தேசிய ஒருமைப்பாடு பிரதி அமைச்சராக முஹம்மது முனீர்

## ஜனாஸா நலன்புரிச் சங்கத்துக்கு மற்றுமொரு வாகனம் அன்பளிப்பு

### சகோதர இன நோயாளர்களுக்கும் சந்தர்ப்பம்






எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் ஜனாஸா நலன்புரிச் சங்கத்துக்கு மேலதிகமாக நோயாளிகளை ஏற்றி செல்கின்ற வாகனமொன்று அன்பளிப்பு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த வண்டி முஸ்லிம்கள் மாத்திரமல்ல சகோதர இன நோயாளர் களையும் ஏற்றிச் செல்வதற்கும் பயன்படுத்தப்படவுள்ளது.

புத்தளம் ஜனாஸா நலன்புரிச் சங்கத்தினரிடம் ஏற்கனவே ஜனாஸாக்களை ஏற்றி செல்கின்ற வாகனம் சேவையில் இருக்கின்ற நிலையிலையே இந்த புதிய வாகனமும் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் கரைத்தீவு பிரதேசத்தை சேர்ந்த பெயர் சொல்ல விரும்பாத சமூக சேவையாளரும், தனவந்தருமான ஒருவரினால் இந்த புதிய வாகனம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

நோயாளிகளை ஏற்றி செல்கின்ற வாகனத்தை புத்தளம் ஜனாஸா நலன்புரி சங்கத்தினரிடம் உத்தியோபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (22) ஜும்ஆ தொழுகையை தொடர்ந்து புத்தளம் முஹியத்தீன் ஜும்ஆ பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம் நவவி, இந்த நோயாளிகளை ஏற்றி செல்கின்ற வாகனத்துக்கான சாவியை உத்தியோபூர்வமாக ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் தலைவரும், புத்தளம் காசிமிய்யா அரபுக் கல்லூரியின் அதிபருமான அஷ்ஷெய்க் எச்.எம்.மின்ஹாஜ் இஸ்லாஹியிடம் கையளித்தார். புத்தளம் ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் சகல அங்கத்தவர்களும் இதில் கலந்துகொண்டிருந்தார்கள்.

ஜனாஸா நலன்புரிச் சங்கத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இந்த வாகனமானது முஸ்லிம்கள் மாத்திரமல்ல சகோதர இன நோயாளர்களையும் ஏற்றிச் செல்வதற்கும் பயன்படுத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## உணவு ஒவ்வாமை காரணமாக ஒன்பது சிறுமிகள் ஆஸ்பத்திரியில்

சோறுடன் மரவள்ளிக்கிழங்கை சாப்பிட்டதால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக ஒன்பது சிறுமிகள் கண்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாக கண்டி மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

தலத்துஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹாரகமவில் அமைந்துள்ள மகளிர், சிறுவர் பராமரிப்பு முகாமில் இருந்த 09 சிறுமிகளே இவ்வாறு ஒவ்வாமை காரணமாக கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தலத்துஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கவிதைப் போட்டியில் அன்பாலுக்கு முதலிடம்

றிஸ்வான் சாலிஹு

கலாசார அமைச்சு மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலகம் இணைந்து நடாத்திய கவிதைப் போட்டியில் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் எம்.எப். அன்பால் முதலிடம் பெற்றார்.

அண்மையில் பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. கவிதைப் போட்டியில் முதலாமிடம் பெற்ற மாணவன் எம்.எப்.அன்பாலுக்கு அக்கரைப் பற்று பிரதேச செயலாளர் ரீ.எம். எம்.அன்சாரினால் சான்றிதழ் வழங்கப்பட்டது. அருகில் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம் உட்பட உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



## இந்து கல்லூரியில் ‘TALENT EXPO 2024’ கண்காட்சி

வத்தளை அருண் மாணிக்கவாசகம் இந்து கல்லூரியில் ‘TALENT EXPO 2024’ கண்காட்சி பாடசாலை வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது பாடசாலை மாணவர்கள் தங்களின் திறமைகளை மிகவும் சிறப்பான முறையில் வெளிப்படுத்தியிருந்தனர்.

பிரதி அதிபர் ஆர். செல்வகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கல்வி அமைச்சின் உதவிப் பணிப்பாளர் (ஆரம்பப் பிரிவு) திருமதி சகுந்தலா மனோகரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக அருண்பிரசாத் பவுண்டேசனின் நிறுவுனர் எம்.பிரபாகர் கலந்துகொண்டதுடன், அதிபர் மூவேந்தன் உள்ளிட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டிருந்தனர்.





## கல்முனையில் போதைப்பொருள் பொதிகளுடன் இருவர் கைது

பாறுக் ஷிஹான்

ஐஸ் போதைப் பொருள்களை நீண்ட காலமாக சிறுபொதி செய்து வியாபாரம் செய்து வந்த இரண்டு சந்தேகநபர்களை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சந்தேகத்திற்கிடமாக நடமாடிய இருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது கல்முனைக்குடியில் நபரிடம் 970 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் மற்றுமொரு நபரிடம் 870 மில்லிகிராம் போதைப் பொருளுடனும் கைதாகினர்.

கைதான 2 சந்தேகநபர் களையும் கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், இந்த கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ். ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது.

தற்போது, அண்மித்த சில நாட்களாக இப்பகுதியில் ஐஸ் போதைப்பொருள்கள் அதிகளவாக மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தென்பகுதியில் மீண்டும் தலையெடுக்கும் இனவாத கோஷங்கள்

நாமல் ராஜபக்சவின் எக்ஸ் தளத்தில் விமர்சிக்க பட்டிருந்த பதிவு பல கேள்விகளை எழுப்பியுள்ளது.




**பொதுமக்களின் காணிகளை கையளிப்பது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பது தேவையற்ற அச்சம் ..!**

கனூஷியா புஷ்பகுமார்

இலங்கைத்தீவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் வடக்குக் கிழக்குத் தமிழர்களின் அரசியல் விடுதலைக்குத் தீர்வு கிடைப்பதில்லை. அத்துடன் மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம் சமூகம் ஆகியவற்றை மையப்படுத்தி இனவாத கோஷங்கள் எழுப்பப்படுவதும் வழமை. ஒரு நாடு ஒரு மக்கள் என்று சிங்கள அரசியல் தலைவர்கள் கூறும் சந்தர்ப்பங்களில் எல்லாம் தங்கள் தனித்துவம் சுயமரியாதை மற்றும் மரபுவழி உரிமைகள் பற்றி தமிழர்கள் கவ லைப்படுவதும் உண்டு.

இந்த நிலைமை ஜேவிபியை மையப் படுத்திய தேசிய மக்கள் சக்தியின் புதிய ஆட்சியிலும் தொடருகின்றது. இவர்கள் என்னதான் சோசலிசம் சமத்தும் என்று கூறினாலும் எதிர்கட்சிகளின் பரப்புரை குறிப்பாக மிகச் சமகாலத்தில் ஆளும் கட்சியாக இருந்து தற்போது எதிர்க்கட்சியாக மாற்றியுள்ள சில பிரதான கட்சிகள் மீண்டும் இனவாத முழக்கங்களை வெளிப்படுத்துகின்றன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநா யக்க மார் தட்டுகின்ற சோசலிசம் சமத் ணதுவம் என்ற கோட்பாடு மிகவும் ஆபத்தானது என்று தமிழர்கள் கருதும் நிலையில், அந்த சோசலிசம் சமத்துவம் ஏதோ தமிழர்களுக்குத் தனிநாட்டை கொடுத்துவிடும் என்ற தொனியில் சில அரசியல்வாதிகள் புரளிகளைக் கிளப்புகின்றனர். வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிக்க அநுர அரசாங்கம் எடுக்கும் முயற்சியை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என ராஜபக்ஷ குடும்பம் கூக்குரலிட ஆரம்பித்துள்ளது.

முகநூல், எக்ஸ் தளம் உள்ளிட்ட சமூகவலைளத்தளங்களில் இனவாத முழக்கங்கள் துளிர்விட ஆரம்பித்துள்ளன. ஆனால் இதனை ஜேவிபி உணர்ந்துகொள்ள வேண்டும். போரை மையப்படுத்தியும் 2009 இற்குப் பின்னரான சூழலில் புலிகள் மீள் உருவாக்கம் என்று கூறி ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட விவகாரங்களில் ஜேவிபி ஆதரவாளர்களுக்கும் தொடர்பில்லாமலில்லை.

எவ்வாறாயினும், மிகப் பெரும் அறுதிப் பெரும்பான்மையுடன் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றுள்ள நிலையில் ஜேவிபி உள்ளிட்ட சில எதிர்க்கட்சிகள் பின்பற்றிய அதே நடைமுறையில் ஆளும் கட்சியாக இருந்து தற்போது எதிர்க்கட்சியாக மாற்றியுள்ள கட்சிகள் இனவாதத்தைத் தூ ண்ட முற்படுவது புதியதல்ல.

ஆனாலும் இனவாதத்தைத் தூ ண்டுவோர் பற்றிய எச்சரிக்கைகள் புலனாய்வுப் பிரிவினர், அரசாங்க அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளது.

கடந்த காலங்களில் அமைதியாக இருந்த சில மதத் தலைவர்கள், இன வாத அரசியல்வாதிகளும் இவ்வாறு இனவாதத்தை தூண்டும் செய்றபாடுகளில் ஈடுபட்டு வருவதாக அறியப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜ பக்சவின் உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் விமர்சிக்கப்பட்டிருந்த பதிவு காரணமாக இவ்விடயம் தொடர்பில் மேலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.எதிர்காலத்தில் பெரிய இராணுவ முகாம்கள் விடுவிக்கப்படும் என அவர் விடுத்திருந்த எச்சரிக்கையும் மேலும் சிந்தி க்க தூண்டியுள்ளது.

மேலும், நாமல் ராஜபக்சவின் எக்ஸ் தள பதிவில் “இலங்கை 30 ஆண்டு கால போரை நிறைவுசெய்துள்ள நிலையில், இன்று அனைத்து மக்களுக்கும் நிம்மதியாக வாழ முடிந்துள்ளது. வடக்கில் அல்லது தெற்கில், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அத்தியாவசியம் என அரசாங்கம் மற்றும் அரசாங்கத்தின் தலைவர்கள் மறக்கக் கூடாது ” எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, நாட்டுக்கு எதிரான சக்திகளின் சதித்திட்டங்கள் தொடர்பில் தொடர்ந்தும் அவதானம் செலுத்தப்பட வேண்டுமென பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்திருந்தார்.

அதிகளவில் பேசப்பட்டு வரும் இராணுவ முகாம்களை அகற்றுவது தொடர்பில் தவறான பல பிரசாரங்கள் இடம்பெற்று வருகின்றன. இத் தொனியே அபயதிஸ்ஸ தேரரின் கடுமையான கூற்றிலும் வெளிப்படுகின்றது.

யாழ்ப்பாணம் வடமராட்சி கார்கோவளம் பிரதேசத்தில் தனியார் காணியொன்றில் நடத்தப்பட்டு வந்த இராணுவ முகாம் ஒன்று இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அகற்ற இராணுவ தலைமையகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 8 ஏக்கர் நிலப்பரப் பைக் கொண்ட இந்தக் காணி மூன்று உரிமையாளர்களுக்குச் சொந்தமான காணியின் ஒரு பகுதியாகும், மேலும் அரசா ணங்கத்தினால் சில காலமாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் இராணுவ முகாமை காணியிலிருந்து அகற்ற தீர்மானித்துள்ளனர்.

இப்பிரதேச மக்கள் யுத்தத்தின் போது மாகாணங்களை விட்டு வெளியேறிய பின்னர், வடமராட்சி கற்கோவளம் பிரதேசத்தின் பாதுகாப்பை பேணுவதற்காக இராணுவப் பிரிவுகளை வைத்திருப்பதற்காக இந்த நிலம் கையகப்படுத்தப்பட்டது.

34 வருடங்களுக்கு முன்னர் சுவீகரிக்கப்பட்ட இந்த காணியில் பல நிரந்தர கட்டிடங்களும் அதிகளவான நிரந்தர தோட்டங்களும் உள்ள நிலையில் முகாமின் கட்டிடங்களும் தோட்டங்களும் அப்படியே இருக்கும் நிலையில் இராணுவத்தினர் மற்றும் வாகனங்களை மட்டும் அகற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர் போராட்டங்களின் பின்னர் இவ்வாறு வடக்கின் காணிகளை மீள ஒப்படைப்பது வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு நடக்கும் ஒரு நல்ல விடயமாக எடுத்துக்கொள்ள முடியும்.

எனினும், இதனை இனவாதமாக மாற்றி, சில அரசியல் தலைமைகள் அரசியல் இலாபங்களை எதிர்ப்பார்ப்பது அம்பலமாகியுள்ளது. தேர்தல் பிரசார மேடைகளில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, வடக்கில் தமிழ் மக்களின் காணிகள் மீள வழங்குவது குறித்து தன்னுடைய அரசாங்கம் அவதானம் செலுத்தும் என வாக்குறுதி வழங்கியிருந்தார். வடக்கு கிழக்கில் நாடாளுமன்ற தேர்தலில் அநுரவுக்கு கிடைத்த மக்கள் ஆதரவுக்காக அநுரா கடமைப்பட்டடுள்ளார். அதனால், காணிகள் மீள வழங்கப்படுவதை அரசாங்கத்தின் ஒரு தீர்வாக ஒப்பாசாரத்துக்காக ஏதேனும் சிறிய திட்டங்களை அவர் செய்ய முற்படக்கூடும்.

இதனை இனவாதமாக தென்பகுதியில் சிலர் பேசுகின்றனர்.

ஆகவே 76 வருடங்களாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த பாரம்பரிய கட்சிகள் இனவாதத்தை இல்லாதொழிப்பதாக அரசியல் மேடைகளில் விவரண உரை களை வழங்கியிருந்தாலும் கூட, இன வாதத்தை வைத்து அரசியல் தான் செய்து வந்தார்கள் என்ற முடிவுக்கு வர முடியும். மக்கள் மத்தியில் சமத்துவத் தை உருவாக்க வேண்டும் என்பது இதுவரையில் வந்த எந்தவொரு ஆட்சியாளரது குறிக்கோளாகவும் இருக்க வில்லை. தற்போது புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் கூட மேடைகளில் “இனவாத அரசயிலுக்கு முற்றுப்புள்ளி” என தெரிவித்தாலும் அவரது சில தீர்மானங்களில் அது நிரூபிக்கப்படவில்லை.

வடக்கு,கிழக்கு மக்கள் பல காலமாக தங்களுக்கான சுய நிர்ணய உரிமையைக் கோரி வருகின்றனர். இந்த புதிய அரசாஙகத்திலாவது இதற்கான ஒரு தீர்வு கிடைக்கப்பெறுமா என்ற கேள்வி இருந்தாலும் அதற்கு பல இனவாத அரசியல் தலைமைகள் குறுக்கே நிற்கின்றனர் என்பது மாத்திரம் பட்டவர்த்தனம்.

# நுவரெலியா கோல்ஃப் மைதானம்

## அனுமதி மறுக்கப்பட்டதால் நூதனமாக மரங்களை அழிக்க முயற்சி

# 50 மரங்களை வெட்டுவதற்கு திட்டமா?

டி.சந்ரு செ.திவாகரன்





நுவரெலியா கோல்ஃப் மைதானத்தில் அமைந்துள்ள ஐம்பது பெறுமதியான மரங்களை வெட்டுவதற்கு அல்லது அழிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் முறையான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பிரதேச செயலாளர் பிரதீப் தலன்சூரிய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

நுவரெலியாவில் 300 ஏக்கர் கோல்ஃப் மைதானத்தில் 100 வருடங்களுக்கும் மேலான கந்தி, செம்பருத்தி, சைப்ரஸ் உட்பட நுவரெலியாவிற்கே தனித்துவமான ஐம்பது மரங்களின் பட்டைகள் அகற்றப்பட்டு கறுப்பு நிறத்திலான எண்ணெய் ஒன்று ஊற்றப்பட்டுள்ளதாக நுவரெலியா வாழ் பொதுமக்கள் கூறுகின்றனர்.

இதனால், அந்த மரங்கள் காய்ந்து அழிவடையும் நிலைக்கு செல்வதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், நுவரெலியா பிரதேசத்தில் முன்னைய அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது, சுற்றுச்சூழலை அழகுபடுத்துவதற்காக நடப்பட்ட மரங்களை வெட்டுவதற்கு அனுமதி கிடைக்காத காரணத்தினால், நூதனமான முறையில் மரங்கள் அழிக்கப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த மரங்கள் மீண்டும் துளிர்க்க வாய்ப்பில்லை என வியாழக்கிழமை (21) குறித்த பகுதிக்கு சென்ற உயர் அதிகாரிகள் பரிசோதனைகளை மேற்கொண்டு தெரிவித்துள்ளனர். நுவரெலியா மாநகர சபையின் முன்னாள் மேயரும், நுவரெலியா கோல்ப் கழகத்தின் உறுப்பினருமான மஹிந்த தொடம்பேகமகே இது தொடர்பில் தெரிவிக்கையில், மரங்களை வெட்டவோ அல்லது அழிக்கவோ சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களிடமோ அல்லது தன்னிடமிருந்தோ எந்தவித அனுமதியும் பெறப்படவில்லை. நுவரெலியா கோல்ஃப் கிளப் நிர்வாகம் மரங்களை வெட்டுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. நகரின் மத்தியில் உள்ள 300 ஏக்கர் காணி நுவரெலியா மாநகரசபைக்கு சொந்தமானது. இந்த காணி நுவரெலியாவின் சுற்றுலாத்துறைக்கு பெறுமதியான அடையாளமாக காணப்படுவதாகவும், தற்போது அந்த மைதானம் கொழும்பில் வாழும் உயர்தர மக்களின் பொழுதுபோக்கிற்காக மட்டுமே பயன்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் மூத்த கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்கார வருடாந்தம் ஒரு மில்லியன் வெளிநாட்டினரை, இலங்கைக்கு வரவழைக்கும் திட்டத்தை முன்வைத்த போதிலும், கோல்ஃப் மைதானத்தின் ஒரு பகுதியை விடுவிக்க அப்போதைய அரசியல் அதிகாரங்களும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்கவில்லை என மஹிந்த தொடம்பேகமகே மேலும் தெரிவித்தார்.



# மணிப்பூரில் நடப்பது என்ன?

## மணிப்பூர் மாநிலத்தில் முப்பந்தைத்துக்கும் அதிகமான வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வாழும் நிலையில் அதிகமாகப் பாதிக்கப்படுவது பெண்கள்



து.சிந்துஜா





இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் சுமார் முப்பந்தைந்துக்கும் அதிகமான வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர்.

இதனால் அங்கு கலவரங்களுக்கும் மோதல்களுக்கும் என்றும் பஞ்சமில்லை எனக் கூறினால் சரியாக இருக்கும்.

அதன்படி, அண்மைக்காலமாக மெய்தி மற்றும் குகி என இரு சமூகங்களுக்கிடையிலான பகைமைத் தீ கடந்த வருடம் மே மாதம் முதல் கொழுந்துவிட்டு எரிந்து வருகிறது.

மணிப்பூரின் சமவெளிப் பகுதியில் மெய்தி சமூகத்தினரும் மலைப் பகுதிகளில் குகி பழங்குடியினரும் வாழ்ந்து வருகின்றனர். இதில் மெய்தி சமூகத்துக்கு உத்தியோகப்பூர்வ பழங்குடியின அந்தஸ்த்து வழங்கப்பட வேண்டும் எனும் கோரிக்கைக்கு குகி இன மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து மணிப்பூரில் பதற்றம் அதிகமானது.

கடந்த வருடம் மே மாதத்தில் குகி இனத்தைச் சேர்ந்த பெண்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு ஆடையின்றி ஊர்வலமாக இழுத்துச் செல்லப்பட்ட சம்பவங்கள் நடந்தன.

மெய்தி இனத்தைச் சேர்ந்த இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட இக் கொடூரமே வன்முறை மேலும் அதிகரிக்க காரணமாக மாறியது. அவ்வப்போது இரு தரப்பினருக்கும் இடையில் வன்முறைகள் வெடிக்கும். இம் மோதலில் இதுவரையில் சுமார் 200 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். அதன்படி, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குகி இன மக்கள் ட்ரோன்கள் மூலம் வெடிகுண்டு தாக்குதல்களை நடத்தினர்.

அதிலிருந்து மீண்டும் கலவரம் வெடித்து சில தினங்களுக்கு முன்னர் குகி இன மக்களின் கிராமத்துக்குள் நுழைந்த சில மர்ம நபர்கள் வீடுகளுக்குள் புகுந்து தாக்குதல்கள் நடத்தினர். அத்துடன், விடாமல் ஜய்ரவான் கிராமத்தைச் சேர்ந்த 31 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரை அக்கும்பல் கூட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி கொலை செய்ததோடு, உடலை எரித்துவிட்டு தப்பிச் சென்றதாகவும் அப் பெண்ணின் கணவர் தரப்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் குறித்த பெண் மூன்று குழந்தைகளின் தாய் என தெரிய வந்துள்ளது.

இந்த ஆறு பேரும் மெய்தி இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போராட்டத்தில் பா.ஜ.க அமைச்சர்களுக்கு சொந்தமான வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

அதேபோல் கடந்த 11 ஆம் திகதி மீண்டும் தலைதூக்கிய வன்முறையால், அன்றைய தினம் இரவு குகி பழங்குடியினத்தைச் சேர்ந்த 10 பேரை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றனர்.

இதையடுத்து குகி பழங்குடியின மக்கள் தமது தாக்குதல்களை தொடர்ந்துள்ளனர்.

ஜிரிபாம் மாவட்டத்தில் மூன்று குழந்தைகள் மற்றும் மூன்று பெண்கள் என ஆறு பேர் கடத்தப்பட்டு அவர்கள் கொலை செய்யப்பட்டு அவர்களது உடல்கள் ஜிரி ஆற்றில் கைப்பற்றப்பட்டுள்ளன. இதனால் மக்கள் வீதி மறியல்களில் ஈடுபட்டதோடு தொடர்ந்தும் அங்கு பதற்ற நிலை ஓய்ந்தபாடில்லை. இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்ட 10 பேரின் உடல்களும் குகி இன மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒப்படைக்கப்பட்ட உடல்களை தகனம் செய்வதற்கு சவப்பெட்டி ஊர்வலம் நடத்தினர். இதையடுத்து மணிப்பூரில் வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கு என்று சுமார் 50 படைப் பிரிவுகளைக் கொண்டு 5000 துணை இராணுவப் படையினரை விரைவில் அனுப்ப உள்துறை அமைச்சு முடிவெடுத்தது.

இவ்வாறு மணிப்பூர் பிரச்சினை ஒரு பக்கம் தலை தூக்கியிருக்கும் வேளையில் அதனால் ஏற்படும் உயிரிழப்புக்களும் அதிகரித்து வருகின்றன.

இதற்கு தீர்வு காணும் வகையில் பல அரசியல் தலைவர்கள் தங்களின் ஆலோசனைகளையும் யோசனைகளையும் முன்வைத்து வருகின்ற நிலையில், பிரதமர் மோடி இவ் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர். ஒரு சாரார் சில அரசியல்வாதிகள் மணிப்பூர் வன்முறையை முடிவுக்குக் கொண்டுவராமல் அதன் மூலம் அரசியல் இலாபம் காண்பதாக குற்றம் சாட்டி வருகின்றனர்.

அதேபோல் 20 வருடங்களுக்கு முன்பு ஆட்சியில் இருந்தபோது காங்கிரஸ் முகம்கொடுத்த மோசமான தோல்வியின் பாதிப்புகளிலிருந்து இன்னமும் மணிப்பூர் விடுபடவில்லை என பாஜக தேசிய தலைவரும் மத்திய அமைச்சருமான ஜெ.பி. நட்டா குற்றம் சாட்டியுள்ளார்.

இந்நிலையில், மணிப்பூரில் இடம்பெறும் குற்றச் சம்பவங்களை தடுத்து நிறுத்தும் நோக்கில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு இரு தரப்பினருக்கு இடையிலான இவ் வன்முறையினால் பல பெண்கள் மற்றும் குழந்தைகளின் உயிரிழப்புக்கள் அதிகமாகி வருகின்மை கவலைக்குரிய விடயம்.

சுமார் 18 மாதங்களாக இடம்பெற்று வரும் இவ் வன்முறைச் சம்பவங்களை அரசு நினைத்திருந்தால் முடிவுக்கு கொண்டு வந்திருக்கலாம். ஆனால், அதற்கான பேச்சு வார்த்தைகளும் ஒருவர் மீது இன்னொருவரால் சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்களை மட்டுமே பார்க்கக்கூடியதாக இருக்கிறதே தவிர, இதற்கான தீர்வு இதுவரையில் எட்டப்படவில்லை.

இக் கலவரத்தில் இன்னும் எத்தனை உயிர்கள் பலியாகப் போகிறதோ?

ஒருவேளை இரண்டு தரப்பினரையும் மோதவிட்டு அதன் மூலம் அரசியல் இலாபம் எட்டப்படுகிறதா? மணிப்பூர் வன்முறையினால் இன்னும் பிணவறையில் உரிமைக் கோரப்படாமல் எத்தனை உடல்கள் கிடக்கின்றன?

இவற்றுக்கெல்லாம் யார் தீர்வைப் பெற்றுத் தருவார்கள்?

# அதானி - மோடி உறவு

# அமெரிக்காவின் குற்றப் பத்திரிகைத் தாக்கல்

## ரசியாவின் இந்திய ஆதரவுப் பின்னணி பற்றிய கேள்விகள்

பாலகணேஷ் டிலுக்ஷா

அமெரிக்காவில் மோசடி செய்ததாக உலக கோடீஸ்வரர்களின் ஒருவரான கௌதம் அதானி மீது நியூயோர்க் சமஸ்டி நீதிமன்றத்தில் (Federal Court) கடந்த புதன்கிழமை அமெரிக்கா வழக்கு தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கௌதம் அதானி மற்றும் சாகர் அதானிக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அமெரிக்க வழக்கறிஞர்கள் அந்த பிடியாணையை வெளிநாட்டு சட்ட அமலாக்க அதிகாரிகளிடம் ஒப்படைக்க திட்டமிட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

**அதானி மீதான குற்றச்சாட்டுக்கள் என்ன?**

அதானி குழுமத்திற்குச் சொந்தமான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனமான அதானி கிரீன் எனர்ஜி லிமிடெட் நிறுவனத்திற்கு பில்லியன் டொலர் மதிப்புள்ள ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக இந்திய அரச அதிகாரிகளுக்கு 250 மில்லியன் டொலர்களுக்கு மேல் இலஞ்சம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அமெரிக்காவில்

இலஞ்சம் எப்படி கொடுக்கப்பட்டது என்பதும் அதில் எழுதப்பட்டு மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு, புலனாய்வு முகவர்கள் அமெரிக்காவில் சாகர் அதானியை சந்தித்து அவரிடமிருந்த மின்னணு சாதனங்களை கைப்பற்றியதாகவும் தகவல்கள் வெளிகாகியுள்ளன.

மேலும் அதில் முக்கிய ஆதாரங்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

**குற்றாச்சாட்டுகளுக்கு அதானி குழுமம் கூறுவது என்ன?**

அமெரிக்க நீதித்துறையின் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை என்று அதானி குழுமம் மறுப்பு வெளியிட்டுள்ளது.

அதானி குழுமம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

அமெரிக்க நீதித்துறை கூறுவதைப் போல குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் வரை, குற்றம் சுமத்தப்பட்டவர் நிரபராதி.

இந்த வழக்கை சட்டரீதியாக எதிர்கொள்வோம்.

வெளிப்படைத்தன்மை மற்றும் ஒழுங்குமுறை இணக்கத்தைப் பின்பற்றுவதில் எப்போதும் உறுதியாக உள்ளோம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தங்கள் பங்குகளை வைத்திருப்பவர்கள், பங்குதாரர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அதானி குழுமம் அனைத்து சட்டங்களுக்கும் முழுமையாக இணங்கியிருக்கும் என உறுதியளித்துள்ளது.

**குற்றப்பத்திரிக்கை தாக்கலால் பேரிடியை சந்தித்த அதானி குழுமம்**

இந்தியாவின் பணக்காரர்களின் வரிசையில் முக்கியப் புள்ளியாக திகழும் 62 வயதான கௌதம் அதானிக்கு இந்த குற்றச்சாட்டு பெரும் பின்டைவாகும்.

இதன் தாக்கம், துறைமுகங்கள், விமான நிலையங்கள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நிறுவனம் என அவரது வணிகத்தில் பெரிதும் தாக்கம் செலுத்தலாம் என பொருளியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து வழக்கு தாக்கல் செய்யப்பட்ட 24 மணித்தியாலங்களுக்குள் அதானி குழும பங்குகள் 10 சதவீதத்திற்கும் அதிகமாகச் சரிந்தன. தனது சந்தை மூலதனத்தில் சுமார் 30 பில்லியன் அமெரிக்க டொலர்களை அதானி குழுமம் இழந்துள்ளது.

துறைமுகம், விமான நிலையங்கள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் என நீண்டிருக்கும் அதானி குழுமத்தின் பங்குகள் வெள்ளிக்கிழமை காலையிலும் 10 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது.

மேலும் பிடியாணையைத் தொடர்ந்து கென்யாவில் அதானி நிறுவனம் முன்னெடுக்க இருந்த விமான நிலைய விரிவாக்கம் மற்றும் மின்சார திட்டம் இரத்து செய்யப்பட்டுள்ளது. விமான நிலையத்தை விரிவுபடுத்துவதற்கான செயன்முறையை இரத்து செய்யுமாறு கென்ய ஜனாதிபதி வில்லியம் ரூட்டோ உத்தரவிட்டார்.





கென்யாவின் நைரோபி விமான நிலைய விரிவாக்கத்திற்கு 1.85 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்ய அதானி நிறுவனம் திட்டமிட்டிருந்தது.

ஆப்பிரிக்காவின் பரபரப்பான விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கு பதிலாக அதனை 30 ஆண்டுகள் குத்தகைக்கு எடுக்கவும் திட்டமிடப்பட்டது.

ஆனால், விமான நிலையத்தை அதானி குழுமத்திற்கு 30 ஆண்டுகள் குத்தகைக்கு விடும் ஒப்பந்தத்திற்கு கென்ய உயர்நீதிமன்றம் தடை விதித்திருந்தது.

இந்நிலையில் மேலும் பல நாடுகள் அதானியின் முதலீட்டு திட்டங்களை இரத்து செய்யகூடும் என்பதில் சந்தேகமில்லை.

**இந்தியாவிற்குள் அரசியல் மோதல்?**

இந்தியாவின் பொருளாதாரம், நாட்டின் முன்னணி உள்கட்டமைப்பு கௌதம் அதானியுடன் ஆழமாக பின்னிப்பிணைந்துள்ளது.

இந்த குற்றச்சாட்டுக்கள் இந்தியாவிற்குள் அரசியல் மோதலை உருவாக்கியுள்ளது. மோடியின் ஆளும் பாரதிய ஜனதா கட்சிக்கு எதிரான இந்திய தேசிய காங்கிரஸ்,

அதானியின் நிறுவனங்கள் மீது நாடாளுமன்ற நிதிக்குழுவின் விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளது.

> **அதானி மீதான நிதி மோசடி குற்றச்சாட்டுக்கள் இந்தியாவிற்குள் அரசியல் மோதலை உருவாக்கியுள்ளது மோடியின் ஆளும் பாரதிய ஜனதா கட்சிக்கு எதிரான இந்திய தேசிய காங்கிரஸ், அதானியின் நிறுவனங்கள் மீது நாடாளுமன்ற நிதிக்குழுவின் விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளது.**

முக்கியமான உள்கட்டமைப்பில் கௌதம் அதானியின் முதலீடுகள் இந்தியப் பொருளாதாரத்தில் ஒரு சக்தியாக மாறியிருந்தாலும்,

அவருடைய அரசியல் தொடர்புகளும் அவரை வேறுபடுத்திக் காட்டியுள்ளன. அதானியின் பொருளாதார திட்டங்கள் முக்கியமானவை. ஆனால் அவருடைய அரசியல் தொடர்புகள் சர்ச்சைக்குரியது.

குறிப்பாக அதானிக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான தனிப்பட்ட உறவு உள்ளது, இந்த உறவு அதானியின் நிறுவனத்திற்கு இலாபகரமான ஒப்பந்தங்களைப் பெற உதவியது.

சில சந்தர்ப்பங்களில், நிறுவனம் விமான நிலையங்களின் கட்டுப்பாட்டைப் பெறுவதற்கு ஏற்ப ஏல விதிகளை மோடி அரசாங்கம் மாற்றியமைத்துமுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் நெருங்கிய நண்பரான கௌதம் அதானி தனது அரசியல் தொடர்புகளின் மூலம் பயனடைவதாக நீண்டகாலமாக அவர்மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் தற்போது எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் இந்தியாவின் அரசியல் பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்தும் என்கிறார் பரஞ்சோய் குஹா தாகுர்தா, வணிகக் குழுவைப் பற்றி விரிவாக எழுதிய இந்தியப் பத்திரிகையாளர்.



**அமெரிக்காவில் அதானி குழுமத்தின் முதலீடு இரத்து செய்யப்படுமா?**

அமெரிக்காவில் ஜனாதிபதியாக டொனால்ட் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அதானி குழுமத்தின் மீது பாரிய நிதி மோசடிகுற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. கடந்த வாரம் ட்ரம்பின் வெற்றிக்குத் வாழ்த்து தெரிவித்த கௌதம் அதானி, அமெரிக்காவில் 10 பில்லியன் டொலர் முதலீடு செய்வதாகவும் உறுதியளித்திருந்தார்.

இந்தியா-அமெரிக்கா உறவு மிகவும் வலுவான அடித்தளத்தைக் கொண்டுள்ள நிலையில் இந்த சர்ச்சை பாரிய தாக்கத்தை செலுத்துமா இல்லையா என்று உறுதியாக கூறமுடியாது.

**இலங்கையில் முதலீடு செய்வதற்கு வாய்ப்பு கிட்டுமா?**

மறுபுறம் இலங்கையிலும் வடமாகாணம் மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை அதானி நிறுவனத்திற்கு வழங்கியுள்ளமை தற்போது வரை பேசு பொருளாகும்.

மன்னாரிலும், பூநகரியிலும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டமொன்றையும், மின் விநியோகக் கட்டமைப்பொன்றையும் உருவாக்கும் பணியை இந்தியாவின் அதானி குழுமம் முன்னெடுத்து வருகின்றது. இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தால் இந்த திட்டத்தை எவ்வித தடையுமின்றி அதானி குழுமத்தால் செயற்படுத்த முடியும் என்று கூறமுடியாது.

ஏனெனில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கம் இந்தியாவின் அதானி குழுமத்துடனான கற்றாலை மின் உற்பத்தி ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யவுள்ளதாக தெரிவித்திருக்கின்றது.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இலங்கைத்தீவில் ஏற்பட்டுள்ள மாற்றுத் தன்மையுடைய ஆட்சி மாற்றமும், அதானி குழுமத்திற்கு பெரும் சவாலாகவே அமைந்துள்ளது.

இந்தியாவைப் பகைத்துக்கொண்டு இலங்கை அரசாங்கம் இயங்க முடியாது. ஆனாலும் அதானி குழுமம் இலங்கையில் எதிர்பார்க்கும் அனைத்து முதலீடுகளுக்கும் இலங்கை இடமளிக்கக்கூடிய சந்தர்பங்கள் இல்லை.

அதானி குழுமத்தின் முதலீடுகள் மற்றும் அதானி குழுமத்தின் நிதிப் பலங்கள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு மோடி அரசாங்கம், அமெரிக்காவுடன் ஏற்பட்டுள்ள பனிப்போரைச் சற்றுத் தணிக்கலாம் என்று எண்ணக்கூடும்.

இருந்தாலும் ட்ரம்பின் இரண்டாவது ஆட்சி முதலாவது ஆட்சியைப் போன்று அமையுமா அல்லது புவிசார் அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப அமெரிக்கத் தீர்மானம் எடுப்போர் மற்றும் அமெரிக்க கொள்கை வகுப்போரின் திட்டங்களுக்கு ஏற்ப அமையுமா என்பதை தற்போது அனுமானிக்க முடியாது.

இப் பின்னணியில்தான் இலங்கையின் அணுகுமுறையும் அமையும். குறிப்பாக இந்தியாவை மையப்படுத்திய பின்னணியோடுதான் இலங்கையின் அநுரகுமார திஸாநாயக்க வின் அரசாங்கம் செயற்படும் ஏது நிலை உண்டு.

**அதானி குழுமத்திற்கு ஆதரவாக ரசியா குரல்**

கடுமையான சவாலை எதிர்கொண்டிருக்கும் அதானி குழுமத்திற்கு ஆதரவாக ரசியா குரல் கொடுத்துள்ளது.

அதானிக்கு எதிராக எழுப்பப்படும் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பின்னணியில் அமெரிக்கா இருக்கலாம் என ரசியாவின் அரச ஊடக நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த செய்தியில் தெரிவித்திருப்பதாவது,

"அதானி நிறுவனத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகள் ஒரு தலைபட்சமானது போன்றும் சர்வதேச அளவில் அதானி நிறுவனத்திற்கு செல்வாக்கு அதிகரித்து வருவதற்கு எதிரான நடவடிக்கை போன்றும் தெரிகிறது.

குறிப்பாக அதானி நிறுவனத்திற்கு எதிரான அண்மைய குற்றச்சாட்டுகள் அந்த நிறுவனத்திற்கும் எஸ்.பி.ஐ மற்றும் எல்.ஐ.சி நிறுவனங்களுக்கு இடையேயான கடன் திட்டத்தை சீர்குலைக்கும் அமெரிக்காவின் திட்டங்களில் ஒன்றாக தெரிகிறது.

அமெரிக்காவின் முடிவுகளை ஏற்காமல் சுதந்திரமான வெளியுறவுக் கொள்கை முடிவுகளை எடுக்கும் இந்தியாவை வழிக்கு கொண்டு வருவதற்காக, அந்நாட்டு அரசு அதிகாரிகள் செய்துள்ள திட்டமிட்ட சதி போன்றும் தெரிகிறது.

அதானி நிறுவனம் சர்வதேச அளவில் தனது முதலீட்டை விரிவுபடுத்துவது மேற்கு நாடுகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது" என அந்த செய்தியில் பதிவிட்டுள்ளது.

# முகமறியா முகங்களின் கதை



கிருஷிகா பாலரூபன்

> “எல்லோரும் மானிடராவரோ இவ்வுலகில் கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?

முகங்கள் ஆயிரம் கதை பேசும். நம் அன்றாட வாழ்க்கையில் எத்தனை முகங்களைச் சந்திக்கின்றோம்? அத்தனை முகங்களும் நம் மனதில் பதிந்து விடுகின்றனவா என்ன? தெரிந்தவர், தெரியாதவர் என வேறுபடுத்தி, தெரிந்த சில முகங்களிடம் மாத்திரம் மட்டுப்படுத்தியதாகவே நம் வாழ்க்கைப் பயணம் நகர்கின்றது. இந்தப் பயணக் கட்டுரை அந்த வரையறைகளைத் தாண்டி தெரியாத முகங்களின் அறியாத இரகசியங்களை வெளிப்படுத்த முயல்கின்றது.

முகங்களைத் தேடும் எனது பயணம் முதலில் யாழ்ப்பாணம் குருநகரை மையப்படுத்தியதாய் அமைந்தது. பகல் பன்னிரண்டு மணி இருக்கும்.கடலின் சுற்றுச் சூழலில் ஆள் நடமாட்டத்திற்கான அறிகுறியே இல்லை. தூரத்தில் படகொன்றில் நான்கு பேர் வலை துப்புரவு செய்து கொண்டிருந்ததை கண்டதும் அவர்களை நோக்கி கால்கள் நகர்ந்தன. அதே கணத்தில் கண்களில் வேறோர் காட்சி தென்பட்டது. சுருங்கிய தோலுடன் இரண்டு பற்கள் தெரியும்படி சிரித்துக் கொண்டு ஒரு ஐயா என்னையே உற்றுநோக்கிக் கொண்டிருந்தார். முதுமை இருளிலும் ஒளிருகின்ற சாம்பல் நிறக் கண்கள். அவரை அடையாளப்படுத்திக்கொள்ள வலது பக்க நெற்றியில் ஒரு மச்சம். கறுப்புக் காற்சட்டையும் இளம் சிவப்பு நிற மேற்சட்டையும் அணிந்திருந்தார். அழகுக்கே அழகு சேர்ப்பது போல் நீலமும் ஊதாவும் கலந்த கட்டம் போட்ட தலைப்பாகையும் அணிந்தபடி கொளுத்தும் வெயிலிலும் வாலிபம் குறையாத இளைஞனின் சுறுசுறுப்போடு வலையைத் துப்புரவு செய்து கொண்டிருந்தார்.

நான் மெதுவாக அருகே சென்று அமர்ந்தபடி “உங்கட பேர் என்ன ஐயா?” எனப் பேச்சுக் கொடுத்தேன். “மனுவல் யேசுதாசன். என்னை திரவியம் என்று தான் கூப்பிடுவினம். 1938 ஆம் ஆண்டு ஹிட்லர் ஆட்சி நடக்கிற நேரம் பிறந்ததால ஹிட்லர் என்றும் ஊராட்கள் கூப்பிடுவினம்” எனச் சிறிய அறிமுகத்தினைத் தந்தார்.

அப்போது தான் என் மனதில் ஒரு கேள்வி எழுந்தது. “ஐயா! பழைய குருநகர் எப்படி இருக்கும்? ஒருக்கா சொல்லுங்கோவன்“ எனக் கூற, நீங்கள் இப்ப பாக்கிற குருநகர் பழைய குருநகர் இல்ல பிள்ளை. இந்தப் பெரிய பெரிய கட்டடங்களெல்லாம் அப்ப இல்லை. இந்தக் குடியிருப்புக்கள் எல்லாம் இப்ப தான் வந்தது. நீங்கள் பாக்கிற பெரிய கப்பல்களும் அப்ப இல்லை. நாலோ அஞ்சு வள்ளம் தான் நிக்கும். கடலை மறிச்சுக் கட்டின தடுப்பு வாய்க்காலுக்கு கிட்ட எல்லாம் அப்ப பெரிய மீன்களெல்லாம் அம்பிடும். இப்ப அப்பிடியா எல்லாம் தலைகீழாப் போச்சு. நெடுந்தொலைவிற்கு போனாலும் மீன்கள் அம்பிடுதில்லை பிள்ளை. அங்க தொலைவில தெரியுற சங்கிலிப் பாலத்திற்கு கீழால போய் தான் வள்ளங்களை தரிச்சு வைப்பம். இப்ப அதுக்கான அடையாளமே இல்லாம குப்பை மேடா தானே கிடக்குது. சங்கிலிப் பாலத்திற்கு பக்கத்த தான் முதல் மீன் சந்தை இருந்தது. இப்ப புதுக்கட்டடம் வந்திட்டுதானே. 1957 ஆம் ஆண்டு கடும் புயல் ஒண்டு அடிச்சது பிள்ளை. அப்ப சங்கிலி பாலத்துக்கு மேலால படகு போனது இப்பவும் கண்ணுக்கு முன்னால நிக்குது“ என்று பழைய நினைவுகளை மீட்டுத் தந்தார்.

“நான் எம்.ஜி.ஆர் இன் தீவிர இரசிகன். அந்தக்காலத்தில மனோகரா தியெட்டர், ராணி தியெட்டர், வின்சன் தியெட்டர் மூன்றும் தான் யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்றிருந்தவை. 1965 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கைக்கு முதன்முதலாக எம்.ஜி.ஆர் உம் சரோஜாதேவியும் பலாலி, யாழ்ப்பாணம் விமான நிலையத்தினை வந்தடைந்து, நுவரெலியாவிற்கு சென்று விட்டு யாழ்ப்பாணம் முத்தவெளி மற்றும் துரையப்பா விளையாட்டரங்கிற்கு வருகை தந்த போது அவர்களைப் பார்க்கச் சென்ற கூட்டத்தில் நானும் ஒருவன் எனக் கூறியவர், சூறாவளியால் பாதிக்கப்பட்ட மயிலிட்டி மீனவர்களுக்கு நன்கொடையும் வழங்கினார் எனப் பெருமிதமடைந்தார். அந்தக் காலத்தில வெள்ளைத் திரை போட்டு ஓடும் தகர கதிரைகளும் இருந்தாலே தியெட்டர் தான். படகோட்டி, மங்கையர் திலகம், ஔவையார் போன்ற திரைப்படங்களைப் பார்க்க முதல் ஆளாக இருபத்தைந்து சதம் கொடுத்து குருநகர் மடத்தடி சந்தியில் அமைந்திருந்த மகேந்திரா தியெட்டரிற்கு நண்பர்களாகச் செல்வது இப்போது நினைத்துப் பார்த்தாலும் இன்பமளிக்கிறது என்கிறார் எங்கட திரவியம் ஐயா.

சரி ஐயா உங்கட கடற்றொழில் பற்றிச் சொல்லுங்கோவன் எனக் கேட்க, பத்து வயசில இருந்து அப்பாவோட சேர்ந்து கடலுக்குப் போவன். அப்பவே கடல் எனக்கு நல்ல பரீட்சயம் ஆகீட்டுது. பதினெட்டு வயசில நல்லா சுழியோடப் பழகிட்டன். இப்ப இருக்கிற மாதிரி கடலட்டை பண்ணையெல்லாம் அப்ப இல்லை பிள்ளை. மர வள்ளத்தில போய் தான் சுழியோடி அரைச்சாண் அட்டை பிடிப்பம். ஒரு அட்டை இரண்டு ரூபாவிற்கு விற்கலாம். கடலட்டை பிடிக்க முதல் முதலா கண்ணாடி போட்டது நாங்க தான். நெடுந்தொலைவிற்குப் போய் கடலட்டை பிடிக்கிறதெல்லாம் அப்ப ஒரு சாகசம் தான்.

பத்து வயசில தொழிலுக்குப் போனதால படிக்கேல்ல எண்டு நினைக்காதேங்கோ. சின்னக்கடை யாகப்பர் கோயிலுக்கு பக்கத்தில இருக்கிற சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில ஏழாம் வகுப்பு வரை தான் படிச்சனான். இப்ப அது பெண்கள் பாடசாலை ஆகிட்டுது. அதுக்கு பிறகு பள்ளிக்கூடம் போகாட்டியும் குருநகர் வாசிகசாலையில சரித்திர புத்தகம், சொற்பிறப்பதிகாரம் எண்டு நிறைய புத்தகங்கள் வாசிச்சு இருக்கிறன்.

பாடசாலைக் கல்வியினைத் தொடராமல் இடைநிறுத்திக் கொண்டாலும் புத்தகங்கள் மீதான அவரின் அதீத காதல் அவருடனான உரையாடல்களிலே இடையிடையே வந்து போயின. திருக்குறளாகவோ, சரித்திரக் கதைகளாகவோ, ஔவையார் பாடல்களாகவோ எமக்கான அறிவுரைகளும் அவர் மூலமாய்க் கிடைத்தன. “1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாண நூலகம் தீக்கிரையான போது குருநகர் எல்லாம் புகை மட்டும் தான் தெரிஞ்சது. எரிஞ்சத கேள்விப்பட்ட போது கால் நடையா நடந்தும் ஓடியும் சம்பவ இடத்தினை பார்த்தேன்” என்று கலங்கிய விழிகளுடன் கூறினார்.

“எல்லோரும் மானிடராவரோ இவ்வுலகில் கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?

“ என அவர் கூறிய வார்த்தைகள் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற உத்வேகத்தினை அளிப்பவையாக அமைந்தாலும் வாழும் மாணிக்கக் கல்லாக திரவியம் ஐயாவினையே எண்ணத் துணிகிறது மனம். பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த காலத்தின் பொக்கிசமாகவே மனுவல் யேசுதாசன் ஐயா விளங்குகிறார். இவ்வாறு ஆவணப்படுத்தப்படாமல் எத்தனை உள்ளூர் கலைக்களஞ்சியங்கள் வாழ்ந்து மறைந்திருக்கும்.

## அஷ்ரப், பிரேமதாச மூலம் பெற்ற பலனை இன்று ஜே.வி.பி அனுபவிக்கிறது

### முன்னாள் எம்.பி எம்.எ ம்.சுஹைர்

(முகம்மட் முக்தார்)



பெரும்பான்மை பலத்துடன் அமையப் பெற்றுள்ள தேசிய மக்கள் சக்தியின் அர–சாங்கத்தில் முஸ்லிம் சமூகம் பங்காளியாக இருக்க வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு என இராஜதந்திரியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியு–மான எம்.எம்.சுஹைர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதா–வது,

இம்முறை தேர்தலில் சிங்கள மக்–களின் வாக்குகளால் முஸ்லிம்களும் முஸ்லிம்களின் வாக்குகளால் சிங்கள–வர்களும் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதை தேர்தல் பெறுபேறுகள் தெளிவாகக் காண்பிக்கின்–றன. அந்தவகையில் இந்த சாதகமான அரசியல் மாற்றத்தை தொடர்ந்தும் தக்க வைப்பதற்கு முஸ்லிம்களுக்கும் ஆட்சியில் உரிய இடத்தை வழங்குவதே பொருத்தமா–னதாகும். இந்த இடத்தில் மக்கள் விடுதலை முன்னணி இவ்வளவு தூரம் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அன்று வழங்கிய பங்–ளிப்பை நினைவுபடுத்த வேண்டியது கட–மையாகும்.

1988 இல் அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுடன் இணைந்து அர–சியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்க–ளுக்கு நாடாளுமன்றத்திற்குள் நுழைவதற்–கான வெட்டுப்புள்ளியை 12.5% இலிருந்து 5% ஆக குறைப்பதற்கு அஷ்ரப் எடுத்த முயற்சியை மக்கள் விடுதலை முன்னணி மறந்துவிட முடியாது.

இது அரசியலமைப்பின் 15 வது திருத்–தமாக ஒரே இரவில் நிறைவேற்றப்பட்டது. இதுவே சிறிய கட்சிகளும் நாடாளுமன்றம் நுழைவதற்கான கதவுகளைத் திறந்–தது. இதன் மூலம் ஆயுதப் போராட்டத்தில் நாட்டம் கொண்ட குழுக்களும் ஜனநாயக நீரோட்டத்தில் நுழைவதற்கு வழிவகுத்தது.

ஜே.வி.பி வன்முறையை கைவிட்டு ஜனநாயக செயல்முறைக்குள் நுழை–வதை பிரேமதாச விரும்பியிருந்தார். அந்த வகையில் அன்று அஷ்ரப் எடுத்த முயற்–சியின் பலனை மக்கள் விடுதலை முன்ன–ணியும் அனுபவிக்கிறது. இது வரலாற்று நிகழ்வாகும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தம்புள்ளை மத்திய நிலையத்தில் போக்குவரத்தில் குழப்பம்

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் வர்த்தக சங்க உறுப்பினர்களுக்கும், மாம்பழம் விற்பனை செய்ய வரும் வியாபாரிகளுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தினுள் புதிய போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்பட்டு, மரக்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனையில் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமையினால் குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும், இந்த முறையை புறக்கணிக்கும் கடை உரிமையாளர்களிடம் இருந்து அபராதம் வசூலிக்கவும், கடைகளை தற்காலிகமாக மூடவும் பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தக சங்கம் முடிவு செய்துள்ளது.

எனினும், தற்காலிகமாக கடைகளை மூடுவதற்கு எடுத்த தீர்மானித்தால், காலையில் மாம்பழம் விற்பனை செய்ய வந்த வியாபாரிகள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டதால் கடும் பரபரப்பு ஏற்பட்டது. மாம்பழம் விற்பனை செய்ய வரும் வியாபாரிகள், மிகுந்த சிரமப்பட்டு கொண்டு வரும் மாம்பழங்களை விற்பனை செய்ய இடமில்லாததால், லொறிகளிலும், கடைகளுக்கு அருகில் தரையிலும் மாம்பழங்களை விற்பனை செய்வதாகக் குறிப்பிடுகின்றனர்.

வெவ்வேறு இடங்களில் மாம்பழங்கள் விற்பனை செய்யப்படுவதால், ஏனைய விவசாயிகளும் மரக்கறிகளை கொள்வனவு செய்ய வருபவர்களும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாக வர்த்தக சங்கத்தின் தலைவர் சி. எஸ்.சிறிவர்தன தெரிவித்துள்ளார். இந்த மாம்பழ விற்பனை முறையால் பொருளாதார மத்திய நிலையத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் அது பெரும் சிரமமாக உள்ளதெனவும் தெரிவித்தார்.

## கலால் சட்டத்துக்கு முரணாக அனுமதிப்பத்திரங்கள் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல்

கலால் சட்டத்துக்கு முரணாக மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை வழங்கியமை தொடர்பில் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதாவது, கடந்த ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்பு அப்போதைய நிதியமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதிவாதிகள் ஆகியோர் அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை கண்டி பிரதேசத்தில் மதுபான விற்பனை வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் சாமர சம்பத் அபேசேகர மற்றும் என். ரவிச்சந்திரன் ஆகியோர் தாக்கல் செய்துள்ளனர்.

முன்னாள் நிதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, கலால் திணைக்கள முன்னாள் ஆணையாளர் நாயகம் எம். ஜே. குணசிறி, நிதியமைச்சின் முன்னாள் செயலாளர், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் 39 உறுப்பினர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி மஞ்சுள பாலசூரியவின் ஊடாக தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில், கடந்த ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட ஜுலை 26ஆம் திகதிக்கும், ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற செப்டெம்பர் 21ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில், பிரதிவாதிகள் பல மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு கோரும் நோக்கில் இந்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கலால் சட்ட விதிகளை தவிர்த்து தன்னிச்சையாகவும் அநீதியாகவும் வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இதன் கீழ், கடந்த அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களது உறவினர்கள் மற்றும் நெருங்கிய ஆதரவாளர்களுக்கு மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை முறையான வெளிப்படைத்தன்மையின்றி வழங்கியுள்ளதாக மனுதாரர்கள் தெரிவிக்கின்றனர்.



# பருவநிலை மாற்றத்துக்கான முயற்சி: 10 ஆவது இடத்தில் இந்தியா

பருவநிலை மாற்றத்தை எதிர்த்து போராடும் முயற்சிகளுக்காக மதிப்பிடப்பட்ட 60 இறுக்கும் மேற்பட்ட உலக நாடுகளின் தரவரிசையில் இந்தியா 10 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

வருடாந்த ஐ.நா பருவநிலை மாநாடு அஜர்பைஜனின் பாகு நகரில் நடைபெற்று வருகிறது. இதன்போது பருவநிலை மாற்ற செயல்திறன் குறியீட்டு தரவரிசை வெளியிடப்பட்டது.

கரியமில வாயு உமிழ்வுகள், புதுப்பிக்கத்தக்க மற்றும் பருவநிலைக் கொள்கையின் அடிப்படையில் நாடுகளின் செயல்திறன் மதிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி பருவநிலை மாற்ற நடவடிக்கைகளில் அதிக செயல்திறன் கொண்ட நாடுகளில் இந்தியா 10 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா இருந்தாலும் தனிநபர் உமிழ்வு மற்றும் எரிசக்தி பயன்பாடு ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது.

அதன்படி உலக அளவில் பசுமை ஆற்றலில் இந்தியா முக்கிய பங்கு வகிக்க விரும்புகிறது.

உலகின் மூன்றாவது பெரிய பசுமை இல்லா வாயு உமிழ்வு நாடாகவும் வேகமாக வளர்ந்துவரும் பெரிய பொருளாதாரம் கொண்ட நாடாகவும் 2070 ஆம் ஆண்டுக்குள் பூஜ்ஜிய உமிழ்வை அடைய இந்தியா உறுதிகொண்டுள்ளது.



# யானை தாக்கி ஒரு வருடத்துக்குள் 13 உயிரிழப்பு

இந்தியாவின் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் யானை தாக்கியதில் ஓராண்டில் மட்டும் சுமார் 13 பேர் உயிரிழந்துள்ளதாக வனத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

சுமார் 1455 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட இப் புலிகள் காப்பகத்தில் தலமலை எனும் வனப்பகுதி யானைகளின் முக்கிய வழித்தடமாக உள்ளது.

குறித்த காப்பகத்தையொட்டிய பகுதிகளில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு பிரதான தொழிலாக உள்ளது. மேலும் வனப் பகுதிக்கு சென்று தேன் உள்ளிட்ட பொருட்களையும் மலைவாழ் மக்கள் சேகரித்து விற்பனை செய்து வருகின்றனர். வனத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் சமீப காலமாகவே யானைகளினால் விவசாயப் பயிர்கள் சேதப்படுதல், காவலுக்கு இருக்கும் விவசாயிகள் தாக்கப்படுதல் ஆகியன வாடிக்கையாகிவிட்டன.

அதன்படி, கடந்த ஒரு வருடத்தில் தோட்டங்களில் இரவு நேர காவலுக்கு இருந்த பழங்குடியினர், வீதியில் நடந்து சென்றவர்கள், கால்நடை மேய்க்கச் சென்றவர்கள், வனத்தில் பொருட்கள் சேகரிக்கச் சென்ற தம்பதி என மொத்தம் 13 பேர் யானைகள் தாக்கி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் உயிரிழப்புக்களை தடுப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# நாட்டின் முதல் ஒன்லைன் நீதிமன்றம் 24 மணித்தியாலமும் இயங்கும்

இந்தியாவின் முதல் ஒன்லைன் நீதிமன்றத்தை கேரள உயர் நீதிமன்றம் தொடங்கி வைத்துள்ளது.

இந் நீதிமன்றத்தை 24 மணித்தியாலமும் பயன்படுத்தலாம்.

வழக்குப் பதிவு செய்தல், வழக்கு அனுமதி, முன்னிலைப்படுத்துவது, விசாரணை மற்றும் தீர்ப்பு என அனைத்தும் ஒன்லைன் மூலமாக மேற்கொள்ளப்படும்.

முதல் கட்டமாக காசோலை வழக்குகள் நீதிமன்றத்தால் விசாரிக்கப்படுகின்றன.

உலகில் எந்த மூலையிலிருந்தும் இந் நீதிமன்றத்தில் வழக்குகளைப் பதிவு செய்யலாம். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களுக்கு உத்தரவாத கையெழுத்திட்ட நபர்கள் தங்களின் பிணை மனுக்களையும் ஒன்லைனிலேயே தாக்கல் செய்யலாம் .

நிலுவையிலுள்ள வழக்குகளை குறைப்பது மற்றும் சட்ட ரீதியான தீர்வுகளை விரைவுபடுத்துவது ஆகியவைதான் இந்த ஒன்லைன் நீதிமன்றத்தின் நோக்கம்.

இந் நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பவர்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் வழக்கு விசாரணை நிலவரங்களை உடனே தெரிவிக்கும்.

இந் நீதிமன்றத்தில் அனைத்து ஆவணங்களுமே டிஜிட்டல் முறையில்தான் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

கடதாசி ஆவணங்களுக்கு இங்கு இடமில்லை.

வழக்குகள் நீதிமன்றத்தின் இணையத்தளத்தில் ஒன்லைன் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

# குளிர்கால கூட்டத்தொடர் 15 மசோதாக்கள் தாக்கல்



இந்தியாவின் நாடாளுமன்றக் குளிர்கால கூட்டத்தொடர் எதிர்வரும் 25 ஆம் திகதி தொடங்கி டிசம்பர் 20 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

இதில் 15 மசோதாக்களை தாக்கல் செய்ய ஒன்றிய அரசு பட்டியலிட்டுள்ளது.

அதன்படி, ஏற்கனவே நிலுவையிலுள்ள 10 மசோதாக்கள் மற்றும் புதிய 5 மசோதாக்கள் என மொத்தம் 15 மசோதாக்களை நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே நிலுவையில் உள்ள வக்பு வாரியச் சட்ட திருத்த மசோதா மீண்டும் தாக்கல் செய்யப்படவுள்ளது.

கடந்த கூட்டத் தொடரின் போது இம் மசோதாவுக்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதனால் நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன் மீது ஆலோசனை நடத்தி எதிர்வரும் 29 ஆம் திகதி தனது அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது. இது தவிர்ந்து கூட்டுறவு பல்கலைக்கழகங்கள், இந்திய துறைமுகங்கள், சரக்கு மற்றும் பயணிகள் கப்பல் போக்குவரத்து, வணிகக் கப்பல் போக்குவரத்து, டில்லி மாவட்ட நீதிமன்றங்களின் மேல்முறையீட்டு அதிகார வரம்பை ரூபாய் 3 இலட்சத்திலிருந்து 20 இலட்சமாக உயர்த்துவது, பஞ்சாப் நீதிமன்றங்கள் சட்ட திருத்தம் உள்ளிட்ட 5 புதிய மசோதாக்களும் கொண்டு வரப்படவுள்ளன.

# மோடி மீது காங்கிரஸ் குற்றம் சுமத்துகிறது

## பா.ஜ.க கண்டனம்





அதானி விவகாரம் தொடர்பில் பிரதமர் நரேந்திர மோடி மீது ராகுல் காந்தி குற்றம் சுமத்துவதாக பா.ஜ.கவினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தலைநகர் டில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் சம்பித் பத்ரா கூறியிருப்பதாவது,

"2002 ஆம் ஆண்டு முதலே ராகுல் காந்தி அவரது தாயார் சோனியா காந்தி மற்றும் காங்கிரஸ் கட்சியினர் மோடியின் புகழைக் கெடுக்க முயற்சித்து வருகின்றனர்.

ஆனால், அவை வெற்றியடையவில்லை. அதானி குழுமம் அதன் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு விளக்கம் அளித்துள்ளது. காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் ஆளும் பல மாநிலங்களில் அதானி குழுமம் முதலீடுகளை செய்துள்ளது. தி.மு.க ஆட்சி நடக்கும் தமிழகத்திலும் அதானி முதலீடு செய்துள்ளது.

அதானி ஊழல் செய்கிறதென்றால், காங்கிரஸ் அரசு ஏன் அந் நிறுவனத்திடம் முதலீடு தேடுகிறது? மோடி பிரதமராக இருப்பதனால் இந்தியாவின் பொருளாதாரம் வலுவடைந்து வருகிறது. இதனைச் சகிக்க முடியாத காங்கிரஸ் கட்சியினர் பொய்யான குற்றச்சாட்டுக்களை கூறி வருகின்றனர்.

பிரதமர் மோடியின் புகழை சீர்குலைக்க முயற்சித்து வருகின்றனர்" எனத் தெரிவித்துள்ளார்.

# மருத்துவமனை கழிப்பறையில் பிறந்த குழந்தை

## கவ்விச் சென்ற தெருநாய்

இந்தியாவின் பங்குரா மாவட்டத்திலுள்ள பெங்கால் அரச மருத்துவமனையில் பிறந்த குறைமாத குழந்தையை தெருநாய் ஒன்று கவ்விச் சென்ற சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி குறித்த பெண்ணுக்கு ஏற்பட்ட திடீர் வயிற்று வலி காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து, மருத்துவமனை கழிவறைக்கு சென்ற பெண்ணுக்கு ஆறு மாதத்திலேயே குறைப்பிரசவத்தில் குழந்தை பிறந்துள்ளது.

இவ்வாறு பிறந்த குழந்தையை அங்குள்ள மருத்துவமனை பிரதேசத்தில் சுற்றித் திரிந்த தெருநாய் ஒன்று கவ்விச் சென்றுள்ளது.

அப் பெண் பலமுறை உதவிக்காக ஊழியர்களை அழைத்தபோதும் ஊழியர்கள் உதவ வரவில்லை என பெண்ணின் குடும்பத்தார் குற்றம் சாட்டியுள்ளனர்.

மருத்துவமனையின் அலட்சியத்தினால் நிகழ்ந்த இச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# குட்டையில் கால் கழுவச் சென்ற சிறுவர்கள் தவறி விழுந்து உயிரிழப்பு



இந்தியாவின் திருவள்ளூர் மாவட்டம், கன்னிகாபுரம் பகுதியைச் சேர்ந்த கிரிநாத் மற்றும் ப்ரவீன் எனும் இரு சிறுவர்கள் குட்டையில் கால் கழுவச் சென்றபோது பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

சிறுவர்கள் இருவரும் கல்குவாரி குட்டையில் கால் கழுவச் சென்றபோது தவறுதலாக கால் தவறி குட்டைக்குள் விழுந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து, இரண்டு சிறுவர்களையும் மீட்ட உறவினர்கள் திருத்தணி அரச மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். சிறுவர்களை பரிசோதித்த மருத்துவர்கள் அவர்கள் இருவரும் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர். இச் சம்பவம் அப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# மனித இனம் அழிந்தால் உலகை ஆளப் போவது யார்?



மனிதர்கள் அழிந்துவிடுவார்களா என்பது விடை தெரியாத கேள்வி. ஆனாலும், ஒரு காலத்தில் இந்த உலகத்தில் ஆதிக்கம் செலுத்திய டைனோசர்கள் போன்ற இனங்கள் அழிந்துவிட்டதற்கான எடுத்துக்காட்டுகள் எங்களிடம் உள்ளன.

மனித இனம் எப்போதாவது அழிந்தால், எந்த இனம் உலகை ஆளும்? இதற்கு முன்னணி விலங்கியல் நிபுணரும் ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழக பேராசிரியருமான டிம் கோல்சன் (Tim Coulson) விளக்கம் அளித்துள்ளார்.

அவரின் கூற்றுப்படி மனிதர்களுக்கு பின் உலகத்தை விலங்கு ஆட்சி செய்யும் என்று தெரிவித்துள்ளார்.

இதன்படி " மனிதர்கள் முற்றிலுமாக அழிந்து விட்டால் கடலில் வாழக்கூடிய ஒக்டோபஸ் (octopuses) உயிரினங்கள் அடுத்த நாகரிகத்தை உருவாக்கும்" என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனிதர்கள் இல்லாமல் ஒக்டோபஸால் ஆளப்படும் உலகத்தை அவர் ஏன் கணிக்கிறார் என்பதற்கும் துல்லியமான விளக்கத்தை அளித்துள்ளார்.

பேராசிரியர் டிம் கோல்சன் கடல் ஒக்டோபஸ் ஒரு அறிவார்ந்த மற்றும் வளமான இனம் என்று சுட்டிக்காட்டுகிறார். பூமியில் ஆதிக்கம் செலுத்தும் உயிரினங்களாக பரிணமிப்பதற்கான அனைத்து பொருட்களும் அவைகளிடம் உள்ளன.

"ஒக்டோபஸ்கள் உலகின் மிகவும் புத்திசாலித்தனமான, மாற்றியமைக்கக்கூடிய மற்றும் வளமான உயிரினங்களில் ஒன்றாகும். சிக்கலான பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், பொருட்களைக் கையாள்வது மற்றும் மிகத் துல்லியமாக தன்னை மறைத்துக் கொள்ளும் திறனை கொண்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனிதர்கள் முற்றிலுமாக பூமியிலிருந்து அழியும்போது நிலத்தில் வா[ழும்] உயிரினங்களும் அழிந்து விடும் என்று கூறும் அவர், மனிதர்கள் கடலில் வேட்டையாடுவதற்கான வழிகளை கண்டுபிடித்தது போன்று ஒக்டோபஸ்களும் நிலத்தில் வேட்டையாடுவதற்கான வழிகளை கண்டுபிடிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

ஒக்டோபஸ்கள் நீருக்கடியில் காலனிகளை உருவாக்கி மனிதர்களால் உருவாக்கப்பட்ட நாகரீகங்களை உருவாக்கும் என்று அவர் கூறுகிறார். ஒக்டோபஸுக்கு இதற்கான உடல் மற்றும் மன குணங்கள் உள்ளன.

அது அதிநவீன ஒக்டோபஸ் சமூகங்களை உருவாக்க வழி வகுக்கும். ஒக்டோபஸ்களிடம் உள்ள மேம்பட்ட நரம்பியல் அமைப்பு மற்ற எந்த விலங்குகளுக்கும் கிடையாது என்று கூறும் கோல்சன் எட்டுக்கால் உயிரினமான ஆக்டோபஸ் எதிர்காலத்தில் பூமியை ஆளும் என்று உறுதிபட நம்புகிறார்.

கடல் ஒக்டோபஸ்கள் உலகை ஆக்கிரமிக்க முடியுமா என்ற கேள்விக்கு பேராசிரியர் டிம் கோல்சன் பதில் அளித்துள்ளார்.

மனிதர்கள் அழிந்தவுடன், ஒக்டோபஸ்கள் பரிணாம வளர்ச்சியடைந்து மில்லியன் கணக்கான ஆண்டுகளில் நிலத்திற்குச் செல்லும்.

ஒக்டோபஸ்கள் இப்போது நிலத்தில் 30 நிமிடங்கள் வரை உயிர்வாழும் திறன் பெற்றுள்ளன. எதிர்காலத்தில், ஒக்டோபஸ்கள் நிலத்தில் நீண்ட காலம் வாழ சுவாசக் கருவியை உருவாக்கலாம். ஒக்டோபஸ்கள் நிலத்திலும் வேட்டையாட முடியும் என்று அவர் கூறுகிறார்.

மனிதர்கள் அழிந்தால், பாலூட்டிகள் போன்ற வேறு சில உயிரினங்கள் இயற்கையாகவே பூமியில் ஆதிக்கம் செலுத்தும் என்று பொதுவாக நம்பப்படுகிறது. இருப்பினும், டிம் கோல்சனின் கருத்துக்கள் இதை மறுக்கின்றன. ஏதேனும் ஒரு காரணத்தால் அழிந்தால், குரங்குகள் உட்பட மற்ற பாலூட்டிகள் மற்றும் விலங்குகளும் அதே காரணத்திற்காக அழிந்து போகலாம் என்று அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இது ஒக்டோபஸ்களின் ஆதிக்கத்திற்கு வழி வகுத்தது. "ஒக்டோபஸ் திறமை, ஆர்வம் மற்றும் தொடர்பு கொள்ளும் திறன் ஆகியவற்றின் தனித்துவமான கலவையைக் கொண்டுள்ளது.

இது பூமியில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய உயிரினங்களின் பட்டியலில் முதலிடத்தில் வைக்கிறது" என்கிறார் பேராசிரியர் டிம் கோல்சன் மேலும் தெரிவித்துள்ளார்.





# பிணை கிடைத்த நிலையில் இம்ரான்கான் கைது

ஊழல் வழக்கில் பிணை பெற்ற பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், போராட்ட வழக்கில் மீண்டும் கைது செய்யப்பட்டார். அவர் மீது ஏராளமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதால், அவர் இப்போதைக்கு விடுதலையாக வாய்ப்பில்லை என பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது ஊழல் வழக்கு உட்பட ஏராளமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதனால் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். பாகிஸ்தான் தலைவர்களுக்கு வெளிநாட்டு தலைவர்கள் அளிக்கும் பரிசு எல்லாம் அரசு திறைசேரிக்கு சென்று விடும். அவ்வாறு வழங்கப்பட்ட விலை உயர்ந்த ஆபரணம் ஒன்றை, இம்ரான் கான் பிரதமராக இருந்தபோது அரசு திறைசேரிக்கு குறைந்த பணம் செலுத்தி முறைகேடான வழியில் எடுத்துக் கொண்டதாக ஊழல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம் இம்ரான் கானுக்கு கடந்த புதன்கிழமை பிணை வழங்கியது.

இந்த பிணை கிடைத்த சில மணி நேரத்தில், தீவிரவாதம் மற்றும் இதர வழக்குகளில் இம்ரான் கானை ராவல்பிண்டி பொலிஸார் கைது செய்தனர். ராவல்பிண்டியில் உள்ள அடியலா சிறையில் இம்ரான் கான் இருந்தபோது, கடந்த செப்டம்பர் 28ஆம் திகதி போராட்டத்துக்கு அழைப்பு விடுத்ததாக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கில் இம்ரான் கான் தற்போது கைது



செய்யப்பட்டுள்ளார். தீவிரவாத தடுப்பு சட்ட விதிமுறை மீறல், அரசு தடையை மீறி பொது இடத்தில் கூடுதல், பொலிஸாரை கடமையை செய்யவிடாமல் தடுத்தது, பொலிஸ் வாகனங்கள் மற்றும் பொது சொத்துக்களை சேதப்படுத்தியது என பல குற்றச்சாட்டுகள் இந்த வழக்கில் இம்ரான் கான் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இந்த வழக்கில் இம்ரான் கைது செய்யப்படுவதற்கு முன்பே, பேட்டியளித்த பாகிஸ்தான் தகவல் துறை அமைச்சர், கடந்த மே மாதம் நடைபெற்ற வன்முறை தொடர்பாக 8 வழக்குகள் இம்ரான் கான் மீது உள்ளன. இந்த வழக்குகளில் பிணை பெற்றால் மட்டுமே அவரால் வெளிவர முடியும் என தெரிவித்தார்.

# சர்வதேச நீதிமன்றத்தின் கைது உத்தரவு யூத வெறுப்பின் விளைவு - இஸ்ரேல் பிரதமர்

தன் மீதான குற்றச்சாட்டுகளும், அதற்காக சர்வதேச நீதிமன்றம் விதித்துள்ள கைது உத்தரவு யூத வெறுப்பின் விளைவு என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக கடந்த வியாழக்கிழமை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கைது உத்தரவு பிறப்பித்திருந்தது. இஸ்ரேல் மீது போர்க்குற்ற முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டு சர்வதே குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வந்தது.

இந்த வழக்கில்தான் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கைது உத்தரவு பிறப்பித்து உத்தரவிட்டது. அவர் மட்டுமல்லாது இஸ்ரேல் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட், ஹமாஸ் தலைவர் ஆகியோருக்கும் கைது உத்தரவு பிறப்பித்தது.

இந்நிலையில் இந்த கைது உத்தரவு குறித்து நெதன்யாகு எக்ஸ் சமூக வலைதளப் பதிவில் வெளியிட்ட வீடியோவில், "யூத வெறுப்புடன் எடுக்கப்பட்ட முடிவு. நவீன ட்ரேஃபஸ் விசாரணைக்கு சமமானது." என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

யார் இந்த ட்ரேஃபஸ்? - 1894 - 1906 இடையேயான காலகட்டத்தில் பிரான்ஸில் உளவு பார்த்ததாக யூத இராணுவ அதிகாரியான ஆல்ஃப்ரெட் ட்ரேஃபஸ் மீது குற்றச்சாட்டு எழுந்தது. அவர் ஜெர்மனுக்கு இராணுவ ரகசியங்களை விற்றதாக குற்றஞ்சாட்டப்பட்டது. பின்னர் அவர் மீதான குற்றச்சாட்டுகள் போலியானவை என உறுதியாகி அவர் பிரஞ்சு இராணுவத்தில் மீண்டும் சேக்கப்பட்டார். இவருடன் தான் இப்போது நெதன்யாகு தன்னை ஒப்பிட்டுள்ளார். ட்ரேஃபஸ் மீதான போலி குற்றச்சாட்டுகள் போன்றது தன் மீதான போர்க்குற்ற முறைப்பாடுகள் என்று நெதன்யாகு கூறியுள்ளார். மேலும் தன்னை நவீன கால ட்ரேஃபஸ் எனக் கூறும் நெதன்யாகு தன் மீதான குற்றச்சாட்டும் போலியானது என்பது நிரூபணமாகும் எனக் கூறியுள்ளார்.



2023ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் ஹமாஸ் கிளிர்ச்சியாளர்கள் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தினர்.

இதில் இஸ்ரேலில் 1300இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இஸ்ரேலியர்கள் உள்பட சிலர் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர். பிணைக் கைதிகளில் சொற்பமானவர்களே இதுவரை விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், காசா மீது இஸ்ரேல் கடுமையான பதிலடி கொடுத்து வருகிறது. காசா மீதான தாக்குதல் ஹமாஸ் ஆதரவு அமைப்புகள் மீது நீண்டுள்ளது.

லெபனானில் ஹிஸ்புல்லாக்கள், சிரியாவில் ஈரான் ஆதரவு கிளர்சிப் படைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. காசாவில் மட்டும் பெண்கள், குழந்தைகள் உள்பட 44,000 பேர் உயிரிழந்துள்ளனர். லெபனான் உயிர்ழப்புகள் 3500ஐ கடந்துள்ளது.

இவற்றுக்கு எதிராகவே சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# கிழக்கு லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல்: 47 பேர் பலி

கிழக்கு லெபனானின் கவர்னரேட பால் பெக்-ஹெர்மெல் உள்ள பகுதிகளில் இஸ்ரேல் மேற்கொண்ட வான்வழி தாக்குதலில் சுமார் 47 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 22 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


கவர்னரேட் முழுவதும் உள்ள பல்வேறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் உயிரிழப்புகள் பதிவாகிய நிலையில்

சேதமாக்கப்பட்ட வீடுகளின் இடிபாடுகளுக்குள் காணாமற் போனவர்களை மீட்புக் குழுக்கள் தேடி வருகின்றனர்.

அண்மையில், இஸ்ரேல் தெற்கு மற்றும் கிழக்கு லெபனானில் 48 வான்வழி தாக்குதல்களை மேற்கொண்டதுடன் தெற்கு லெபனானில் உள்ள 18 எல்லை நகரங்கள் மற்றும் கிராமங்களை இலக்கு வைத்து சுமார்

100 குண்டுகளை எரிந்ததாகவம் லெபனான் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளது. 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஏழாம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாத தாக்குதல் மேற்கொண்டது. இதன்பின்னர் இஸ்ரேல் காசா மீது தற்போது வரை தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது. இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் காரணமாக இதுவரை 45 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன்

ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். பலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக, ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பும் போரில் ஈடுபட்டு வருகிறது.



# உங்கள் நாட்டுக்கு திரும்பி செல்லுங்கள்: நியூசிலாந்து மக்கள் எச்சரிக்கை

உங்கள் நாட்டுக்கு திரும்பி செல்லுங்கள் என்று காலிஸ்தான் ஆதரவாளர்களுக்கு நியூசிலாந்து மக்கள் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.




இந்தியாவில் சீக்கியர்கள் அதிகம் வசிக்கும் பஞ்சாப் மாநிலத்தை தனியாக பிரித்து காலிஸ்தான் என்ற பெயரில் புதிய நாட்டை உருவாக்க வேண்டும் என்று காலிஸ்தான் தீவிரவாதிகள் கோரி வருகின்றனர். அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் திரைமறைவில் செயல்படும் காலிஸ்தான் தீவிரவாதிகள், இந்தியாவுக்கு எதிராக பல்வேறு சதிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரை தலைமையிடமாகக் கொண்டு "சீக்கியருக்கான நீதி" என்ற அமைப்பு செயல்படுகிறது. இந்த அமைப்புக்கு கடந்த 2019ஆம் ஆண்டில் மத்திய அரசு தடை விதித்தது. எஸ்எப்ஜே சார்பில் அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் பேரணி, ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த வரிசையில் காலிஸ்தான் தனி நாடு கோரி கடந்த 17ஆம் திகதி நியூசிலாந்தின் ஒக்லாந்து நகரில் பேரணி நடத்தப்பட்டது. இதற்கு நியூசிலாந்து மக்கள் கடும் எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர்.

பேரணியின்போது, ஓர் இளைஞர் கையில் ஒலிபெருக்கியுடன் வந்து காலிஸ்தான் ஆதரவாளர்களுக்கு பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தார்.



# 2025 ஐபிஎல் மெகா ஏலம் சவூதியில் இன்று ஆரம்பம்

தொகுப்பு - ஆர்.மனோ

இந்தியன்பிரீமியர்லீக்(ஐபிஎல்)2025தொடருக்கான எதிர்பார்ப்பு தற்போதிருந்தே அதிகரித்து வருகிறது. இந்நிலையில், ஐபிஎல் கிரிக்கெட் தொடருக்கான மெகா ஏலம் இன்றும், நாளையும் (நவ.24, 25) சவூதியின் ஜெட்டா நகரில் இடம்பெறவுள்ளது. இதற்காக அனைத்து ஐபிஎல் அணிகளும் தீவிரமாக தயாராகி வியூகங்களை வகுத்துள்ளன.

மெகா ஏலத்திற்கு முன்பு ஒவ்வொரு அணியும் ஆறு வீரர்களை தக்க வைத்துக் கொள்ளலாம் என்று ஐபிஎல் நிர்வாகம் அறிவித்திருக்கின்றது. அதன்படி 10 அணிகளும் தாங்கள் தக்க வைத்துள்ள வீரர்களின் விவரங்களை அறிவித்துவிட்டன.

ஏலத்திற்கு முன்பே வீரர்களை தக்க வைத்துக் கொள்கிறோம் என்று கூறினால் ஒவ்வொரு வீரர்களுக்கும் என்ன சம்பளம் வழங்க வேண்டும் என்பதையும் இந்திய கிரிக்கெட் பேரவை அறிவித்திருந்தது.

அதன்படி முதலாவதாக தக்கவைக்கப்படும் வீரருக்கு 18 கோடி ரூபாயும், இரண்டாவது வீரருக்கு14 கோடி ரூபாயும், மூன்றாவது வீரருக்கு 11 கோடி ரூபாயும், நான்காவது வீரருக்கு 18 கோடி ரூபாயும், ஐந்தாவது வீரருக்கு 14 கோடி ரூபாயும் வழங்க வேண்டும்.

அது மட்டுமல்லாமல் இந்திய அணிக்காக சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடாத வீரர்களை தக்க வைத்துக் கொண்டால் அவர்களுக்கு அதிகபட்சமாக நான்கு கோடி ஷரூபாய் வழங்கப்பட வேண்டும். அதன்படி ஆறு வீரர்கள் இந்திய வீரர்களாகவும் இருக்கலாம் அல்லது வெளிநாட்டு வீரர்களாகவும் இருக்கலாம். ஆறு வீரர்களை தக்க வைக்காமல், அனைவரையும் ரிலீஸ் செய்யும் அணி ஏலத்தின் போது ஆறு rtm கார்டை பயன்படுத்தி வீரர்களை வாங்கிக் கொள்ளலாம்.

## ஐபிஎல் அணிகளும், தக்கவைக்கப்பட்ட வீரர்களும்

ஐபிஎல் 2025 மெகா ஏலத்திற்கு முன்னதாக, ஒவ்வொரு அணியும் தங்கள் அணியில் தக்கவைக்கும் வீரர்களின் பட்டியலை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு ஒக்டோபர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

இதனையடுத்து, ஒவ்வொரு அணியும் தங்கள் அணியில் தக்கவைத்துள்ள வீரர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

- **சென்னை சூப்பர் கிங்ஸ் [சிஎஸ்கே]:** எம்எஸ் தோனி (நான்கு கோடி இந்திய ரூபாய்), ரவீந்திர ஜடேஜா (18 கோடி இந்திய ரூபாய்), ருதுராஜ் கெய்க்வாட் (18 கோடி இந்திய ரூபாய்), ஷிவம் துபே (12 கோடி இந்திய ரூபாய்), மதீஷ பத்திரன (13 கோடி இந்திய ரூபாய்).
- **ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் [ஆர்சிபி]:** விராட் கோலி (21 கோடி இந்திய ரூபாய்), யாஷ் தயாள் (ஐந்து கோடி இந்திய ரூபாய்), ரஜத் படிதார் (11 கோடி இந்திய ரூபாய்).
- **குஜராத் டைட்டன்ஸ் [ஜிடி]:** ஷுப்மன் கில் (16.5 கோடி இந்திய ரூபாய்), ரஷித் கான் (18 கோடி இந்திய ரூபாய்), பி சாய் சுதர்சன் (8.5 கோடி இந்திய ரூபாய்), ராகுல் தீவட்டியா (நான்கு கோடி இந்திய ரூபாய்), ஷாருக் கான் (நான்கு கோடி இந்திய ரூபாய்).
- **கொல்கத்தா நைட் ரைடர்ஸ் [கேகேஆர்]:** சுனில் நரைன் (12 கோடி இந்திய ரூபாய்), ரின்கு சிங் (13 கோடி இந்திய ரூபாய்), ஹர்ஷித் ராணா (நான்கு கோடி இந்திய ரூபாய்), ஆண்ட்ரே ரசல் (12 கோடி இந்திய ரூபாய்), ரமன்தீப் சிங் (நான்கு கோடி இந்திய ரூபாய்), வருண் சக்ரவர்த்தி (12 கோடி இந்திய ரூபாய்).
- **சன்ரைசர்ஸ் ஹைதராபாத் [எஸ்ஆர்எச்]:** ஹென்ரிச் கிளாசென் (23 கோடி இந்திய ரூபாய்), பட் கம்மின்ஸ் (18 கோடி இந்திய ரூபாய்), அபிஷேக் ஷர்மா (14 கோடி இந்திய ரூபாய்), டிராவிஸ் ஹெட் (14 கோடி இந்திய ரூபாய்), நிதிஷ் குமார் ரெட்டி (6 கோடி இந்திய ரூபாய்).
- **டெல்லி கேப்பிடல்ஸ் [டிசி]:** அக்சர் படேல் (16.5 கோடி இந்திய ரூபாய்), குல்தீப் யாதவ் (13.25 கோடி இந்திய ரூபாய்), டிரிஸ்டன் ஸ்டப்ஸ் (10 கோடி இந்திய ரூபாய்), அபிஷேக் போரல் (நான்கு கோடி இந்திய ரூபாய்).
- **ரோஜஸ்தான் ரோயல்ஸ் [ஆர்ஆர்]:** சஞ்சு சாம்சன் (18 கோடி இந்திய ரூபாய்), யஷஸ்வி ஜெய்ஸ்வால் (18 கோடி இந்திய ரூபாய்), ரியான் பராக் (14 கோடி இந்திய ரூபாய்), துருவ் ஜுரல் (14 கோடி இந்திய ரூபாய்), ஷிம்ரோன் ஹெட்மியர் (11 கோடி இந்திய ரூபாய்), சந்தீப் ஷர்மா (நான்கு கோடி இந்திய ரூபாய்).
- **லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் [எல்எஸ்ஜி]:** நிக்கோலஸ் பூரன் (21 கோடி இந்திய ரூபாய்), மயங்க் யாதவ் (11 கோடி இந்திய ரூபாய்), ரவி பிஷ்னோய் (11 கோடி இந்திய ரூபாய்), மொஹ்சின் கான் (நான்கு கோடி இந்திய ரூபாய்), ஆயுஷ் படோனி (நான்கு கோடி இந்திய ரூபாய்).

பஞ்சாப் கிங்ஸ் (பிபிகேஎஸ்): ஷஷாங்க் சிங் (5.5 கோடி இந்திய ரூபாய்), பிரப்சிம்ரன் சிங் (நான்கு கோடி இந்திய ரூபாய்).

- **மும்பை இந்தியன்ஸ் [எம்ஐ]:** ஜஸ்ப்ரீத் பும்ரா (18 கோடி இந்திய ரூபாய்), சூர்யகுமார் யாதவ் (16.35 கோடி இந்திய ரூபாய்), ஹர்திக் பாண்டியா (16.35 கோடி இந்திய ரூபாய்), ரோஹித் ஷர்மா (16.30 கோடி இந்திய ஷரூபாய்), திலக் வர்மா (எட்டுக் கோடி இந்திய ரூபாய்).



போட்டிகள் வழக்கம் போல் மார்ச் இறுதி முதல் மே இறுதி வரை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அணியின் வரவு செலவுகள்:

அணி உரிமையாளர்கள் வீரர்களை வாங்க அதிகபட்ச 120 கோடி இந்திய ரூபாய்களை செலவு செய்ய முடியும். தற்போதைய நிலையில். மொத்தமாக 656.75 கோடியை ஏலத்தில் வைத்துள்ளனர்.

வெறும் 9.5 கோடியை இரண்டு தக்கவைக்கப்பட்ட வீரர்களுக்காக செலவிட்ட பஞ்சாப் கிங்ஸ் மெகா ஏலத்தில் செலவழிக்க 110.5 கோடி என்ற மிகப்பெரிய தொகையை கொண்டுள்ளது.

**ஐபிஎல் தொடர்களும், திகதியும்**

திகதி - நவம்பர் 24,25
நேரம் -பிற்பகல் 3.00.
இடம் - ஜெட்டா, சவூதி அரேபியா.
வீரர்கள் - 574.
இந்திய வீரர்கள்-366.
வெளிநாட்டு வீரர்கள்-208.









## அதிகபட்ச வீரர்கள் குழாம்:

ஒவ்வொரு அணியும் அதிகபட்சமாக 25 வீரர்களை கொண்ட குழாமை உருவாக்க வேண்டும். இதுவரை 10 அணிகள் மொத்தம் 46 வீரர்களை தக்கவைத்துள்ளன.

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் ஹென்ரிச் கிளாசென் அதிகபட்சமாக 23 கோடிக்கு தக்கவைக்கப்பட்டுள்ளார். விராட் கோலி21கோடிக்குதக்கவைக்கப்பட்டுள்ளார். அதேபோல், மும்பை அணியில் ஜஸ்பிரித் பும்ரா 18 கோடிக்கு தக்கவைக்கப்பட்டுள்ளார்.

நடப்பு செம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர், டெல்லிய அணியின் தலைவ் ரிஷப் பந்த் மற்றும் லக்னோ அணியின் தலைவர் கேஎல் ராகுல் ஆகியோர் அணியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆச்சரியப்படும் விதமாக, அண்மையில் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்ற இங்கிலாந்து அணியின் ஜேம்ஸ் அண்டர்சனும் 2012 பருவத்திற்கு பிறகு முதல் முறையாக வரவிருக்கும் ஏலத்தில் இணைந்துள்ளார்.

கடந்த ஆண்டு அதிக தொகைக்கு (24.50 கோடிக்கு) வாங்கப்பட்ட மிட்செல் ஸ்டார்க், ஜோஃப்ரா ஆர்ச்சர், ககிசோ ரபாடா உள்ளிட்ட வேகப்பந்து வீச்சாளர்களும் ஏலத்தில் பதிவு செய்துள்ளனர்.

கடந்த காலத்தைப் போலவே, இரண்டு கோடி என்பது ஒரு வீரர் பதிவு செய்யக்கூடிய அதிகபட்ச அடிப்படை விலையாகும். எனினும், இம்முறை குறைந்தபட்சத் தொகை 20 லட்சத்தில் இருந்து 30 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏலத்திற்கு முதற்கட்டமாக 1,165 இந்தியர்கள், 409 வெளிநாட்டவர்கள் என்று மொத்தம் 1,574 வீரர்கள் பதிவு செய்திருந்தனர். இதில் 48 இந்தியர்கள் உள்பட 320 வீரர்கள் சர்வதேச போட்டியில் ஆடியவர்கள் ஆவர்.

இந்நிலையில் பதிவு செய்யப்பட்ட 1574 வீரர்களின் எண்ணிக்கை தற்போது 574 ஆக குறைக்கப்பட்டு இறுதி கட்ட பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் 366 இந்தியர்கள் மற்றும் 208 வெளிநாட்டு வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். 10 அணிகள் மொத்தம் 204 இடங்களை நிரப்ப வேண்டும், அவற்றில் 70 வெளிநாட்டு வீரர்களுக்கானது.





மெகா ஏலத்தில் பங்கேற்கும் சீனியர் வீரர் என்ற பெருமையை 42 வயதாகும் இங்கிலாந்து அணியின் ஜேம்ஸ் ஆண்டர்சன் பெற்றுள்ளார். அதேபோல், மெகா ஏலத்தில் பங்கேற்கும் சிறிய வீரராக பீகார் மாநிலத்தைச் சேர்ந்த 13 வயதாகும் வைபவ் சூர்யவன்ஷி தேர்வாகியுள்ளார்.

இவர் ஏற்கனவே இந்திய 19 வயதுக்கு உட்பட்ட அணியில் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, ரஞ்சி டிராபி தொடரிலும் விளையாடி வருகிறார்.

அதுமட்டுமல்லாமல் ஐபிஎல் மெகா ஏலத்தில் முதல் செட்டில் வரவுள்ள வீரர்களின் பட்டியல் வெளியாகியுள்ளது.

அதில், ஜோஸ் பட்லர், ஸ்ரேயாஸ் ஐயர், ககிசோ ரபாடா, ரிஷப் பண்ட், அர்ஷ்தீப் சிங் மற்றும் மிட்சல் ஸ்டார்க் இடம்பெற்றுள்ளனர். இரண்டாவது செட்டில் சாஹல், லிவிங்ஸ்டன், மில்லர், கேஎல் ராகுல், ஷமி, சிராஜ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மூன்றாவது செட்டில் ப்ஷரூக், கான்வே, ஜேக் ஃ பிரேசர், மார்க்ரம், படிக்கல், த்ரிப்பாட்டி, வார்னர் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

நான்காவது செட்டில் ஆர்.அஸ்வின், வெங்கடேஷ் ஐயர், மிட்சல் மார்ஷ், மேக்ஸ்வெல், ஹர்சல் படேல், ரச்சின் ரவீந்திரா, ஸ்டாய்னிஸ் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

ஐந்தாவது செட்டில் விக்கெட் கீப்பர்களான பேர்ஸ்டோவ், டி காக், குர்பாஸ், இஷான் கிஷன், சால்ட் மற்றும் ஜித்தேஷ் சர்மா ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

நடராஜன், போல்ட், ஹேசல்வுட், பிரசித் கிருஷ்ணா, நார்கியே, கலீல் அஹ்மத் உள்ளிட்டோர் ஆறாவது செட்டில் இடம்பெற்றுள்ளனர். மேலும், அவுஸ்திரேலியா அணியின் கெமரூன் க்ரீன் மெகா ஏலத்தில் பதிவு செய்யப்படவில்லை என்று தெரிய வந்துள்ளது.

இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஆர்ச்சரின் பெயர் ஏலப் பட்டியலில் இடம்பெறவில்லை என்பதும் குறிப் பிடத்தக்கது.

## அணிகளும் மீதம் வைத்துள்ள தொகையும்

ஐபிஎல் தொடர்களும், திகதியும்

ESPN இன் அறிக்கையின்படி, இந்தியன் பிரீமியர் லீக்கின் (ஐபிஎல்) அடுத்த சீசன் 2025 மார்ச் 14 முதல் தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் இறுதிப் போட்டியானது மே 25 ஆம் திகதி நடைபெறும் என்றும் ESPN கூறியுள்ளது.

அதேநேரம், இதுவரை கண்டிராத வகையில், அடுத்த மூன்று ஐபிஎல் சீசன்களுக்கான திகதிகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, மேற்கண்ட 2025 ஐபிஎல் சீசனுக்கான திகதியை தவிர 2026 சீசன் மார்ச் 15 முதல் மே 31 வரையிலும், 2027 சீசன் மார்ச் 14 முதல் மே 30 வரையிலும் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று சீசன்களைப் போலவே 2025 சீசனிலும் 74 போட்டிகள் இடம்பெறும் என தெரிவிக் கப்பட்டுள்ளது.

**ஐபிஎல் 2025 மெகா ஏலத்தின் சுருக்கம்**

| அணிகள் | செலவு செய்த தொகை | மீதமுள்ள தொகை |
|---|---|---|
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 65 கோடி | 55 கோடி |
| டெல்லி கெப்பிடல்ஸ் | 43.75 கோடி | 76.25 கோடி |
| குஜராத் டைட்டன்ஸ் | 51 கோடி | 69 கோடி |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 57 கோடி | 63 கோடி |
| லக்னோ சப்பர் ஜெயன்ட்ஸ் | 51 கோடி | 69 கோடி |
| மும்பை இந்தியன்ஸ் | 75 கோடி | 45 கோடி |
| பஞ்சாப் கிங்ஸ் | 9.50 கோடி | 110.50 கோடி |
| ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் | 37 கோடி | 83 கோடி |
| ராஜஸ்தான் ரோயல்ஸ் | 76 கோடி | 41 கோடி |
| சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | 75 கோடி | 45 கோடி |



இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 நவம்பர் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

# முஸ்லிம் நாடாளுமன்ற பிரதிநிதித்துவமும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களும்

-எம்.எஸ். அமீர் ஹுசைன்

பத்தாவது நாடாளுமன்றத்திற்கு மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் முடிந்து விட்டது. 225 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதோடு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் புதிய அமைச்சரவையும் நியமிக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியின் பலம் 6,863,186 வாக்குகளும் 159 ஆசனங்களாகும். மூன்றில் இரண்டிற்கும் மேற்பட்ட பலத்துடன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியை அமைத்திருக்கின்றது. இந்த தேர்தல் முடிவுகளின்படி எதிர்க்கட்சியின் பலம் 66 ஆசனங்களாகும். இதில் தேசிய மக்கள் சக்தி 40 ஆசனங்களுடனும், புதிய ஜனநாயக முன்னணி 05 ஆசனங்கள், பொதுஜன பெரமுன 03 ஆசனங்கள், தமிழரசுக் கட்சி 08 ஆசனங்கள், ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் கட்சி 03 ஆசனங்கள், ஐக்கிய தேசிய கட்சி 01 ஆசனம், என்ற அடிப்படையில் எதிர்க்கட்சி ஆசனங்கள் உள்ளன.

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அப்போதைய அரசாங்கம் 145 ஆசனங்களை பெற்றிருந்ததோடு எதிர்க்கட்சியின் பலம் 75 ஆக இருந்தது. ஆனால் , இம்முறை தேசிய மக்கள் சக்தியின் அமோக வெற்றி காரணமாக ஐக்கிய மக்கள் சக்தி, தமிழரசுக் கட்சி முன்னைய தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகியவற்றின் ஆசனங்களும் குறைவடைந்து இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது. மறுபுறமாக பார்க்கின்ற போது சிறுபான்மை பிரதிநிதித்துவம் தொடர்பான அவதானம் மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. இந்த தேர்தலில் ஆரம்பம் முதலே களத்தில் போட்டியிட்ட முஸ்லிம் வேட்பாளர்கள் பாரிய சவால்களையும் எதிர்ப்புக்களையும் சந்திக்க வேண்டி ஏற்பட்டது எனலாம்.

அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டம், திகாமடுல்லை மாவட்டம், புத்தளம், வன்னி, கண்டி, கொழும்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் போட்டியிட்ட முஸ்லிம் வேட்பாளர்களே கடுமையான எதிர்ப்புக்களையும் சவால்களையும் சந்திக்க வேண்டி இருந்தது. ஏற்கனவே , முன்னைய நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகளாக இருந்த ரவுப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன், கபீர் ஹாஷிம், ஏ.எல்.எம். அதாஉல்லாஹ், மரிக்கார், முஜீபுர் ரஹ்மான் போன்றவர்களே இவ்வாறான சவால்களை சந்தித்தவர்களாவர். ஆனாலும், இவர்களில் ஹக்கீம், ரிசாத், கபீர், மரிக்கார், முஜீபுர் ரஹ்மான் போன்றவர்கள் பலமான எதிர்ப்பலைகளையும் சமாளித்து ஒருவாறு ஆசனங்களை தக்கவைத்துக் கொண்டுள்ளனர்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி) யில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிட்ட 25 முஸ்லிம் பிரதிநிதிகளில் 08 பேர் வெற்றி பெற்று தெரிவாகி இருப்பதோடு தேசிய பட்டியல் மூலம் ஒரு அசனத்துடன் 09 முஸ்லிம் பிரதிநிதிகள் நாடாளுமன்றம் வந்துள்ளனர்.



இவ்வாறாக இந்த நாடாளுமன்றத்தில் மக்களின் நேரடி வாக்குகளின் மூலம் மொத்தம் 17 முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவான நிலையில் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றனர். அவ்வாறே, வடக்கு கிழக்கு மலையகம் உட்பட தமிழ் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அதே அளவான பிரதிநிதிகள் உள்ளனர்.

இதேவேளை, நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் மூலம் விஷேடமாக முஸ்லிம் பிரதிநிதிகள் கற்க வேண்டிய பாடம் என்ன என்பதில் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. தேர்தல்கால பிரசாரங்களில் கூறப்பட்ட ஒரு விடயம் ரவுப் ஹக்கீம், கபீர், ரிசாத், முஜீபுர் ரஹ்மான் போன்றவர்கள் இனி அவசியம் இல்லை, அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டும் என்பதாக அமைந்திருந்தது. ஆனாலும், இவர்கள் கடந்த கலங்களில் முக்கிய சந்தர்ப்பங்களில் முஸ்லிம் சமூகத்தின் குரலாக ஒலித்து பாரிய பங்களிப்புக்களை செய்து வந்துள்ளனர். அத்துடன், அவர்கள் கடந்த பல வருடங்களாக நாட்டில் பெரும்பான்மை சமூகத்தில் இருந்து கிளம்பிய பௌத்த தீவிரவாத அலை காரணமாக கடுமையான எதிர்ப்புக்களையும் அச்சுறுத்தல்களையும் சந்தித்து வந்துள்ளனர். ஒரு வகையில் திட்டமிட்ட அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தின் குரலை முடக்க வேண்டும் என்ற நோக்கில் இத்தகையவர்களுக்கு எதிரான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன எனலாம்.

மறுபுறமாக இவர்களது அரசியல் பங்களிப்பு சமூகம் குறித்த ஈடுபாடு போன்றவற்றில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக தோற்றுவிக்கப்பட்ட எதிர்ப்பை தலைமேல் சுமந்தவர்களாக மக்களும் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அதிலும் இத்தகையவர்கள் சேவை என்ற அடிப்படையில் பதவியில் இருந்த காலத்தில் அவர்களது தொகுதிக்கு என்ன செய்தார்கள், முஸ்லிம் சமூக நலன், முன்னேற்றம் என்ற அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய பங்களிப்பு எதுவும் இல்லை என்ற அடிப்படையில் எதிர்ப்பு கிளம்பி இருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்த தேர்தலில் முன்னைய முஸ்லிம் பிரதிநிதிகள் சிலர் தோல்வியடைந்தமை மற்றும் வெற்றி பெற்றவர்கள் இலகுவாக வெற்றி பெறாததற்கான காரணங்கள் யாவை என்பதை சரியாக புரிந்துகொண்டால் எதிர்காலத்தில் அத்தகைய தவறுகள் நடக்காமல் சரிப்படுத்திக் கொள்ள முடியும்.

இந்த பிரதிநிதிகளில் அதிகமானவர்கள் தமது தொகுதி மக்களை சரியான முறையில் அணுகாமை, அவர்களது நலன்கள் தொடர்பாக அக்கறை செலுத்தாமை, பிரச்சினைகளை கேட்டறிந்து அவற்றை சமூக மயப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்காமை, தீர்வுகளை பெற்றுக்கொடுக்க முன்வராமை போன்ற காரணிகளால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட வெறுப்புணர்வு அரசியல் ரீதியான விரக்தி நிலையை தோற்றுவித்து எதிர்ப்பு வாக்குகளாக மாறியுள்ளன எனலாம். எனவே , இனியாவது மேற்படி முஸ்லிம் பிரதிநிதிகள் சமூகம் சார்ந்த பொறுப்புணர்வு எத்தகையது என்பதை ஆழமாக புரிந்து கொண்டவர்களாக , மக்களுக்கு நெருக்கமானவர்களாக மாற வேண்டும். அடிக்கடி மக்களை சந்திக்க செல்லவேண்டும். மக்கள் அவர்களை தொடர்பு கொள்ளும்போது அவர்களுக்கு சரியான முறையில் செவிசாய்த்து பதிலளிக்க வேண்டும். மரபு ரீதியாகவே அரசியல்வாதி ஒருவர் மக்களின் காலடிக்கு போவது தேர்தல் நெருங்கும் போது மட்டுமே என்றாகிவிட்டது. வாக்குகளை பெற்று தமது ஆசனத்தை காப்பாற்றிக் கொள்வதற்காகவே அவ்வாறு செய்கின்றனர். தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் அனைத்தையும் மறந்து ஒன்றில் தொகுதியை மறந்து விடுகின்றனர், அல்லது கொழும்போடு நின்று விடுகின்றனர்.

அவர்களது பிரத்தியேக செயலாளர்களும் குறித்த பிரதிநிதிக்கு மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கை தக்கவைத்துக் கொள்ளக் கூட முற்படுவதில்லை. இத்தகைய நிலை எற்பட இடமளிப்பதன் மூலமே அது தேர்தல்களின் போது எதிர்ப்பு வாக்குகளாக அமைகின்றன.

ஆளும் கட்சியில் முஸ்லிம் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் மீது பொறுப்பும் கடமையும் இருப்பது போன்று எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்களது பொறுப்பும் அக்கறையும் மிகவும் உயர்வான நிலையில் இருக்க வேண்டும். இன்றேல் இந்தத் தேர்தல் முற்றாக முன்னைய நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த 90 இற்கும் மேற்பட்டவர்களை அரசியலில் இருந்து ஓரம் கட்டி வீட்டுக்கு அனுப்பியது போன்று அடுத்த தேர்தலிலும் அதே நிலை ஏற்படலாம்.

நாட்டின் அபிவிருத்தியில் முஸ்லிம் சமூகம் சார்ந்த பங்களிப்பு, முஸ்லிம் சமூகத்திற்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் விதமாக அரசாங்கமும் அதன் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவார்களேயானால் அதன்போது முஸ்லிம் பிரதிநிதிகள் தாம் சார்ந்த சமூகத்தின் நலனை கருத்தில் கொண்டு தமது குரல்களை எழுப்ப வேண்டியதும் கட்டாயமாகும்.

சில சந்தர்ப்பங்களில் ஆளும் கட்சி மற்றும் எதிரணி முஸ்லிம் பிரதிநிதிகள் கூட்டாக இணைந்து ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய நிலைமைகளும் ஏற்படலாம். அத்துடன் தாம் பதவி வகிக்கின்ற காலத்தில் மக்களுக்கு செய்யும் சேவைகள் தொடர்பாக முறையாக தகவல் சேகரிப்பு மற்றும், ஆவணப்படுத்தல் அவசியமாகின்றது. அதே போன்று முஸ்லிம் சமூகமும் இந்த முஸ்லிம் பிரதிநிதிகள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தியவர்களாக உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்க வேண்டும்.அடுத்த தேர்தல் நெருங்கும் போது இவர்கள் மக்கள் முன்வரும் போது“நீங்கள் என்ன செய்தீர்கள் ..? “ என்று கேள்வி எழுப்பாத வகையில் முஸ்லீம் பிரதிநிதிகள் செயற்படல் வேண்டும்.

எமது முஸ்லிம் சமூகம் எப்போதும் நடப்பு விவகாரங்களில் கவனம் செலுத்தக் கூடியவர்களாக செயற்பட வேண்டிய தேவை இருக்கின்றது. மாறாக, கண்மூடித்தனமாக இருந்துவிட்டு இறுதி நேரத்தில் சேறு பூசும் வேலைகள் அல்லது மோசமான விமர்சனங்களில் ஈடுபட்டு கல் எறிதல், குழப்பம் விளைவித்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவதை தவிர்த்து விட்டு இந்த 22 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சமூக நோக்கில் எவ்வாறு செயற்படுகின்றார்கள் என்பதை தொடராக கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும். அப்போதே சரியான இலக்கை அடையச் செய்வதில் வெற்றி காண முடியும் என்பதே நிதர்சனமாகும்.

> முஸ்லிம் பிரதிநிதிகளில் அநேகர் தமது தொகுதி மக்களை அணுகாமை, அவர்களின் நலன்களில் அக்கறை செலுத்தாமை, பிரச்சினைகளை சமூக மயப்படுத்த நடவடிக்கை எடுக்காமை போன்ற காரணிகளால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட வெறுப்புணர்வு அரசியல் ரீதியான விரக்தி நிலையை தோற்றுவித்து அவை எதிர்ப்பு வாக்குகளாக மாறியுள்ளன

## பஸ் கொடுமைகள்...



பஸ்ஸில் பயணம் செய்யும் போது அநேகர் யன்னல் ஓர இருக்கையை விரும்புவதுண்டு .. இயற்கை காட்சிகளை இரசிக்கும் ஆவலாகவே அது இருப்பதுண்டு... ஆனால், இப்போதெல்லாம் யன்னல் ஓரத்தை விரும்புவதன் காரணம், மறுகரையில் அமர்ந்திருந்தால் நின்று கொண்டு செல்லும் பயணிகளின் பேக்குகள் (பைகள்) தலையில் இடிக்கும் இடியிலிருந்து தப்பிக்கத் தான் என்றாகிவிட்டது.

---------------------------------------

பஸ்ஸில் பயணிக்கும் போது பஸ் சாரதி வெற்றிலை சுருளை கையில் எடுத்தால் அவ்வளவு தான், பயணிகள் தலையில் கையை வைக்க வேண்டியது தான் .. அவர் வெற்றிலையை அசைபோட்டு குதப்பி உமிழும் வரையில் பயணிகள் சிலையாகி காத்திருக்க வேண்டியது தான்.. நடத்துனரோ படு உஷாராக போகும் இடத்தை கூவுவதில் மட்டும் குறைச்சல் இருக்காது.. ஆனால் பஸ்ஸோ அதே இடத்தில் தான் .. நகரவே நகரமாட்டாது ..

---------------------------------------



ஒரு காலத்தில் காது கேளாதவர்கள் தான் காதில் செவிகேள் கருவியை பொருத்தியிருந்தார்கள் .. ஆனால், இப்போதோ பஸ் நடத்துனர் பயணிகளிடம் பஸ் கட்டணத்தை கேட்டாலும் பயணிகளின் காதில் அது கேட்பதில்லை. காரணம், அநேகரின் காதில் “ஹெட் செட்“ , அல்லது “ஹியர் ஃபோன்“ தான் தொங்கிக் கொண்டிருக்கும் .. ஒரு வகையில் இவர்களும் காது கேளாத பயணிகள் ஆகிவிட்டனர்.

---------------------------------------

அநேகமான பஸ் ஓட்டுனர்கள் “சர்க்கஸ்காரர்கள்“ ஆகிவிட்டனர்.. அவர்கள் முன்பக்கம் பார்த்துக் கொண்டு பஸ்ஸை ஓட்டுவதில்லை, பின்புறம் பார்த்துக் கொண்டு தான் பஸ்ஸை ஓட்டுகின்றனர் .. போட்டியாக வரும் பஸ் பின்னாலே வருகின்றதா என பார்ப்பதிலேயே இவ்வாறு அவர்களின் சர்க்கஸ் நேரம் போய் விடுகின்றது ..

---------------------------------------

பஸ்ஸில் அவசரமாக பயணம் செல்கையில், பஸ் சாரதி திடீரென பஸ்ஸை பெற்றோல் ஷெட்டுக்குள் செலுத்தும் சந்தர்ப்பம் இருக்கின்றதே, அதன் போது பயணிகளுக்கு வரும் ஆத்திரம் இருக்கின்றதே.. அப்பப்பா என்னவென்பது.. பாவம் பயணிகள்.. ஆளுக்காள் முகத்தை பார்ப்பதுடன் எல்லாமே முடிந்து விடுகின்றது .. அவர்களால் முடிந்தது அவ்வளவு தான் -

**- ரிஷா**





# பல்சுவை பார்வை

ஆர்.ராஜலிங்கம்



## கற்பாறையாக மாறிய இளம்பெண்

இளம் பெண்ணொருவர் கற்பாறையாக உருமாறி ஓர் இன மக்களின் காக்கும் தெய்வமாக வழிபடப்பட்டு வருகிறார். சீனாவில்தான் இது நடந்து வருகிறது.

மரம், செடி, கொடிகள் அடர்ந்த காடுகளைத்தான் கண்டிருக்கிறோம். ஆனால் சீனாவில் உள்ள ஒரு காடு கற்பாறைகளால் அமைந்துள்ளது.

இது சீனாவின் யுன்னான் மாகாணத்தில் உள்ளது. இதனை கற்பாறைக்காடு என்று அழைக்கின்றனர். இந்தக் காட்டுக்குள் பற்றி கூறப்படுவதாவது, வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் இது ஒரு பெரிய கடலாக இருந்ததாம். சுமார் 250 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் கடலின் அடிப்பகுதி உயர்ந்து கடலுக்கு அடியில் இருந்த சுண்ணாம்புக் கல் மேற்பரப்புக்கு வந்ததாம். சுண்ணாம்புக்கல்




நுழைந்தால் அதற்குள் உயரமான கற்பாறைகள் நிறைந்திருப்பதைக் காணலாம். இங்கு பல்வேறு வடிவங்களில் அற்புதமான கற்பாறைகள் மற்றும் விலங்குகள், தாவரங்கள் என்பனவும் உள்ளன. அத்துடன் நீர்வீழ்ச்சிகள், குகைகள், குளங்கள் என்பனவும் மற்றும் அதிசயத்தக்க வகையில் ஒரு நிலத்தடி ஆறும் உள்ளன.

எல்லாவற்றையும்விட இங்குள்ள அஷிமா என்னும் பாறை ஷானி என்னும் இன மக்களின் காக்கும் தெய்வமாக வழிபடப்பட்டு வருகிறது.

இந்தக் காடு இரண்டு உள்ளூர் குழுக்களின் தாயகமாகவும் விளங்குகிறது. இவர்கள் நக்ஷி மற்றும் ஈ அல்லது ஷானி என்றும் அழைக்கப்படுகின்றனர். ஈ அல்லது ஷானி என்னும் குழுவினரே அதிகளவில் வசிக்கின்றனர். இவ்விரண்டு குழுவினரும் கல் வீடுகளிலேயே வசிக்கின்றனர். இவர்கள் பாறைகளால் ஆன ஆலைகளையும், கடைகளையும் நடத்துகின்றனர்.

இந்தக் காடு எப்படி உருவானது என்பது படிப்படியாக தேய்ந்து மழையால் கரைந்து போய்விட்டதாம். அதன் பின்னர் இயற்கை சூழல் மற்றும் வானிலை மாற்றங்களால் இது கற்பாறைக்காடாக உருவாவதற்கு வழி வகுத்ததாம். காலப்போக்கில் தொடர் மழை காரணமாக மண் கழுவப்பட்டு இந்தப் பாறை வடிவங்களை விட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இது இவ்வாறிருக்க இந்தக் காடுபற்றி இன்னொரு வாய்வழி கதையும் கூறப்படுகிறது. அதாவது ஒரு செல்வந்தரின் மகன் இங்கு வாழ்ந்த ஷானி இன பெண்ணான அஷிமாவைக் கடத்திச் சென்று திருமணம் செய்ய முயன்றானாம். அப்பொழுது அஷிமாவின் காதலன் அவளை மீட்பதற்கு தன்னால் இயன்றதையெல்லாம் செய்தானாம். ஆனால் அஷிமா வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு காட்டில் இப்பொழுதும் காணப்படும் அஷிமா பாறை எனப்படும் பாறையாக உருவானாளாம். இந்தப் பாறை தற்பொழுது இங்கு வாழும் ஷானி இன மக்களின் பாதுகாக்கும் தெய்வமாக வழிபடப்பட்டு வருகிறதாம்.



## குருவுக்கு ஏற்பட்ட ஆசை

ஓர் ஆசிரமம். அங்கு ஒரு குருவும் சில சிஷ்யர்களும் இருந்தனர். குரு முக்காலமும் உணர்ந்த ஞானி. அவர் தனது மரணத்தையும் அடுத்த பிறவியையும் கூட அறிந்து வைத்திருந்தார்.

அவருடைய மரணம் நெருங்கும் காலம் வந்தது. அடுத்த பிறவியில் அவர் ஒரு பன்றிக் குட்டியாக பிறக்கப்போவதையும் அறிந்து கொண்டார். ஆனாலும், பன்றியாக வாழ அவர் விரும்பவில்லை. அதனால் அவருக்கு மிகவும் விருப்பமான, நம்பிக்கையான சீடனை அழைத்து தான் இறக்கப் போகும் நாளைக் குறிப்பிட்டு அடுத்த பிறவியில் தான் பன்றியாக பிறக்கப் போவதையும், அது எங்கு நிகழும் என்பதையும் கூறினார்.

பின்னர், சிஷ்யனிடம் "எனதன்பு சிஷ்யனே. நீ இந்த குருவுக்காக ஒரு காரியம் செய்யவேண்டும். அதாவது, நீ ஒரு கத்தியுடன் வந்து என்னைக் கண்டுபிடித்து உடனே கொன்று விடவேண்டும். நான் பன்றியாக வாழ விரும்பவில்லை. என்னை நீ கண்டுபிடிப்பதற்கு ஒரு அடையாளம் சொல்கிறேன். என் இறப்புக்குப் பின்னர் ஒரு பண்ணையில் ஒரு பன்றி சில குட்டிகளை ஈன்றிருக்கும். அதில் ஒரு குட்டியின் நெற்றியில் ஒரு வெள்ளைப் புள்ளி இருக்கும். அதுதான் நான். அதைக் கொண்டு நீ என்னை இலகுவாக கண்டுபிடித்து விடலாம். என்னைப் பார்த்தவுடன் எவ்வித பட்சாதாபமும் பார்க்காமல் கத்தியால் குத்தி கொன்றுவிடு. இதுதான் நீ இந்த குருவுக்கு செலுத்தவேண்டிய பெரிய காணிக்கை" என்று கூறினார்.

சிஷ்யனும் குரு கூறுவது போல் அவரைக் கொன்றுவிடுவதே நல்லது என்று நினைத்தான். குரு கூறியதுபோல் குறிப்பிட்ட நாளில் அவருடைய மரணம் நிகழ்ந்தது.

மறுநாள் அவர் குறிப்பிட்ட அந்தப் பன்றிப் பண்ணையை நோக்கிச் சென்றான் சிஷ்யன். அவர் கூறியது போலவே ஒரு பன்றி சில குட்டிகளை ஈன்றிருந்ததைக் கண்டான். அவையெல்லாம் மலத்தில் கிடந்தும், மலத்தை உட்கொண்டும் இருப்பதைக் கண்டான். அவன் அருகில் போய் குரு கூறிய அடையாளத்தைக் கண்டுபிடித்து இதுதான் நமது குரு என்று தெரிந்து கொண்டான்.

பின்னர் அவன் அந்தப் பன்றிக் குட்டியின் அருகில்போய் "குருவே தாங்கள் கூறியது போலவே வந்து விட்டேன். இப்பொழுது நான் உங்களை இதோ இந்தக் கத்தியால் குத்திக் கொல்லப் போகிறேன்" என்று கூறினான்.

அதற்கு குரு, "சிஷ்யா, அவசரப்படாதே. இந்த வாழ்க்கை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இந்த வாழ்க்கையை அனுபவிக்க ஆசைப்படுகிறேன். அதனால் என்னைக் கொல்ல வேண்டாம். நீ திரும்பிப் போய் விடு" என்று கூறினார்.

சிஷ்யனுக்குப் புரிந்தது. குருவும் இந்த மாய வாழ்க்கையில் மூழ்கி விட்டார் என்று நினைத்துக் கொண்டு திரும்பிச் சென்றான்.

## சாதனை படைத்த டைட்டானிக் வொட்ச்!

டைட்டானிக் கப்பல் விபத்தில் நூற்றுக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியதற்காக கெப்டன் ஆர்தர் ஹென்றி ரோஸ்ட்ரானுக்கு வழங்கப்பட்ட தங்க பொக்கெட் கடிகாரம் 16 கோடி ரூபாவுக்கு விற்பனையாகி சாதனை படைத்துள்ளது.

வரலாற்றில் சிறப்புமிக்க டைட்டானிக் கப்பல் "வைட் ஸ்டார்" என்ற நிறுவனத்தால் 1911ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. கடந்த 1912இல் இந்தக் கப்பல் தனது முதல் பயணமாக சவுத்தாம்ப்டனில் இருந்து நிவ்யோர்க் நகரத்திற்குப் புறப்பட்டது. இதில் 2,200 பயணிகள் பயணித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

டைட்டானிக் கப்பல் அட்லாண்டிக் பெருங்கடலில் சென்றுகொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக பனிப்பாறையில் மோதி விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த 2,200 பயணிகளில் 1,500 பேர் தண்ணீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த நிகழ்வானது, வரலாற்றில் மோசமான கடல் விபத்துகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. மீதமிருந்த, உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த 700 பயணிகளை கெப்டன் ஆர்தர் ரோஸ்ட்ரான் காப்பாற்றினார்.

ரோஸ்ட்ரான் காப்பாற்றிய 700 பயணிகளில் ஜோன் பி தைய்யர், ஜோன் ஜேக்கப் ஆஸ்டர் மற்றும் ஜோர்ஜ் டி வைட்னர் ஆகிய மூன்று பெண்களும் அடங்குவர். இவர்கள், தங்களின் உயிரைக் காப்பாற்றியதாக கெப்டன் ஆர்தர் ரோஸ்ட்ரானுக்கு டிஃப்பனி அண்ட் கோ நிறுவனத்தின் 18 கெரட் தங்க பொக்கெட் கடிகாரத்தைப் பரிசாக அளித்தனர்.

டைட்டானிக் கப்பல் விபத்துக்குப் பிறகு அதிலிருந்து மீட்கப்பட்ட பொருட்கள் அல்லது அவை தொடர்பான நினைவுப் பொருட்கள் அவ்வப்போது ஏலத்தில் விடப்பட்டு வருவதுண்டு. அந்த வகையில் விபத்துக்குள்ளான டைட்டானிக் கப்பலிலிருந்து மீட்கப்பட்ட வயலின் கடந்த 2013இல் ரூ.11.65 கோடிக்கு ஏலத்தில் விற்கப்பட்டது.

கடந்த 11 ஆண்டுகளாக இந்த வயலின்தான் டைட்டானிக் நினைவுச் சின்னங்கள் ஏலம் விடப்பட்டதில் மிக அதிக தொகைக்கு வாங்கப்பட்ட கலைப்பொருள் என்ற சாதனையைப் படைத்திருந்தது.

இந்நிலையில் கெப்டன் ஆர்தர் ரோஸ்ட்ரானின் தங்க பொக்கெட் கடிகாரம் அந்த வயலினின் சாதனையை முறியடித்து உலக சாதனைப் படைத்துள்ளது.



## சாதனை செய்த ரயில் சாரதி

அந்த ஊரில் ரயில்கள் நேரத்துக்கு வருவதே இல்லை. தினமும் ரயில்கள் ஒரு மணித்தியாலம் 2 மணித்தியாலம் மூன்று மணித்தியாலம் 4 மணித்தியாலம் ஏன் ஐந்து, ஆறு மணித்தியாலங்களுக்குமேல் கூட தாமதமாக வருவதுண்டு. ரயில் பயணத்தில் அந்த ஊர் மக்கள் மிகுந்த வெறுப்படைந்திருந்தார்கள்.

ரயில் என்றால் அது நிச்சயமாக தாமதமாகத்தான் வரும் என்று அவர்கள் தீர்மானமாகவே நினைத்திருந்தார்கள்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் ஓர் அதிசய நிகழ்வு நடந்தது. எல்லோரும் ரயில் வருவதை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த சமயம் ரயில் அன்று அதிசயிக்கும் வகையில் சரியான நேரத்துக்கு வந்துவிட்டது. பயணிகளுக்கெல்லாம் ஒரே ஆச்சரியமும் மகிழ்ச்சியும்.

ரயில் சாரதியை ஆஹா ஓஹோ என்று புகழத் தொடங்கினார்கள். பயணிகள் சிலர் "இப்படிப்பட்ட சாரதியை நாம் கௌரவித்தே ஆக வேண்டும்" என்று கூறி அருகில் உள்ள கடைக்கு ஓடிப் போய் பெரிய மாலை ஒன்றையும் வாங்கிக்கொண்டு வந்தார்கள்.

பின்னர் ரயில் சாரதியிடம் போய் அவரை வானலாவ புகழ்ந்து "நீங்கள் மகா கெட்டிக்காரர். சூராதி சூரர்" என்று கூறி மாலையை அவர் கழுத்தில் அணிவித்தார்கள். அவர் வளைந்து நெளிந்து, உடலை கோணலாக்கிக் கொண்டு அசட்டு புன்னகையொன்றை செய்து கொண்டு அவர்களை பரிதாபமாகப் பார்த்தார்.

பயணிகள் அவர் தன்னடக்கம் காரணமாகத்தான் அப்படி இருக்கிறார் என்று நினைத்தபடி "ஏன் சேர், எல்லா ரயில்களும் சுணங்கியே வரும்போது நீங்கள் மட்டும் எப்படி சரியான நேரத்திற்கு வந்தீர்கள்?" என்று கேட்டனர்.

அதற்கு அவர், அசட்டுத்தனமாக சிரித்தபடி "வந்து..., இது நேற்று வர வேண்டிய ரயில்" என்று கூறினாரே பார்க்கலாம். பயணிகள் முகத்தில் எத்தகைய மாற்றம் ஏற்பட்டிருக்கும்.

(என்றோ படித்துச் சுவைத்தது)



## பகிடிவதை கொடுமைக்கு மாணவர் பலி!

குஜராத் மருத்துவ கல்லூரியில் பகிடிவதை கொடுமையால் எம்.பி.பி.எஸ் முதலாமாண்டு மாணவர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குஜராத் மாநிலம் பதான் மாவட்டம் தார்பூரில் ஜிஎம்இஆர்எஸ் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை செயல்பட்டு வருகின்றன. இங்குள்ள விடுதியில் பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் தங்கி மருத்துவம் பயின்று வருகின்றனர்.



இந்நிலையில் சில தினங்களுக்கு முன்னர் சிரேஷ்ட தர மாணவர்கள் சிலர் எம்.பி.பி.எஸ் முதலாமாண்டு மாணவர்களை பகிடிவதை செய்துள்ளனர்.

3 மணி நேரத்துக்கும் மேலாக அவர்களை நிற்க வைத்து, ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்யும்படி கொடுமைப்படுத்தியுள்ளனர். அப்போது அனில் மெத்தானியா (18) என்ற முதலாமாண்டு மாணவர் மயங்கி விழுந்துள்ளார். உடனே மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர் இறந்து விட்டதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

தகவலறிந்து விரைந்த பொலிஸார் அவரின் உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்த நிலையில், இச்சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு ஒரு திறந்த கடிதம்!

# முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட திருத்தம் தொடர்பாக அரசு உரியவாறு பதிலளிக்க வேண்டும்



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

அரசு முஸ்லிம் பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளை கௌரவிக்கவும் பாதுகாக்கவும் பொறுப்புடையது. நீங்கள் செயலற்றவர்களாக இருக்கப் போகின்றீர்களா? என்ற தலைப்பிட்டு தன்னார்வ சிவில் சமூக அமைப்புக்களும் சமூக செயற்பாட்டாளர்களும் இணைந்து ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஒரு திறந்த கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,



அண்மையில் வெளிவந்த காணொளி ஒன்றில், நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னர் அமைச்சரவைப் பேச்சாளராக இருந்த விஜித ஹேரத் அவர்கள், 1951ம் ஆண்டு 13ம் இலக்க முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு எந்தத் தேவையுமில்லை என்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருந்தார்.

மேலும், இந்தச் சட்டம் தொடர்பாகக் கூறப்படும் கருத்துக்களை கருத்துக்களாக மாத்திரம் பார்ப்பதாகவும், கருத்துச் சுதந்திரத்தை மதிப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார். இவருடைய பேச்சானது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள், அச்சட்டத்தை திருத்தத்திற்கு உள்ளாக்க முயற்சித்துக் கொண்டிருக்கும் செயற்பாட்டாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. வகைப் பொறுப்புக் கூற வேண்டிய அரசாங்கத்திடமிருந்து இவ்வாறான கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர் .

அரசியலமைப்பு உறுப்புரை 12 உப பிரிவு 1 இலங்கை மக்கள் அனைவரும் சட்டத்தின் முன் சரி சமமானவர்கள் என்று கூறுகின்றது. அத்துடன், இவ்வடிப்படை உரிமையானது எல்லோரும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றது. இந்த நிலையில் அரசாங்கம் என்ற வகையில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது அரசியலமைப்பின்படி அரசின் பொறுப்பாகும்.

இந்த அரசியலமைப்பினூடான அடிப்படை மனித உரிமை அறிவுறுத்தலை ஏற்றுக் கொள்ளாமல், அரசு அதன் பொறுப்பை மதத் தலைவர்கள் மீது சாட்டுவது அரசு தன் கடமையில் இருந்து விலகுவதாகவே நாங்கள் கருதுகின்றோம். தேசிய மக்கள் சக்தி அரசு, முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் உள்ள பாரபட்சங்களை சரிகாணும் நிலைப்பாட்டில் இருக்குமாயின் தற்போது அமுலில் இருக்கும் இந்த பாரபட்சமான சட்டத்தின் குறைபாடுகளால் ஏற்படுகின்ற பாரதூரமான விளைவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன முறைமைகளைக் கையாளப் போகின்றது?

மேற்குறித்த அரசியலமைப்புக் கோட்பாடுகளின் பிரகாரம், சமூகத்தில் உள்ள இளவயதுத் திருமணங்களையும், பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களையும் தடுத்து குடும்ப வாழ்வைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

மேலும், ஒரு வரைமுறை இல்லாத பலதார மணக் கோட்பாட்டில் சிக்கித் தவிக்கும் மனைவிகளையும் குழந்தைகளையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது?அத்துடன், ஆணாதிக்க கட்டமைப்பை மாத்திரம் முன்நிலைப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டமானது பெண்களை எந்த வகையிலும் உள்வாங்க முடியாத அளவு பாராபட்சத்தை வெளிபடுத்திக் கொண்டிருக்கின்றது.

குறிப்பாக காதிகள் முறைமைகள் பல சந்தர்ப்பங்களில் ஊழல் நிறைந்ததாகவும் பாரபட்சம் மிகுந்ததாகவும் இருப்பதை அவதானிக்க முடிகிறது. இது, மேற்குறிப்பிட்ட இலங்கையின் 1978ம் ஆண்டின் யாப்பின் அடிப்படை மனித உரிமை வலியுறுத்தல்களை முற்று முழுவதுமாக மீறுகின்றது. எனவே, இதனை இவ் அரசாங்கம் எவ்வாறு நிவர்த்தி செய்யப் போகின்றது? மேலும், காதி முறைமையானது முழுவதுமே அரசாங்கத்தின் பாதீட்டினூடாக வரி செலுத்துபவர்களின் வரிப்பணத்தில் இருந்து அமுல்படுத்தப்படுகின்றது. ஆகவே, இதனைக் கேள்விக்குட்படுத்துவது அரசாங்கத்தின் கடமையுடன் இந் நாட்டு மக்கள் எல்லோரதும் பொறுப்புமாகும்.



**அமைச்சரவைப் பேச்சாளராக இருந்த விஜித ஹேரத் கூறியுள்ள கருத்துக்கு சிவில் சமூக அமைப்புக்களும் சமூக செயற்பாட்டாளர்களும் அதிருப்தி தெரிவிப்பு**

எனவே, அரசாங்கம் முழுமையாக பொறுப்புக் கூற வேண்டிய விடயத்தை “இது சமூகத்தின் கருத்துச் சுதந்திரம்” என்று தட்டிக் கழிப்பது பொறுப்புக் கூறும் ஒரு அரசாங்கத்திற்கு முறையாகுமா?

ஆகையினால், அமைச்சுப் பேச்சாளர் விஜித ஹேரத் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ள கருத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். மேலும் , இது தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு என்ன? அதாவது, தேர்தல் விஞ்ஞாபனத்தில் “பெண்களுக்கு மற்றும் சிறுவர்களுக்கு பாகுபாடு காட்டுகின்ற மேலும் அழுத்தங்களுக்கு ஆளாக்குகின்ற சட்டங்களைத் திருத்துதல்”, என்று தெரிவித்திருந்த நிலையில் ஏன் தேசிய மக்கள் சக்தியின் அமைச்சரவைப் பேச்சாளர் இவ்வாறான கருத்தை ஊடகங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்?

தேசிய மக்கள் சக்தி கட்சி அரசாங்கம் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட திருத்தம் சார்ந்து அதன் நிலைப்பாடு என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டும், அப்படி இல்லாமல் நழுவிப் போவீர்களேயானால் முஸ்லிம் பெண்களுக்கு வகைப் பொறுப்புக் கூற முடியாத ஓர் ஆட்சியாகவேதான் உங்களது ஆட்சியும் அமையும்.

தேசிய மக்கள் சக்தி பாரபட்சமான கட்டமைப்புக்களை மறுசீரமைத்து எல்லோருக்கும் மாற்றத்தை உருவாக்கும் ஒரு கட்சியாக தங்களை பிரதிபலித்தமையே கடந்த தேர்தலில் நாங்கள் ஜனாதிபதிக்கு வாக்களித்ததற்கு காரணம்.

கடந்த 40 வருடங்களாக ஆட்சியில் இருந்த எல்லாக் அரசியல் கட்சிகளும் இந்தச் சட்டத்தை ஆண்களுடன் மாத்திரம் கலந்துரையாடி எந்தத் திருத்ததிற்கும் உட்படுத்தாமல் இருந்தே வந்துள்ளன. தேசிய மக்கள் சக்தி அரசும் அதே வழியில் முஸ்லிம் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் கட்டமைப்பு ரீதியாக இருக்கின்ற பாரபட்சங்களை முடிவுக்குக் கொண்டுவராமல் ஏனைய ஆட்சியாளர்கள் சென்ற வழியிலேயே கொண்டு செல்லப் போகின்றதா?

அப்படி நடக்குமாக இருந்தால் முஸ்லிம் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் ஒரு விடிவு காலத்தைக் கொடுக்காத ஒரு ஆட்சி முறையைத்தான் நீங்கள் வைத்துள்ளீர்கள் என்பது நிரூபணமாகிவிடும். அப்படி இல்லை என்றால் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் திருத்தம் தொடர்பாக தங்களது நிலைப்பாட்டை பகிரங்கமாக வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரில் இலங்கையில் செயற்பட்டு வரும் 18 உள்ளூர் தன்னார்வ சமூக சேவை அமைப்புக்களும் 135 மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் புத்திஜீவிகளும் கையொப்பமிட்டுள்ளனர்.

குடும்ப வாழ்வில் விவாகரத்து உட்பட இன்ன பிற காரணங்களால் பாதிப்பிற்குள்ளாகும் பெண்களையும் குழந்தைகளையும் பாதுகாக்க சமூக பொறுப்புக் கூறும் வகையில் முன்னெடுக்கப்படும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளில் ஓர் அங்கமாக ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளதாக காணி உரிமைகளுக்கான அம்பாறை மாவட்டச் செயலணியின் இணைப்பாளரும் மனித எழுச்சி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கே. நிஹால் அஹமட் தெரிவித்துள்ளார்.



குடும்பப் பிணக்குகள் காரணமாக நேரடியாக காழி நீதிமன்றம் சென்று விவாகரத்தினைப் பெறும் நிலையால் அதிக விவாகரத்துகள் நிகழ்வதுடன், அதனால் பெண்கள், பிள்ளைகளுடைய பாதிப்பு அதிகமாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**அரசியலமைப்புக் கோட்பாடுகளின் பிரகாரம், சமூகத்தில் உள்ள இளவயதுத் திருமணங்களையும், பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களையும் தடுத்து குடும்ப வாழ்வைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும்**

# கனவில் வந்த காரிகையைத் தேடி...?

ஆர். ராஜலிங்கம்

## அத்தியாயம் 2

அவன் முகத்தைப் பார்த்ததில் இருந்து பூங்குழலி மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாகியிருந்தாள். இரவெல்லாம் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தாள்.

“ச்சே, இவர் என்ன காரியம் செய்தார்? இவனை ஏன் இங்கு அழைத்துக்கொண்டு வரவேண்டும்? என் நிம்மதியைக்கெடுப்பதற்கா?”

இப்படி வெகுநேரம்வரை சிந்தித்துக்கொண்டிருந்தவள் பின்னர் ஒரு முடிவுக்கு வந்தாள்.

“ஆம், அதுதான் சரி. அவனை உடனே வீட்டைவிட்டுப் போகச் சொல்லவேண்டும். அவன் இங்கு இருக்கக்கூடாது”

இப்படி தீர்மானித்துக் கொண்டவள் காலை விடிந்ததும் தெளிவடைந்தாள். அதேவேளை இரவு நினைத்ததைப்பற்றி சிந்திக்கலானாள்.

“அவனை அனுப்புவதென்றால் அதற்கு என்ன காரணம் சொல்வது? நான் ஏன் வீணாக இப்படியெல்லாம் கற்பனை செய்யவேண்டும்? அவன் என்ன தவறு செய்தான்? எதுவும் இல்லையே!”

அவள் மனம் இப்பொழுது நிம்மதியாக இருப்பது போல் தெரிந்தது.

“அவன் பெற்றோரை இழந்த அநாதை என்று அவர் கூறினார். பாவம்..., அவனைப் பற்றி நான் ஏன் வீணான கற்பனைகள் செய்யவேண்டும்? அவன் இங்கு நிம்மதியாக இருந்துவிட்டுப் போகட்டும். அவனைப் பார்த்து நான் ஏன் எதையெதையோ கற்பனை செய்ய வேண்டும். பாவம் நேற்று அவனை நான் கண்டு கொள்ளாமல் இருந்து விட்டேன். இரவு சாப்பாட்டுக்கும் உபசரிக்கவில்லை. விமலாதான் சாப்பாடும் பரிமாறி இருக்கிறாள்”

இப்படி பலவாறு நினைத்துக்கொண்ட அவள் பின்னர் ராம்குமாருக்கும் அவனுக்கும் காலை உணவைப் பரிமாறினாள். அவள் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருப்பதைக் கவனித்த ராம்குமார் அவளிடம், “என்ன பூங்குழலி நேற்று ஏன் ஒரு மாதிரியாக இருந்தாய்? இரவு சாப்பாடு பரிமாறவும் வரவில்லையே! யாராவது வந்தால் விழுந்து விழுந்து உபசரிக்கும் நீ நேற்று ஏன் அப்படி இருந்தாய் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். விமலாதான் சொன்னாள் நீ மிகவும் களைப்பாக இருப்பதாகவும், அதனால் நேரத்துடனேயே படுத்து விட்டதாகவும். உன்னை டிஸ்டர்ப் பண்ண விரும்பாமல் நானும் பேசாமல் இருந்துவிட்டேன்” என்று ராம்குமார் கூறினார்.

அதற்கு பூங்குழலி, “ஆமாங்க, நேற்று எனக்கு ரொம்ப அசதியாக இருந்துச்சி. அதனால்தான் இந்த தம்பியையும் கவனிக்க முடியாமல் போய்விட்டது” என்று வருந்தியபடி கூறினாள்.

> **பூங்குழலி என்ற பெயரைக் கேட்டதிலிருந்து தீபனும் மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாகியிருந்தான். அன்று இரவு அவன் படுக்கச் சென்றதும் பூங்குழலி என்று அவர் அழைத்த அழைப்பு அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டிருப்பதுபோல் உணர்ந்தான்.**

பின்னர் அவள் ஏதோ வேலையாக உள்ளே சென்றதும் ராம்குமார் தீபனை பார்த்து, “என்ன மிஸ்டர் தீபன். பூங்குழலியைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்” என்று கேட்டார்.

“என்ன சேர் இப்படி கேட்கிறீங்க, அந்த அம்மாவோட முகத்தை பார்த்தாலே மங்களகரமா தெரியுது. உங்களுடைய மகிழ்ச்சிக்கு காரணமே அவங்கதான்னு தெரியுது. என்ன நான் சொல்வது சரிதானே”

“நிச்சயமாக சரி மிஸ்டர் தீபன். என் மனைவி இறந்த பிறகு என் பிள்ளைக்கு அவளேதான் தாயாக இருந்து நன்கு பராமரித்து வருகிறாள். கவிதா படிப்பில் கெட்டிக்காரியாக இருப்பதற்கும் கூட பூங்குழலிதான் காரணம்”

இப்படி அவர் கூறியதும் தீபன் நினைத்துக் கொண்டான், “அப்படியானால் பூங்குழலி அவருடைய இரண்டாவது மனைவி போல இருக்கு” என்று. ஆனாலும் அவன் அதைப்பற்றி எதுவும் கேட்கவில்லை. அப்படி கேட்பது நாகரிகம் இல்லை என்று நினைத்து மௌனமாக இருந்தான்.

பின்னர் இருவரும் வேலைக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இரண்டு மூன்று நாட்கள் கடந்தன.

கவிதா இப்பொழுது “அங்கிள் அங்கிள்” என்று தீபனிடம் மிகவும் நெருக்கமாக பழக ஆரம்பித்தாள். தீபன் அவளுக்கு வேண்டிய பாடங்களை எல்லாம் படிப்பித்துக் கொடுத்தான்.

அது பூங்குழலிக்கு ஓரளவுக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும் எங்கே கவிதா தன்னிடம் காட்டும் அன்பு குறைந்து விடுமோ என்று கலக்கத்தையும் ஏற்படுத்தியது.

இதேவேளை பூங்குழலி என்ற பெயரைக் கேட்டதிலிருந்து தீபனும் மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாகியிருந்தான்.

அன்று இரவு அவன் படுக்கச் சென்றதும் பூங்குழலி என்று அவர் அழைத்த அழைப்பு அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டிருப்பதுபோல் உணர்ந்தான். அதற்கு என்ன காரணம்? அது அவனுக்கும் புரியவில்லை. அந்தப் பூங்குழலி என்ற பெயர் அவனை மீண்டும் மீண்டும் நினைவு படுத்திக் கொண்டிருந்தது. அவனுடைய சிந்தனைகள் சிறகடித்துப் பறக்கலாயின.

★★★★★★★★★

அது ஓர் அழகிய பூங்கா. அங்கே அவன் தன் காதலியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான். சிறிது நேரத்துக்குப் பின்னர் அவளும் அங்கு வருகிறாள். ஏற்கனவே அவன் தயார் பண்ணி வைத்திருந்த அந்தப் பெயர் அதைச் சொல்லி அவளை அழைத்தான்.

“பூங்குழலி வந்து விட்டாயா?” என்றான்.



(தொடரும்....)

## குறுக்கெழுத்துப் போட்டி-3

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | ■ | 4 |
| | ■ | | ■ | 5 | | 6 | |
| 7 | | | | | ■ | 8 | |
| | ■ | | ■ | 9 | | | ■ |
| ■ | 10 | | | | ■ | ■ | 11 |
| 12 | | ■ | ■ | ■ 14 | 13 | | |
| ■ | 14 | 15 | | ■ | | ■ | |
| 16 | | | ■ | 17 | | | |

**இடமிருந்து வலம்**

1. பல வண்ணங்களில் வானில் எப்போதாவது தோன்றும்.
5. நகைச்சுவை என்றும் பொருள்படும்.
7. நவமணிகளில் ஒன்று.
8. அடங்கிக் கிடப்பவனை இந்த உயிரினத்துக்கு ஒப்பிடுவார்கள்.
9. கட்டிடம் கட்டவும் பயன்படுத்தப்படுவது.
10. இடியுடன் சேர்ந்துவரும் ஒளி.
12. விலங்குகளை இங்கும் வாழ விடுகிறார்கள் இல்லையாம்.
13. எவருக்கும் ஈயாதவர். குழம்பி.
14. எதுவும் புரியாதவர் என்பதற்கு இப்படி கூறுவர். குழம்பி.
16. தகைமை என்றும் சொல்லலாம்.
17. இது தின்ன கூலி கேட்கலாமா?

**மேலிருந்து கீழ்**

1. கான மயில் ஆடுவதைக் கண்டு இதுவும் தோகை விரித்து ஆடுவதா?
2. அறிஞன் என்றும் சொல்லலாம்.
3. பழம் என்றும் சொல்லலாம். தலைகீழ்.
4. இப்பிறவியை குறிக்கும்.
5. அழுகையோடு வெளிப்படுவது.
6. நடனக்கலை ஒன்று. குழம்பி.
10. திடகாத்திர தோற்றத்தை குறிக்கும்.
11. சிறிய இதுவும் பல்குத்த உதவும் என்பர்.
13. உபகரணம் என்றும் பொருள்படும். குழம்பி.
15. நிலவையும் குறிக்கும்.

**உங்கள் பதில்களை தபால் அட்டையில் ஒட்டி பெயர், முகவரியுடன் எமக்கு அனுப்பி வைக்கலாம்.**

**ஒருவன் வாரவெளியீடு, ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு – 09**

## சென்ற வாரத்திற்கான விடை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஒ | ற் | று | 2 மை | ■ | 3 நீ | ரா | 4 வி |
| ல் | ■ | ■ | 5 இ | சை | ச் | ■ | ந் |
| 6 லா | ட | ம் | ■ | ■ | 7 ச | 8 ந் | தை |
| ந் | ■ | ■ | ■ | 9 க | ல் | ப | ■ |
| 10 த | ந் | 11 தை | ■ | ல | ■ | 12 த | டி |
| ர் | ■ | ல | ■ | 13 க | ட | ல் | ■ |
| ■ | 14 கு | ம் | 15 ப | ம் | ■ | ■ | 16 ச |
| 17 இ | டை | ■ | றை | ■ | 18 பா | ங் | கி |

**பாராட்டுப் பெறுவோர்**

எம்.யோகேஸ்வரி, கல்முனை
கே.யுகபாரதி, ஹட்டன்
எச்.எஸ்.ஹனீமா, மட்டக்களப்பு
யு.விசாகன், யாழ்ப்பாணம்
ஜே.கே.நிஷாந்தன், வவுனியா
சி.முஹம்மத், கொழும்பு

# அம்பிகாபதி அமராவதி காதல் அமரக் காதல் ஆனது எப்படி?

**சென்ற இதழ் தொடர்ச்சி...**

அம்பிகாபதி, அமராவதி காதல் விவகாரம் நாளடைவில் மன்னன் காதுகளுக்கும் சென்றது. மன்னன் பெருங்கோபமுற்றான். அதேசமயம் ஒட்டகூத்தர் அம்பிகாபதி தண்டனை பெற எண்ணி பல சட்டதிட்டங்கள், சம்பிரதாயங்கள் முதலியவற்றை எடுத்துக்கூறி நிலைமையை மிகவும் தீவிரமடையச் செய்தார்.

கம்பரின் வேண்டுதல்கள் எதுவும் மன்னனின் செவியில் ஏறவில்லை. முடிவாக அம்பிகாபதிக்கு ஒரு சோதனை நடத்தி அவன் அதில் வெற்றி பெற்றால் அமராவதியை மணக்கலாம் என்றும், தோல்வியுற்றால் மரண தண்டனை எனவும் முடிவு செய்யப்பட்டது.

சோதனை என்னவெனில், ஒரே நாளில், குறிப்பிட்ட நேரத்துக்குள் சபையோர் முன்னிலையில் நூறு பாடல்களை அம்பிகாபதி தொடர்ந்து இயற்றி அரங்கேற்ற வேண்டும். அவற்றில் காமரசம் துளியும் இருக்கக்கூடது. அப்பாடல்களில் பிழை ஏற்பட்டாலோ, காமரசம் கலந்தாலோ, குறிப்பிட்ட காலத்துக்குள் நூறு பாடல்களை இயற்றத் தவறினாலோ தோற்றதாக அர்த்தம்.

இந்த நிபந்தனையை ஏற்று அம்பிகாபதி பாட ஆரம்பித்தான். சபையில் அரசன் உள்ளிட்ட பல அறிஞர்களுடன் கம்பரும், ஒட்டக்கூத்தரும் அமர்ந்திருந்தனர். அமராவதி ஒரு திரைமறைவில் அமர்ந்துகொண்டு நிகழ்ச்சியைக் காண அனுமதிக்கப்பட்டாள். அவள் நூறு மலர்களை ஒரு தட்டில் வைத்துக்கொண்டு அம்பிகாபதி பாடும் ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு மலர் வீதம் அருகிலிருந்த மற்றொரு தட்டில் போட்டு, அம்பிகாபதி பாடும் பாடல்களை எண்ணிக்கொண்டே வந்தாள்.



இவ்வாறு நூறாவது பாடலை பாடி முடிக்கவும், வெற்றிக் களிப்பில் அமராவதி, மாளிகை விட்டு அம்பிகாபதி இருக்கும் இடத்தை நோக்கி வரவே, பேரழகுடன் விளங்கும் அவளைக் கண்டதும் அம்பிகாபதி தன்னை மறந்து,

**“சற்றே பருத்த தனமே துவளத் தரள வடந் துற்றே அசையக் குழையூசலாட – துவர்கொள் செவ்வாய் நற்றேனொழுக நடன சிங்கார நடையழகின் பொற்றேரிருக்கத் தலையலங்காரம் புறப்பட்டதே”** என்று காமரசம் ததும்பும் பாடலொன்றைக் பாடி விட்டான்.

பிறகு எழுந்து மன்னனை வணங்கி 100 பாடல்களை தான் பாடி விட்டமையால் அமராவதியை தனக்கு திருமணம் செய்து வைக்க கேட்டுக் கொண்டான். உடனே ஒட்டக் கூத்தர் எழுந்து, “நீ 99 பாடல்களை தான் பாடியிருக்கிறாய் . 100 பாடல்கள் நிறைவு பெறவில்லை. அதற்குள் உன் புத்தியில் காமம் புகுந்து பெண்ணின் உறுப்பை பற்றி பாடி விட்டாய்” என்றார்.

உடனே பெண்ணழகு அமராவதி, “இல்லை, அவர் 100 பாடல்களை பாடி விட்டார். நான் எண்ணி கொண்டு இருந்தேனே! பிறகு நான் வெளியில் வரவும் அவர் என்னை பற்றி பாடினார்”என்றாள்.

அதற்கு ஒட்டக் கூத்தர், “இல்லை, அவனது முதல் பாடல் பிள்ளையார் பற்றியது. எந்த ஒரு செயலையும், தொடங்கும் முன் பிள்ளையாரை வணங்குவது நமது மரபு. அதனால் முதல் செய்யுள் காப்புச் செய்யுளாதலால் அதை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. அதை தவிர்த்து விட்டு பார்த்தால் அம்பிகாபதி 99 பாடல்களை தான் பாடி இருக்கிறான்” என்றார்.

கம்பரும் உடனே எழுந்து, “இல்லையில்லை, அதையும் கணக்கில் சேருங்கள். 100 பாடல்களை முடித்து விட்டான் என் மகன்” என்றார்.

ஆனால், தனது மகளும்,தனது அவையிலே பாடி பரிசில்கள் பெற்று பிழைப்பு நடத்தும் ஒரு கவியின் மகனும் காதலிப்பது தனது கௌரவத்துக்கு ஏற்றதல்ல என்கிற பெருங்கோபத்தில் இருந்த மன்னன் குலோத்துங்கன் ஒட்டக்கூத்தரின் இந்த குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டு அம்பிகாபதிக்கு மரணதண்டனை விதித்தான்.

அம்பிகாபதி பலிபீடம் கொண்டு செல்லப்பட்டான். அவனது தலை கட்டரிவாளால் துண்டிக்கப்பட்டது. அதைக் கண்ட அமராவதியும் தன் தலையை சுவற்றில் மோதி உடைத்துக் கொண்டு அதே இடத்தில் மாண்டாள்.

இதுவே அம்பிகாபதி, அமராவதி காதல், அமரக்காதலாக மாறிய கதையாகும்.

ஆய்வு

# ஆண் நுளம்புகளின் செவித்திறனை மட்டுப்படுத்தினால் டெங்குவை கட்டுப்படுத்தலாம்...!

டெங்கு, மலேரியா, ஜிகா போன்ற நுளம்புகளால் பரவும் நோய்களைத் தடுக்க விஞ்ஞானிகள் ஒரு புதிய வழியைக் கண்டுபிடித்துள்ளனர்.

அதாவது, ஆண் நுளம்புகளின் கேட்கும் திறனை மட்டுப்படுத்தினால் அவை இனச்சேர்க்கையில் ஈடுபட முடியாது என்பதுதான் அந்தக் கண்டுபிடிப்பு.

பெண் நுளம்புகள் சிறகடிக்கும் ஓசையைக் கேட்டே ஆண் நுளம்புகள் ஈர்க்கப்படுகின்றன என கூறும் ஆய்வாளர்கள், நுளம்புகளின் செவித்திறன் மரபணுவை மாற்றி ஆராய்ச்சியை மேற்கொண்டதில், இந்த முடிவு பெறப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.



மேலும், பெண் நுளம்புகள் தான், மக்களுக்கு நோய்களை பரப்பக் கூடியவை. அந்த நுளம்புகளை முட்டை இடாமல் தடுப்பதன் மூலம், அவற்றின் ஒட்டுமொத்த எண்ணிக்கையை குறைக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளனர்.

பிஎன்ஏஎஸ் அறிவியல் இதழில் இதுகுறித்த தகவல்களை வெளியிட்டுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், இந்த மரபணு மாற்றம் ஏற்படுத்திய செவித்திறன் நீக்கம், நுளம்புகளின் இனச்சேர்க்கையை முற்றிலுமாக தடுத்து விட்டது என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




ஆரோக்கிய சமையல்

## சருமம் பொலிவு பெற உதவும் வெள்ளரிக்காய் சாதம்

### தேவையான பொருட்கள்:

* வேக வைத்த சோறு – ஒரு கோப்பை
* வெள்ளரிக்காய் துருவியது – ஒன்றரை கோப்பை
* தேங்காய் துருவல் – அரை கோப்பை
* கொத்தமல்லி இலை – சிறிதளவு
* முந்திரி – 10
* வறுத்த நிலக்கடலை – சிறிதளவு
* காய்ந்த மிளகாய் – 3
* நெய் – 2 தேக்கரண்டி
* கடுகு – சிறிதளவு
* சீரகம் – சிறிதளவு
* உளுந்து – அரை தேக்கரண்டி
* கறிவேப்பிலை – தாளிப்பதற்கு ஏற்ப
* உப்பு – சுவைக்கு ஏற்ப

### செய்முறை:

1) பாத்திரத்தை மிதமான தீயில் வைத்து சூடாக்கிக் கொள்ளவும்.

2) சிறிதளவு சூடானதும் 2 தேக்கரண்டி நெய் சேர்த்து கடுகு, சீரகம், காய்ந்த மிளகாய், கறிவேப்பிலை போட்டு தாளித்துக்கொள்ளவும்.

3) இதையடுத்து முந்திரி மற்றும் நிலக்கடலை சேர்த்து பொன்னிறமாகும் வரை நன்கு வதக்கிக் கொள்ளவும்.

4) நன்கு வதங்கியவுடன் துருவி வைத்துள்ள வெள்ளரிக்காய், தேங்காய் துருவல், உப்பு சேர்த்து நன்கு கலந்துக் கொள்ளவும்.

5) வெள்ளரிக்காய் ஓரளவிற்கு நன்கு வதங்கியவுடன் வேக வைத்துள்ள சோற்றை சேர்த்து நன்றாக கிளறி இறக்கினால் சுவையான மற்றும் உடலுக்கு ஆரோக்கியம் சேர்க்கும் வெள்ளரிக்காய் சாதம் தயார்.

## வெள்ளரி நன்மைகள்

வெள்ளரிக்காய் சத்துக்கள் மிகுந்த காயாகும். இது பல ஆபத்தான நோய்கள் வராமல் தடுக்கும்.

* புற்று நோயிலிருந்து கூட நம்மைக் காப்பாற்றும். நச்சுக்களை வெளியேற்றி, போதுமான நீர்ச்சத்துக்களை தக்க வைக்கும்.

* வெள்ளரிக்காயில் 95 வீதம் நீர்ச்சத்து உள்ளது. உடலில் தங்கும் தீய நச்சுகளை எல்லாம் இழுத்து சிறு நீரகத்திற்கு அனுப்புகிறது. இதனால் சருமம் மெருகேறும்.

* வளர்சிதை மாற்றத்தை அதிகப்படுத்துகிறது. எனவே கலோரி அதிகரிக்காமல் உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

* வாய் துர்நாற்றத்தைப் போக்க, ஒரு துண்டு வெள்ளரிக்காயை வாயில் வைத்துக் கொள்ளுங்கள். 30 நொடிகள் வரை வைக்கவும், அது வாயில் உள்ள கிருமிகளை அழித்து துர்நாற்றத்தைப் போக்கும்.

* தினமும் வெள்ளரிக்காயை சாப்பிட்டு வந்தால் உடல் எடை குறையும். கொழுப்பு செல்களைக் கரைக்கும். அதிக நீர்ச்சத்து கொண்டுள்ளதால், கொழுப்பு கார்போஹைட்ரேட் சத்துக்களை வேகமாய் ஜீரணித்து சக்தியாய் மாற்றிவிடும். வயிற்றிலுள்ள கொழுப்பைக் கரைத்து உடல் எடையை குறைக்கச் செய்யும்.



ஒருவன் மருத்துவம்



எருக்கன், செடி வகையைச் சேர்ந்தது இதன் அனைத்து பாகங்களும் சிறந்த மருத்துவதன்மை வாய்ந்தவை.

வாரம் ஒரு மூலிகை

## எருக்கன்

### மருத்துவப் பயன்கள்:

1. வெண்மை நிற எருக்கன் பூக்கள் ஆஸ்துமா நோய்க்கு மருந்தாகும். வெண்ணிற எருக்கன் பூக்களை அவற்றில் உள்ள நடு நரம்புகளை நீக்கிவிட்டு வெள்ளை இதழ்களை மட்டும் எடுத்து அதனுடன் சம அளவு மிளகு, கிராம்பு, சேர்த்து மை போல அரைத்து, அந்த விழுதை மிளகு அளவு மாத்திரைகளாக உருட்டி, நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்தி கொள்ளவும். இதனால் இரைப்பு நோய் அதிகரிக்கும் சமயம் ஒரு உருண்டை சாப்பிட்டு நீர் அருந்த உடனே தணியும்.

2. 10 கிராம் இஞ்சி, 3 வெள்ளெருக்கன் பூ, 6 மிளகு இவற்றை நசுக்கி அரை லீற்றர் நீரில் போட்டு கால் லீற்றராகக் காய்ச்சி தினம் ஒருவேளை பருகி வர இரைப்பு நோய் குணமாகும்.

3. எருக்கன் பூவை தீயில் வதக்கி வீக்கம், கட்டிகள் மீது வைத்துக்கட்ட வீக்கம், கட்டி சுகமாகும்.

4. ஆறாத புண்கள் இருந்தால் எருக்கன் பூக்களை உலர்த்தி தூள் செய்து வைத்துக்கொண்டு, அந்த தூளை புண்களின் மீது மருந்தாக போட்டு வர, சீக்கிரத்தில் புண்கள் ஆறிவிடும்.

5. 20 மி.லி. சிற்றாமணக்கு எண்ணெயில் 3 - 5 துளி எருக்கன் பால் விட்டு அருந்தினால், மலச்சிக்கல் தீரும்.

6. எருக்கன் பூ 100 கிராம், உப்பு 10 கிராம் சேர்த்து அரைத்து வடைபோல் தட்டி உலர்த்தி, அதை எரித்து தசாம்பலாக்கினால் சிறந்த பற்பொடி கிடைக்கும். இதில் பல் துலக்கி வர பல்சொத்தை, புழு, பல்லரணை, பல் கூச்சம் யாவும் குணமடையும்.

குழந்தை

## பவுடர் பூசும் தாய்மார்களே இது உங்களுக்குத்தான்...!



முகத்துக்கு பூசும் பவுடர் என்பது நுரையீரலுக்குள் சென்று குழந்தைகளுக்கு மூச்சுத்திணறல், நுரையீரல் பாதிப்பு, சுவாசப் பிரச்சினை, புற்றுநோய் பேன்ற ஆபத்துகள் வருவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதாகச் சொல்லப்படுகிறது.

டால்கம் பவுடரில் (Talcum Powder) உள்ள “டால்க்“ (Talc) என்னும் கனிம கலவைதான் பவுடர் தயாரிக்க உபயோகப்படுத்தப்படுகிறது. இது இயற்கையாக எஸ்பெஸ்டோஸ் (Asbestos) என்னும் பொருளை உள்ளடக்கியுள்ளது. இது புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியது. இதை சுவாசிக்கும்போது நுரையீரலுக்குள் சென்று புற்றுநோயை உண்டாக்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக கூறப்படுகிறது.

அதனால், குழந்தைகளுக்கு தாய்மார்கள் பவுடர் பயன்படுத்தும்போது அதிக கவனம் தேவை. மருத்துவரின் அறிவுரையின் பேரில் தரமான பவுடரை வாங்குவது சிறந்தது. முக்கியமாக ஒவ்வாமை குறைவாக இருக்கும் பவுடரை பார்த்து வாங்க வேண்டும்.

### என்ன செய்யலாம்?

பவுடரை நேரடியாக முகத்தில் அடிக்க வேண்டாம். முதலில் துணியில் பவுடரை போட்டு அதை குழந்தைகளுக்குப் பயன்படுத்தவும்.

கண், வாய், மூக்கு போன்ற இடங்களுக்கு பவுடர் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

குழந்தைகளை குளிப்பாட்டியதும் ஈரத்துடன் பவுடர் பூச வேண்டாம். குழந்தைகள் சருமத்தில் உள்ள ஈரம் நன்றாக உலர்ந்த பிறகு பவுடர் போடுவது நல்லதாகும்.

குழந்தைகளுக்கு பவுடர் பயன்படுத்தும்போது அளவாகப் பயன்படுத்த வேண்டும். கழுத்து, கை, கால்கள், தொடைப் பகுதியில் பயன்படுத்தலாம். கண்டிப்பாக அந்தரங்கப் பகுதியில் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது நல்லது.

## இருமல், தும்மலின் போது சிறுநீர் கசிவு காரணம் தெரியுமா?

பல பெண்கள் தமது 40 -45 வயதில் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்சினை இருமும் போதும் தும்மும் போதும் சிறுநீர் வெளியேறுவது. இது, சிறுநீர் கசிவு அல்லது Stress Urinary Incontinence (SUI) என்று அழைக்கப்படுகிறது.

சிறுநீர் கழிக்க வேண்டும் என்னும் உணர்வு வரும் போது கழிப்பறையை நோக்கி செல்வதற்குள் சிறுநீர் வெளியேறிவிடும். இது சிறுநீர் அடங்காமை அல்லது Urge urinary incontinence (UI) என்று அழைக்கப்படுகிறது.

### என்ன காரணம்?

பொதுவாக சிறுநீர்ப்பை மற்றும் சிறுநீர்க்குழாய் அல்லது சிறுநீர் குழாய் இடையில், ஒரு சிறிய கோணம் போன்று இருக்கும். இவை சரியான நிலையில் இருக்கும் போது சிறுநீர்குழாயானது, சிறுநீரை கட்டுக்குள் வைக்க செய்யும்.

ஆனால், பெண்கள் வயதாகும் போது ஈஸ்ட்ரோஜன் ஹோர்மோன் குறையும். அப்போது இந்த கோணமானது இலேசாக நேராக இருக்கும். சிறுநீர் வெளிவரும் வழியில் (சிறுநீர் குழாய்) அதை கட்டுக்குள் வைக்க முடியாமல் தளர்ந்துவிடும்.


இதனால் தான் இருமினால் தும்மினால் உடல் அழுத்தத்தை சந்திக்கும் போது கட்டுப்படுத்த முடியாமல் சிறுநீர்க்குழாய் சிறுநீர்ப்பையிலிருந்து சிறுநீரை வெளியேற்றுகிறது. இப்படி ஒவ்வொரு முறையும் உடல் அழுத்தத்தை சந்திக்கும் போது சிறுநீர் வெளியேறுகிறது. இதுதான் சிறுநீர் கசிவு என அழைக்கப்படுகின்றது.

### யாருக்கெல்லாம் ஏற்படும்?

சிறுநீர் கசிவு எல்லா பெண்களுக்கும் கண்டிப்பாக வரும் என்று சொல்லமுடியாது. ஆனால் பெரும்பாலான பெண்கள் இதை எதிர்கொள்கிறார்கள். காரணங்கள் பொறுத்து அவர்கள் மிதமாகவோ அல்லது தீவிரமாகவோ அனுபவிக்கிறார்கள். வயது காரணத்தினால் வரலாம். அதிக சிக்கலுடன் பிரசவம், கருவி கொண்டு குழந்தையை வெளியே எடுப்பது போன்றவை எல்லாம் பிற்காலத்தில் சிறுநீர் கசிவு அபாயத்தை அதிகரிக்கும்.

### சிறுநீர் அடங்காமை

Detrusor எனப்படும் சிறுநீர்ப்பையின் எரிச்சல் அல்லது அழற்சிக்கு உள்ளாகும் போது இந்த சிறுநீர் அடங்காமை உண்டாகும். (detrusor muscle overactivity) நரம்பு பிரச்சினை, வயது போன்ற நிலையில் தசைகள் பாதிப்பை ஏற்படுத்தும் போது சிறுநீர் அடங்காமை ஏற்படுகிறது. அதனால் சிறுநீர் கசிவு பிரச்சினையா அல்லது சிறுநீர் அடங்காமை பிரச்சினையா என்பதை அறிந்து அதற்கேற்ப சிகிச்சை அளிக்கும் போது முழுமையாக இந்த அசௌகரியத்திலிருந்து விடுபட முடியும் என்கின்றனர் மருத்துவ நிபுணர்கள்.



நோய்கள் அறிவீரா?




# காதிகள் சபையில் வாதாடிய முதல் பெண் சட்டத்தரணி



-சபானா பேகம்-

## மனதை வென்ற மங்கையர்

இலங்கையின், இளம் பெண் சட்டத்தரணிகளுக்கு ஒரு சிறந்த முன்னோடியாகத் திகழும் சட்டத்தரணி சபானா பேகம், குறிப்பிட்ட காலத்துக்குள்ளேயே பல சாதனைகளை புரிந்து மனதை வென்ற மங்கையருள் ஒருவராக திகழ்கின்றார்.

கிழக்கு மாகாணத்தை பூர்வீகமாகக் கொண்டிருந்தாலும், கடந்த 30 வருடங்கள் கொழும்பை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட இவர், சிறுவயது முதல் பேச்சாற்றலும், முத்தாற்றலும் கொண்டு விளங்கினார். தமிழ் மொழியில் பெரும் ஆற்றல் கொண்டிருந்த இவர், உயர்தரம் கற்கும் போது மகளிர் தினப்போட்டிகளில் அகில இலங்கை ரீதியில் பங்குபற்றி பரிசில்களையும் வென்றுள்ளார்.

1994ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையின் கலைஞராக இணைந்து, மாதர் மஜலிஸ், சிறுகதை, நாடகம் என்பனவற்றுக்கான பிரதிகளை எழுதியுள்ளதுடன், அந்நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளார். இவரது எழுத்துகள் முற்போக்கு சிந்தனையுடன், காத்திரமானவையாகவும், ஆண் - பெண் சமத்துவம் பேணும் வகையிலும் அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் சபானா, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையின் பகுதிநேர அறிவிப்பாளராகவும், செய்திவாசிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். 1997ஆம் ஆண்டு சட்டக் கல்லூரியில் நுழைந்து, 2000ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சட்டக்கல்லூரி மாணவியாக இருக்கும் காலத்தில் சட்டமாணவர் தமிழ்மன்றத்தினால் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளார். சட்ட மாணவர் தமிழ்மன்ற விவாத அணியின் தலைவியாகவும், பிரதித் தலைவியாகவும் பதவி வகித்துள்ளார்.

1999ஆம் ஆண்டு சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் தலைவியாகப் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார். இலங்கையின் சட்டமாணவர் தமிழ் மன்ற வரலாற்றில், தலைமைப் பதவி வகித்த முதற்பெண் இவராவார்.

சட்டத்தரணியான இவர், கடந்த 22 வருடங்களாக இலங்கையின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (மு.வி.வி.சட்டம்) தொடர்பான விடயங்களிலே அதிக கரிசனை காட்டி வருகின்றார். மேலும், காதிகள் சபையில் வாதாடிய முதல் பெண் சட்டத்தரணி எனும் பெருமையையும் சபானா பேகம் பெற்றுள்ளார். மு.வி.வி.சட்டம் தொடர்பில் நீண்டகால அனுபவம் வாய்ந்தவர். பல்வேறு வகையான ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுபவர். இச்சட்டம், இச்சட்டத்தில் உள்ள இடைவெளிகள், அவ்விடைவெளிகளினால் சமூகம் எதிர்நோக்கும் பாதிப்புகள் தொடர்பில் பல நூல்களை எழுதியுள்ளார்.

பல ஆக்கங்களைப் பத்திரிகைகளுக்கு எழுதியுள்ள சபானா, அகில இலங்கை ரீதியில் இச்சட்டம் தொடர்பான பல விழிப்புணர்வுக் கருத்தரங்குகளுக்கு வளவாளராக செயற்படுகின்றார்.

சட்டம் தொடர்பான இவரது சேவைகள், செயற்பாடுகள் மற்றும் அனுபவங்கள் காரணமாக 2009 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் மு.வி.வி.சட்டச் சீர்திருத்தம் தொடர்பான பிரேரணை முன்மொழிவுகளுக்காக நீதியமைச்சினால் நியமிக்கப்பட்ட முறையே முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சலீம் மர்சூப் குழு மற்றும் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தின் குழு என்பவற்றின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இவ்விரு குழுக்களிலும் இவர் ஆற்றிய சேவை அளப்பரியது.

1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க மு.வி.வி.சட்டம் இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு முரண்படாமலும், இலங்கையின் அரசியலமைப்புக்கு ஏற்றவகையிலும், ஆண் - பெண் சமத்துவத்தை பேணும் வகையிலும் திருத்தப்பட வேண்டுமென்ற இவரது கருத்தும், கோட்பாடும் பல சவால்களுக்கு முகங்கொடுத்தன. மு.வி.வி சட்டம் தொடர்பான இவரது அனுபவங்கள், சந்தித்த சவால்கள் என்பவற்றை உள்ளடக்கிய நூலொன்று “சவால்களின் பயணம்” என்ற தலைப்பில் இந்த ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இவரால் எழுதப்பட்டுள்ளது.

இந்நூல், தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் காணப்படுகின்றமை சிறப்பு.

தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் உறுப்பினராகவும் செயற்பட்டு வரும் சபானா பேகம் நியாயமான, முற்போக்கு சிந்தனையுள்ள, ஆண் - பெண் பாரபட்சமற்ற ஒரு மனித உரிமை செயற்பாட்டாளராக தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ளமை பாராட்டுதலுக்குரியதாகும்.

அந்தவகையில் மனதை வென்ற மங்கையாக திகழும் சபானா பேகம், இளம் பெண் சட்டத்தரணிகளுக்கெல்லாம் ஒரு சிறந்த முன்மாதிரி என்பதில் மாற்றுக்கருத்தில்லை.



# மங்கையரின் மகிமை

பெண்குழந்தை பிறந்த நல்மனையில்
பெருந்துயர் சூழ்ந்திடுமே கணப்பொழுதில்
பேதமையால் மாந்தர் தம் வாழ்வில்
பெருங்குற்றம் இழைத்தனர் பெண்ணுக்கு அந்நாளில்!

பள்ளிச்சென்று பயில்வதில் பயனில்லை என்றுரைத்து
பின்தூங்கி முன்னெழுந்து பிறர்க்கடிமையாயிருந்து
பணிவிடைகள் பல புரிந்து பக்குவமாய் வாழ
பாடிப் பாடி பாடம் புகட்டினர் பல்லாண்டு காலமாக!

இன்னொரன்ன இன்னல்களை இதயத்திலேயிருத்தி
இருட்டறையில் எதையெதையோ தேடி நிதம்
ஏங்கியதோர் விடியலுக்காய் என்றென்றும் இவள் நெஞ்சம்
காலங்கள் சென்றிடவே கனிந்தது ஓர் திருப்புமுனை!

பெண்ணினத்தின் பெருமைதனை பிரியமுடன் கேட்டிடுவீர்!
ஏந்திழையாள் வாழ்வினிலே இன்புற்றிருக்க
இரு மனங்கள் ஒருமனமாய் இணைந்திருக்க
‘திருமணம்’ என்ற மேடையிலே மணமகளாய் மாறிடவே!

மாதங்கள் பல கடந்து மங்களமாய் வந்துதிக்கும்
மாசற்ற மழலையினால் மாறுகின்றாள் மங்கையவள்
மட்டில்லா மகிழ்வுடனே மறுநாமம் பெறுகின்றாள்
அகிலத்தில் அரிய திருநாமம் “அம்மா” என அறிவீர்!

பெண் என்ற ஈரெழுத்தின் பெருமை இன்று
மகுடம் சூடி நிற்கிறது மலைமீது
தங்குதடை ஏதுமின்றி தனக்குநிகர் தானே என்று
தலைநிமிர்ந்து தரணியிலே தடம்பதிக்கும் வேளையிது!

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என்ற
பாரதியின் கூற்று குன்றிவிட்ட தீபமாய்
குலவிளக்காய் சுற்றிவலம் வருகிறது வையத்துள்
இன்றிவளின் ஏற்றமதை இயம்பிடத்தான் மொழியேது!

கற்றோரும் மற்றோரும் கதிகலங்கும் காலமிது
பாரினை ஆளும் நாடாளுமன்றம் முதல்
விண்ணில் பறந்து வீரத்தடம் பதிக்கும் வீராங்கனையாக
மண்ணில் திகழ்கின்ற மங்கையரின் மகிமை தான் என்னே!

சாதனைகள் பலநூறு படைக்கின்றாள் தினம் இன்று
கற்றலிலும் சாதனை! கலை பல பயில்வதிலும் சாதனை!
மேடையிலும் சாதனை! மெய்வல்லுநர் போட்டியிலும் சாதனை!
விண்ணிலும் சாதனை! மண்ணிலும் சாதனை!
வீரமங்கையாம் இவள் வெற்றியின் சிகரமேதான்!

– ராஜேஷ்வரி பிரேம்குமார் –




# குளிர் கால வறட்சியை போக்க இயற்கை வழிகள்

- குளிர்காலத்தில் தினம் இரவில் படுக்கப் போகும்போது கை கால்களில் ஒலிவ் எண்ணெய் தடவி வந்தால் சருமத்திற்கு வேண்டிய ஈரப்பசை கிடைத்து கை கால்களில் உள்ள வறட்சி நீங்கும்.
- தேனை ஒலிவ் எண்ணெய்யுடன், சிறிது சீனி சேர்த்து கலந்து சருமத்தை ஸ்கரப் செய்து வந்தால் சருமத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்கி, சருமத்தில் ஈரப்பசை அதிகரித்து சருமம் பொலிவாகும்.
- குளிர்காலத்தில் தயிரை தினமும் கை, கால்களில் தடவி மசாஜ் செய்து 20 நிமிடம் ஊறவைத்து கழுவினால் சருமத்தில் ஈரப்பசை அதிகரித்து வறட்சி நீங்கும்.
- தினமும் இரவில் படுக்கும் முன் தேங்காய் எண்ணெயை கை, கால்களுக்கு தடவி வந்தால் கை, கால்களில் ஏற்படும் வறட்சியை தடுக்கலாம்.
- தினமும் காய்ச்சாத பாலை கை, கால்களுக்கு தடவி சிறிது நேரம் கழித்து, நீரில் நனைத்த பருத்தித் துணியால் துடைத்தெடுத்தால் கைகளுக்கு ஈரப்பசை கிடைத்து இறந்த செல்களும் வெளியேறும்.




## மசாலா இட்லி

**தேவையானவை:**

இட்லி, வெங்காயம், தக்காளி – தலா 2, கெரட் துருவல் – 2 தேக்கரண்டி, இஞ்சி – பூண்டு விழுது, மிளகாய்ப் தூள், சாம்பார் தூள், மசாலா தூள் – தலா ஒரு தேக்கரண்டி, எண்ணெய், உப்பு – தேவையான அளவு

செய்முறை:

வெங்காயம், தக்காளியை வெட்டிக்கொள்ளவும். இட்லிகளை ஓர் அங்குல சதுர துண்டுகளாக வெட்டி, எண்ணெயில் பொறித்து தனியே எடுத்து வைக்கவும்.

பாத்திரத்தில் எண்ணெய் விட்டு, காய்ந்ததும் வெங்காயம், தக்காளி, கெரட் துருவல், இஞ்சி – பூண்டு விழுது சேர்த்து நன்கு வதக்கவும். பிறகு மிளகாய்ப் தூள், சாம்பார் தூள், கரம்மசாலா தூள் மற்றும் உப்பு சேர்த்து வதக்கவும் (கொஞ்சம் நீர் தெளித்துக் கொள்ளலாம்).

இதனுடன் பொரித்த இட்லி துண்டுகளை சேர்த்து ஒரு புரட்டு புரட்டி... சுடச்சுட பரிமாறவும்.





# அடடா!

எரிவாயுவை பயன்படுத்துவதற்கு முன்பு எப்போதும் அதில் கசிவு உள்ளதா என சரிபார்க்க வேண்டும். அதற்கு எரிவாயு சிலிண்டர் மற்றும் ரெகுலேட்டர் (Regulator) இணைப்புகளில் சவர்க்கார நுரையை பயன்படுத்திப் பாருங்கள். அதில் குமிழிகள் தோன்றினால் கசிவைக் குறிக்கிறது. (காரணம் பல இடங்களுக்கு இந்த சிலிண்டர் கொண்டு சென்று வருவதால் ஏற்படும் சேதங்களால் கூட இருக்கலாம்)

சிலிண்டர் நிமிர்ந்து நன்கு காற்றோட்டமான இடத்தில் வைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்யவும்.

பாதுகாப்புத் தர சான்றுதலுக்கு இணங்கக்கூடிய ரெகுலேட்டரைப் பயன்படுத்தி கொள்ளுங்கள். அதில் இருக்கும் இறப்பர் குழாயில் ஏதேனும் தேய்மானம் அல்லது சேதம் உள்ளதா என தவறாமல் சரிபார்க்கவும். இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இது மாற்றப்பட வேண்டும் என்பதை கவனத்திற் கொள்ளுங்கள்.

கேஸ் அடுப்பை பயன்படுத்தும் போது, அடுப்பை எந்நேரமும் நோட்டம் விட்டுக் கொண்டே இருங்கள். பயன்பாட்டிற்குப் பிறகு சிலிண்டரில் இருந்து எரிவாயு விநியோகத்தை (Regulator) எப்போதும் அணைத்துவிட வேண்டும் அடுப்பு கைப்பிடிகள் (Stove knobs) அணைத்தால் மட்டும் போதாது.



அருகில் சீக்கிரம் பற்றி எரியக்கூடிய பொருட்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். வாயு வாசனை கசிவதை உணர்ந்தால் சுவிட்சுகள் அல்லது மின் உபகரணங்களை இயக்க வேண்டாம் இது வாயுவை பற்றவைக்கக்கூடும்.

சிலிண்டர்களை முறையற்ற வகையில் வைப்பது பெரும்பாலும் அனைவராலும் கவனிக்கப்படாத ஓர் ஆபத்து. ஒரு சிலிண்டரை ஒருபோதும் அடித்தளத்திலோ (Basement) அல்லது மூடிய இடத்திலோ (Enclosed space) வைக்க வேண்டாம். ஏனெனில் கசிவு ஏற்படும் போது வாயு வெளியேறாமல் அங்கேயே குவிந்து தேவையற்ற வெடிப்புகளை ஏற்படுத்தலாம்.

தரமற்ற கருவிகளைப் பயன்படுத்துவதை தவிர்த்திடுங்கள். அதாவது, தரமற்ற வகையில் தயாரிக்கப்பட்ட ரெகுலேட்டர்கள் அல்லது டியூப்கள் போன்றவை பாதுகாப்புத் தரங்களை பூர்த்தி செய்யாமல் இருக்கலாம். அதனால் எப்போதும் சான்றளிக்கப்பட்ட பொருட்களையே பயன்படுத்தி கொள்ளுங்கள்.



## குறளும் பொருளும்

அதிகாரம்: 02 - வான்சிறப்பு

**குறள் 13:** விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து உள்நின் றுடற்றும் பசி
**பொருள்:** கடல்நீர் சூழ்ந்த உலகமாயினும், மழைநீர் பொய்த்து விட்டால் பசியின் கொடுமை வாட்டி வதைக்கும்
**குறள் 14:** ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும் வாரி வளங்குன்றிக் கால்
**பொருள்:** மழை என்னும் வருவாய் வளம் குன்றிவிட்டால், உழவுத் தொழில் குன்றி விடும்





அக்கிரா விஸ்வநாதன்,
தரம் - 2,
புனித பிரிஜெட்ஸ் கல்லூரி,
கொழும்பு - 7





எஸ்.கிரோன்ஷிகன்
6D
கொழும்பு
இந்துக்
கல்லூரி
பம்பலப்பிட்டி.





என்.ஸ்டீவர்ட்,
க்ரீன் ப்ரிட்ஜ்
இன்டர்நெஷனல்,
கொலன்னாவ.



என்.ஸ்மித் பெனின்,
கொலன்னாவ

# ஒருவன் மின்மினி

அன்பு தம்பி, தங்கையரே, இது உங்களுக்கான பக்கம். இதில் உங்கள் சித்திரங்கள், ஆக்கங்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், உங்கள் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் இப்பகுதி பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எங்களுடன் வட்ஸப் அல்லது தபால் மூலம் பகிர்ந்துகொள்ளலாம். அவை, ஒருவன் மின்மினி பக்கத்தில் வெளியாகும்.

ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு – 09 0740162534

## குட்டிக்கதை

# சொர்க்கத்தில் நரி...

நரி ஒன்று தாகத்தால் தவித்தது. அதற்கு எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. அது தண்ணீரைத்தேடி அலைந்தது. அப்பொழுது, தூரத்தில் கிணறு ஒன்று இருப்பதை அது பார்த்தது.

கிணற்றின் அருகே சென்றது, கிணற்றில், கயிற்றின் ஒரு முனையில் வாளி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட நரி, வாளியில் தாவி ஏறி அமர்ந்தது. உடனே வாளி 'விர்'ரெனக் கிணற்றின் உள்ளே சென்றது. நரி வயிறு நிறையத் தண்ணீரைக் குடித்தது. தாகம் தணிந்தபின் மேலே பார்த்தது. அப்பொழுதுதான் அதற்கு புரிந்தது, இங்கிருந்து மேலே போவது சிரமம் என்பது. உடனே, 'எப்படி வெளியேறுவது' என்று யோசிக்கத் தொடங்கியது.

'மேலேயிருந்து யாராவது கயிற்றை இழுத்தால்தானே என்னால் மேலே போக முடியும். என்ன செய்வது?'



நேரம் ஆக ஆக நரிக்கு அச்சம் தோன்றியது.

அந்த நேரம் பார்த்துக் கிணற்றின் அருகே ஓநாய் ஒன்று வந்தது. அது கிணற்றின் உள்ளே எட்டிப் பார்த்தது. அங்கு நரி இருப்பதைக் கண்டது. உடனே ஓநாய், “அடடா! நரி ஐயா! உள்ளே என்ன செய்கிறீர்கள்?” எனக் கேட்டது. அதற்கு நரி, “நான் இப்போது சொர்க்கத்தில் இருக்கிறேன். என்ன அருமையான இடம் தெரியுமா? இங்கு மீன், கோழி, ஆடு எல்லாம் தருகிறார்கள்” என்றது நரி.

ஓநாய் சற்றும் யோசிக்காமல் கயிற்றின் மறுமுனையில் கட்டப்பட்டிருந்த வாளிக்குள் குதித்தது. அந்த வாளி 'சரசர'வென்று கிணற்றின் உள்ளே போயிற்று. அப்போது நரி அமர்ந்திருந்த வாளி மேலே வந்தது. நரி மேலே வரும் போது பாதி வழியில் ஓநாயைப் பார்த்தது.


“நான் இப்போது சொர்க்கத்திற்கும் மேலான இடத்திற்குப் போகிறேன்” என்று கூறிக் கொண்டே மேலே சென்றது. மேலே வந்ததும் கிணற்றுச் சுவரின் மேலே தாவிக் குதித்துத் தப்பியோடியது.

பாவம் ஓநாய். என்ன நடந்தது என்பதை அப்போதுதான் அது உணர்ந்தது. மேலே வரமுடியாமல் கிணற்றுக்குள்ளேயே மாண்டுபோனது ஓநாய்.


**நீதி – ஒரு செயலைச் செய்வதற்கு முன் பல முறை யோசிக்க வேண்டும்**

எம்.அஸீம், தரம் 06, மன்னார்

## வழியைக் கண்டுபிடியுங்கள்....



## வரைந்து பழகுவோம்...









# உப்புச் சுரங்கம் – போலந்து

மத்திய ஐரோப்பாவில் உள்ள போலந்து நாடு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. பழங்காலந்தொட்டே இங்கு மக்கள் சிறந்து வாழ்ந்துள்ளதாக சரித்திரம் கட்டியங் கூறுகிறது. கிறிஸ்துவின் பிறப்பிற்கு முன்பிலிருந்தே இங்கு வளமான வாழ்க்கை அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

உலக நிலப் பரப்பில் 69ஆவது இடத்தையும், மக்கட் தொகையில் 38ஆவது இடத்தையும் கொண்ட, மக்களாட்சி நடைபெறும் இந்நாட்டில், போலிய மொழி (Polish) பேசும் போலியர்களே அதிகம் வாழ்கிறார்கள். 'ஸ்வாட்டெ' (zloty) என்பது இங்குள்ள பணத்தின் பெயர். இங்கு தான், உலகின் மிகப்பழைமையான உப்புச் சுரங்கம் அமைந்துள்ளது. 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் கோட்டை கட்டப்பட்டுள்ளது. அதில்தான் உப்புத் தொழிற்சாலையின் நிர்வாக அலுவலகம் இயங்கியதாம்.

உலகின் மிகப்பெரிய தொழிற்சாலை இதுவென்றும் மிக நீண்ட காலமாக இயங்கி வந்ததென்றும் அறியப்படுகின்றது. இங்கு சுரங்கத்தின் உள்ளேயே கிறிஸ்தவ வழிபாட்டுத் தலமும், பெரிய மண்டபங்களும், சிறிய ஏரிகளும் உள்ளன.

மேலும் இங்கு, பாதுகாப்பு கருதி, பெரும் மரச் சட்டங்களைக் கொண்டு, எல்லா இடங்களையும், தக்க முறையில் பலப்படுத்தி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஓட்டுனரின்றி பயணிக்கும் கார்கள்


அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் முதல் முறையாக ஓட்டுனர் இல்லாத கார்கள் சாலைகளில் வலம் வரத் தொடங்கியுள்ளன. அந்தக் காரில் ஏறி நாம் எங்கே போக வேண்டுமோ அந்த இடத்தைக் கூறி கட்டளையிட்டால் போதும். ஓட்டுனர் யாரும் இல்லாமல் அந்தக் காரில் உள்ள செயற்கை நுண்ணறிவு மென்பொருளே நாம் செல்ல வேண்டிய இடத்திற்கான நேரம் குறைந்த ஒரு வழியை முடிவு செய்து, தானாகவே வாகனத்தை ஓட்டிக்கொண்டு குறிப்பிட்ட இடத்தில் பத்திரமாக நம்மை இறக்கி விட்டு விடும்.

கார், அது செல்லும் சாலையைப் புரிந்து கொள்ள அதனுடன் ஒரு கெமரா இணைக்கப்பட்டு இருக்கும். கெமராவிலிருந்து வரும் படங்கள் கணினிக்கு உள்ளிடப்பட்டு அந்தக் கணினியில் இயங்கும் செயற்கை நுண்ணறிவு மென்பொருள் அந்தப் படங்களைப் புரிந்து கொள்ளும். ஒரு வேளை எதிரே ஏதாவது வாகனம் வரும் படம் தெரிந்தால் உடனடியாக பிரேக்கை அழுத்தி கார் நின்று விடும்.

இப்படி ஓட்டுனர் இல்லாமல் பயணிக்கும் கார்கள், இலங்கைபோன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் அறிமுகமாக இன்னும் சில வருடங்களேயாகும் என்பதில் ஆச்சிரியமில்லை...!

புதியது கேட்பின்





**“நீங்கள் இன்று செய்ததையே நாளையும் செய்தால், இன்று உங்களுக்குக் கிடைத்ததே நாளையும் கிடைக்கும்.”**

**– பெஞ்சமின் பிராங்கிளின் (Benjamin Franklin)**

அமெரிக்காவைச் சேர்ந்த கண்டுபிடிப்பாளரும், அறிவியலாளரும், எழுத்தாளரும் மற்றும் அரசியல்வாதியும்தான் பெஞ்சமின் பிராங்க்ளின். மேலும் ஐக்கிய அமெரிக்காவை உருவாக்கிய தலைவர்களில் மிகவும் மூத்த தலைவரும் ஆவார். பல துறைகளில் கவனத்தைச் செலுத்தினாலும் அனைத்துத் துறைகளிலும் வெற்றி பெற்றவர் பிராங்க்ளின். 17 பிள்ளைகளைக் கொண்ட ஓர் ஏழைப் பெற்றோருக்கு மகனாகப் பிறந்த இவர் தனது கடின உழைப்பாலும் விடமுயற்சியாலும் சமூகத்தில் ஒரு உயர்ந்த இடத்தைப் பிடித்தார்.

இடிதாங்கி (lightning conductor), வெள்ளெழுத்துக் கண்ணாடி (bifocal lens) ஆகியவை இவரின் கண்டுபிடிப்புக்களாகும். தனது கண்டுபிடிப்புக்கள் அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்பதற்காக தனது கண்டுபிடிப்புக்களுக்கு காப்புரிமை கூட பெற மறுத்தவர் பிராங்க்ளின். மேலும் புகழ்பெற்ற அமெரிக்கப் பல்கலைக்கழகமான பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தை (University of Pennsylvania) நிறுவியவரும் இவர்தான்.

# கடலுக்கடியே இந்துக் கோவில்



## ஒரு கோவிலிலிருந்து பார்த்தால் இன்னொரு கோவிலும் தெரியுமாம்

கடலுக்கு நடுவே அமைந்திருக்கும் இந்துக் கோயில் பற்றி கேள்விப்பட்டுள்ளீர்களா? அத்தகைய ஒரு கோவில் இந்தோனேஷியாவில் அமைந்துள்ளமை அனேகரது கவனத்தை ஈர்த்த ஒரு விடயமாக அமைந்துள்ளது.

இந்தோனேஷியாவின் கடலுக்கு நடுவே அமைந்திருக்கும் இந்த கோயில் "தன்னா லொட் " (Tanah Lot) என அழைக்கப்படுகின்றது. இது கடல் கோயில் எனவும் அழைக்கப்படுகின்றது. கடற்கரை சார்ந்து கட்டப்பட்டிருந்த இந்த கோயிலானது மண்ணரிப்பு காரணமாகவே கடலுக்கு நடுவே அமையப் பெற்றதாக கூறப்படுகின்றது. அது மட்டுமன்றி இந்த கோவில் பற்றி பல மர்மங்களும் நிலவுகின்றன.

"தன்னா லொட்" என்பற்கு இந்தோனேசிய மொழியில் கடலின் நிலம் என அர்த்தமாகின்றது. பாலி எனும் பகுதியில் கடலில் 7 கோயில்கள் காணப்படுகின்றன. இந்த கோயிலும் அவற்றுள் ஒன்றாகும். இந்த கோயில்களின் சிறப்பம்சம் என்னவென்றால் ஒரு கோயிலிலிருந்து பார்த்தால் இன்னொரு கோயிலும் தெரியும்படியே இது கட்டப்பட்டுள்ளது.

16 -ம் நூற்றாண்டில் டாங்யாங் நிரார்த்தா என்பவரால் இந்த கோயில் உருவாக்கப்பட்டுள்ளது என கூறப்படுகின்றது. இவர் தென் கடற்கரையில் மேற்கொண்ட தனது பயணத்தின்போது தீவு பாறையில் அமைந்துள்ள அழகிய அமைப்பைக் கண்டுள்ளார். பின்னர், அங்கு ஓய்வெடுக்க முடிவெடுத்து இரவை அங்கேயே கழித்தார். இதையடுத்து, அங்குள்ள மீனவர்களிடம் பாறையில் ஒரு கோயில் கட்டும்படி கூறினார். ஏனென்றால் ,இந்த இடமானது பாலினிய கடல் கடவுள்களை வணங்குவதற்கான புனித இடமாக அவர் உணர்ந்தார்.

இந்நிலையில்,1980-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட கடும் புயலின் காரணமாக கோயிலின் முன்புறம் பாதிப்படைந்தது. அதனைத் தொடர்ந்து கோயிலைச் சுற்றியுள்ள பகுதியும், கோயிலின் உட்பகுதியும் ஆபத்தை எதிர்கொண்டது.

இந்த கோவிலின் நிலையை அறிந்த ஜப்பான் அரசு கோவில் மற்றும் இப்பகுதிகளை சுற்றிவர அமைந்துள்ள குறிப்பிடத்தக்க இடங்களையும் பாதுகாக்கும் நோக்கில் இந்தோனேசிய அரசிற்கு கடனுதவி செய்தது. இந்த உதவியின் காரணமாக கோவில் சீரமைக்கப்பட்டு பாதுகாப்பான இடமாக அறிவிக்கப்பட்டது.

இந்த கோயிலின் முக்கிய அம்சம் என்னவென்றால், கோயிலின் பாதுகாப்பிற்காகவும், பல தீய மனிதர்கள் மற்றும் தீய ஆவிகளிடமிருந்து பாது காப்பதற்காக கோயிலுக்கு அடியில் அதிக விஷத்தன்மை வாய்ந்த கடல் பாம்புகள் வாழ்ந்து வருவதாக நம்பப்படுகிறது. இந்த பாம்புகள் தான் கோயிலை பாதுகாத்து வருவதாகவும் சொல்லப்படுகிறது.

இந்த பாம்புகள் உண்மையாகவே கடலுக்கடியில் உள்ளனவா இலையா என்பது இன்னும் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை. கடலுக்கு நடுவில் அமைந்துள்ள இந்த கோயிலுக்கு சுற்றுலா பயணிகளும் பெருமளவில் வருகை தருகின்றனர். ●

# மனதை இயல்பான நிலையில் பேணுவதில் யோகா ஒரு சக்திமிகு கருவியாக அமைகின்றது

## வாழ்க்கையில் நீண்ட கால இலக்குகளை நோக்கி முன்னேறுவதற்கு நல்ல உடல் ஆரோக்கியத்துடன் சிறந்தவொரு மன நிலையும் தேவை



"நான் காலையில் செய்யும் முதல் விஷயம், ஒரு கப் வெதுவெதுப்பான நீரில் என்னை நீரேற்றம் (hydrate) செய்வதாகும், ஏனெனில் இது ஒரு சிறந்த நச்சு நீக்கியாகும். அதன் பின்னர், நான் சுமார் அரை மணி நேரம் யோகா மற்றும் சில எரோபிக் பயிற்சிகள் செய்கிறேன்," என இந்தியாவின் இன்வெஸ்ட்மென்ட் பேங்கிங் நிறுவன நிறைவேற்று அதிகாரி சோனியா தாஸ் குப்தா தெரிவித்துள்ளார்.

பிரபல எக்கனாமிக்ஸ் டைம்ஸ் பத்திரிகையில் வெளியாகிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த நேர்காணலில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் வழங்கியுள்ள பதில்கள் வருமாறு

**கேள்வி - இரண்டு தசாப்தங்களுக்கு மேலான அனுபவத்துடன் வங்கியாளராகவும், முதலீட்டு நிபுணராகவும் - உங்களை எவ்வாறு மனதளவில் ஆரோக்கியமாக வைத்திருக்கின்றீர்கள்?**

**பதில் -** எந்தவொரு துறையிலும் நீண்ட கால இலக்குகளை நோக்கி முன்னேறும்போது குறுகிய கால முடிவுகளை கையாள்கையில் இரண்டிற்குமிடையே சமநிலையை ஏற்படுத்துவதற்கு ஒரு நல்ல உடல் ஆரோக்கியத்துடன் சிறந்த ஒரு மன நிலையும் தேவை. என்னைப் பொறுத்தவரை, மனநலம் என்பது உடல் நலத்துடன் நெருங்கிய தொடர்புடையது. உடல் மற்றும் மனதின் வலுவூட்டலை நான் நம்புகிறேன். ஏனென்றால் மனதானது நமது ஆற்றல், கவனம் மற்றும் சகிப்புத்தன்மையை இயக்கும் தன்மையை கொண்டதாகும்.



என்னை மனதளவில் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் வைத்திருக்க, நான் தியானத்தின் மூலம் நினைவாற்றலைப் பயிற்சி செய்கிறேன், நன்கு சமச்சீரான உணவைத் தேர்ந்தெடுத்து, எனக்குப் பிடித்த விடயங்களை பார்ப்பது, நண்பர்கள்ஃகுடும்பத்தினருடன் கலந்து பேசுவது அவர்களை சந்திப்பது அல்லது கால அட்டவணையை பொருத்து நல்ல விடயங்களை வாசிப்பதிலும் நேரத்தை செலவிடுகின்றேன். மனதளவில் சுறுசுறுப்பாக இருக்க நான் கையாளும் வழிமுறை இதுவே ஆகும்.

ஆகவே, மனதை இயல்பான நிலையில் வைத்திருக்க யோகா ஒரு சக்திவாய்ந்த கருவி என கூறுவேன்.

**கேள்வி - உங்கள் தினசரி நடவடிக்கைகளின் மூலம் நீங்கள் பின்பற்றும் குறிப்பிட்ட வழி முறைகள் உள்ளனவா?**

**பதில் -** ஒரு சிறந்த முறையிலான காலை கடன்களை மேற்கொள்வதானது நாளுக்கு நாள் உச்ச செயல்திறனை அடைய உதவுகிறது. அதற்கமைய எனது உடல் கடிகாரமானது தினமும் அதிகாலையில் என்னை எழுப்பும் வகையில் சீரமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, காலையில் நான் செய்யும் முதல் விடயம், ஒரு கப் வெதுவெதுப்பான நீரில் என்னை நீரேற்றம் செய்வதாகும், இது ஒரு சிறந்த நச்சு நீக்கியாகும். அதன் பிறகு, நான் யோகாவில் ஈடுபடுகிறேன்.

**கேள்வி - ஒரு வங்கியாளர் என்ற ரீதியில் உங்கள் தொழில் பயணம் பற்றி சற்று கூறுங்கள். இதன் ஆரம்பம் எவ்வாறு அமைந்தது ?**

**பதில் -** நான் வளர்ந்து வரும் போது, ஒரு மருத்துவராக வர வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கியிருந்தது. ஆனால், நான் எண்ணியது அமையவில்லை. எனினும் எனது பிளான் B யின் ஒரு பகுதியாக, பொருளாதாரம், கணிதம், புள்ளிவிபரவியல் ஆகியன குறித்து கற்பதற்கு கல்லூரியில் அனுமதி பெற்றேன் பின்னர் நான் எனது ஆர்வத்தை கண்டறிந்து, முதலீட்டு வங்கியாளராக ஆவதற்கு நிதித்துறையில் உயர் கல்வியை தொடர முடிவு செய்தேன். இறுதியில் 2022 ஆம் ஆண்டில் முதலீட்டு வங்கி வணிகத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக உயர்த்தப்பட்டேன். இது எனது தலைமைத்துவ திறனை மேலும் மேம்படுத்தியது.

**கேள்வி - தலைமைப் பொறுப்புக்களை வகிப்பதில் மன ஆரோக்கியம் எத்தகைய பங்கை வகிக்கின்றது?**

**பதில் -** வளர்ச்சியை மையமாகக் கொண்ட தலைமைக்கு மன ஆரோக்கியம் அவசியம். இது ஒருவரைக் கூர்மையாகவும் மாற்றியமைக்கக் கூடியதாகவும் வைத்திருக்கும் ஒரு ரகசிய நுட்பமாகும். ●

# வட்ஸப்பில் வழியுண்டு

நமது தனிப்பட்ட படங்களோ, குரல் செய்திகளோ, வீடியோக்களோ வட்ஸப் (whatsapp) குழுமங்களில் தவறுதலாகப் பகிரப்பட்டால் (தவறான செய்திகள் அல்ல) அச்செய்தி குரூப்பில் உள்ள பலரது பார்வைக்கும் சென்று சங்கடத்தை ஏற்படுத்தி விடும் அல்லவா?

இதற்குத் தீர்வாக நாம் இணைந்துள்ள வட்ஸப் குரூப் அனைத்தையும் ஆர்க்கைவ் (Archive) செய்து விட்டால் இந்த சங்கடத்தைத் தவிர்க்க முடியும்.

ஆர்க்கைவ் செய்வதன் மூலம் வட்ஸப் குரூப் அனைத்தும் Chats பட்டியலின் இறுதிக்குச் சென்று விடும். தேவையானபோது Archive பட்டியலிலிருந்து குழுமங்களை அணுக முடியும்.

குழுமங்களை ஆர்க்கைவ் பட்டியலில் சேர்த்தாலும் செய்திகள் தவறுதலாக நண்பர்களுடன் பகிரப்பட வாய்ப்பில்லையா என ஒரு கேள்வி எழலாம். நிச்சயமாக நண்பர்களுடனும் செய்திகள் தவறுதலாகப் பகிரப்படலாம். ஆனால் பாதிப்பு குறைவாக இருக்கும்.




# ஞாபக சக்தியை அதிகரிக்க

# சத்குரு கூறும் நல்வழிகள்

**சத்குரு:** நாம் விரும்புவது நடப்பதென்பது எந்த ஒரு மனிதருக்கும் அது அவர்கள் விரும்புவதால் மட்டுமே நடக்காது. அதற்குரிய திறமையை சம்பாதித்தால்தான் நடக்கும். திறமை இல்லாமல், எனக்கு இது நடக்க வேண்டும், அது நடக்க வேண்டும் என்று நினைத்தால், பகல் கனவு தான் நடக்கும்.

நம் ஞாபக சக்தியையும் செயல்திறனையும் நம் உள்சூழ்நிலையை சரியாக கையாண்டால், அதனை பெரிய அளவில் மேம்படுத்த முடியும். வாழ்க்கை நடக்க வேண்டும் என்றால், தேவையான திறமையை நாம் சம்பாதிக்க வேண்டும். நம் திறமை என்பது, நம் வாழ்க்கையுடைய ஒவ்வொரு சூழ்நிலையிலும், நம்மால் எவ்வளவு புத்திசாலித்தனமாக செயல்பட முடியும் என்பதை சார்ந்து இருக்கிறது.

புத்திசாலித்தனமாக செயல்படுவது என்பது, மூளை எவ்வளவு சிறப்பாக ஒருங்கமைந்து இருக்கிறது என்பதை சார்ந்திருக்கிறது. நம் நாட்டில், பழங்காலத்தில், மூளைக்கு எப்படி பயிற்சி கொடுப்பது, அதை எப்படி முடிந்தவரை தீவிரமாக ஒருங்கமைப்பது என்பது தொடர்பில் விரிவான முறைகள் இருந்தன.

### மந்திரங்கள் கட்டமைக்கப்பட்டுள்ள விதம்

1930 களில் நடந்த ஒரு அழகான சம்பவம் இது. மக்கள் தொடர்ந்து மந்திரங்கள் சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். கோவில்களிலோ, எங்கேயோ ஹோமங்கள் செய்யும் போதோ எல்லோரும் மணிக்கணக்கில் மந்திரம் சொல்வதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? இப்படி மந்திரம் சொல்வதை மூளையை பெரிய அளவில் ஒருங்கமைக்க பயன்படுத்தினார்கள். ஏனென்றால், நீங்கள் பயன்படுத்தும் ஒலிகள், மூளையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இந்த மந்திரங்கள் எப்படி கட்டமைக்கப்பட்டது என்றால், இதில் கொஞ்சம் கணிதம் இருக்கும், கூடவே கொஞ்சம் கவித்துவமும் இருக்கும். ஒரு குறிப்பிட்ட நிலையில் முறைப்படுத்தப்பட்ட ஒலிகளை பயன்படுத்தும்போது, அது அவர்களின் மூளையை ரொம்பவே ஒருங்கமைத்ததால், அவர்களுக்கு அபாரமான நினைவாற்றல் இருந்தது. இது கிட்டத்தட்ட மனிதனுக்கு சாத்தியமே இல்லாதது. பொதுவாக நவீன காலத்தில் இது மனிதனுக்கு சாத்தியம் இல்லை என்று நாம் நினைக்கிறோம். இந்த ஒலிகளை ஒரு குறிப்பிட்ட வழியில் பயன்படுத்தியதால், அவர்களுக்கு அந்தமாதிரி ஞாபக சக்தி இருந்தது.

### புரோகிதரின் ஞாபக சக்தி

ஒரு சமயம், இரண்டு பேர் காசிக்கு போனார்கள். அவர்கள் நண்பர்கள். ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் பேசிக்கொண்டு, வியாபார ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அப்போது ஒரு நண்பர் அடுத்தவருக்கு வியாபாரம் செய்வதற்காக 50,000 ரூபாய் கொடுப்பதாக ஒத்துக்கொண்டார், அங்கேயே வாய்மொழியாக ஒப்பந்தம் செய்துகொண்டார்கள், செயல்படுத்தினார்கள். சில வருடங்களுக்குப் பிறகு, எழுதிய பத்திரம் இல்லாததால், இவர் பணத்தை திரும்ப கேட்டபோது, அடுத்தவர் சொன்னார், "நீ என்னிடம் கொடுக்கவே இல்லை, அப்படி எதுவும் நடக்கவே இல்லை." என்றார்.

அதனால் அவர் நீதிமன்றத்திற்கு போனார். நீதிமன்றத்திற்கு போனபோது அவரிடம் எந்த ஆதாரமும் இல்லை. அவர் "பணம் கொடுத்தேன்," என்று சொன்னார், ஆனால் அவரிடம் ஆதாரம் இல்லை. அப்போது நீதிபதி, "நீங்கள் ஏதாவது ஆதாரம் கொண்டுவர வேண்டும், இல்லையென்றால் நாங்கள் எதுவும் செய்யமுடியாது," என்று சொல்லிவிட்டார்.

அப்போது அவருக்கு ஞாபகம் வந்தது. அவர்கள் ஆற்றில் இருந்தபோது, அவர்களின் அருகில் ஒரு பிராமண புரோகிதர் குளித்துக் கொண்டிருந்தார். "நாம் பேசியதை அவர் கேட்டிருப்பார், அவரை ஒரு சாட்சியாக கொண்டுவரலாம்," என்று நினைத்தார்.

அவரை தேடி காசிக்கு போனார், அவரை கண்டுபிடித்தார், ஆனால் பெரிய ஏமாற்றம், ஏனென்றால் அந்த புரோகிதருக்கு ஆங்கிலம் தெரியாது. இவர்கள் இருவரும் ஒப்பந்தம் செய்துகொண்டபோது ஆங்கிலத்தில் பேசிக்கொண்டார்கள், இந்த புரோகிதருக்கு ஆங்கிலம் தெரியாது. இது பிரயோஜனம் இல்லாதது என்று நினைத்தார். அப்போது அந்த பிராமணர், "ஏன், என்ன ஆச்சு?" என்று கேட்டார்.



அவர் சொன்னார், "நான்கு வருடங்களுக்கு முன்பு நாங்கள் இங்கே குளித்துக் கொண்டிருந்தோம், நீங்களும் இருந்தீர்கள், உங்களை ஒரு சாட்சியாக அழைக்கலாம் என நினைத்தேன்" என்றார்.

அதற்கு அந்த பிராமணர், "சரி, நீங்கள் சொன்னதை என்னால் திரும்ப சொல்ல முடியும், நீங்கள் இருவரும் பேசிக்கொண்டதை நான் அப்படியே ஒப்பிக்க முடியும்," என கூறினார்.

அவருக்கு ஆங்கில மொழி தெரியாது, ஆனால், அவர்கள் பேசியதை ஒரு வார்த்தை விடாமல் திரும்ப கூறினார். அவர்கள் உச்சரித்த ஒவ்வொரு சப்தமும் அவருக்கு நினைவிருந்தது. அவருக்கு அதனுடைய அர்த்தம் தெரியாது, மொழி தெரியாது, ஆனால் அவர்கள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் அப்படியே சொன்னார். அவரை நீதிமன்றத்திற்கு கொண்டுவந்து வழக்கில் வெற்றி அடைந்தார்.

ஒலிகள் ஒருவரது மூளையை ஒருங்கமைப்பதால் அவர்களுக்கு அபாரமான நினைவாற்றல் ஏற்படுகின்றது என்பதை இது சிறப்பாக உணர்த்துகின்றது. ■



# பின்வாங்குவாரா மகிந்த ராஜபக்ச?

இலங்கையின் 10ஆவது நாடாளுமன்றத்தை தெரிவு செய்வதற்கான தேர்தல் இடம்பெற்று நிறைவடைந்தது.

பல மாற்றங்களைக் கொண்டு வந்த இம்முறை நாடாளுமன்றத் தேர்தல் ராஜபக்ச குடும்பத்தினருக்கு அவ்வளவு சுபமாக அமையவில்லை. தமது சொந்த ஊரில் கூட ராஜபக்ச தரப்பினர் கடும் தோல்வியைத் தழுவியிருந்தனர்.

இவ்வாறான பின்னணியில், மகிந்த ராஜபக்ச அரசியலில் இருந்து பின்வாங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. வீழ்ந்த இடத்திலிருந்து மீள எழ முடியாத ஒரு சூழலில் ராஜபக்ச குடும்பத்தினர் உள்ளனர். அடுத்து என்ன செய்வது என்பது தொடர்பில் பல கட்ட பேச்சு வார்த்தைகள் இடம்பெற்று வந்தாலும் சரியான ஒரு தீர்மானத்தை எடுக்க முடியாத நிலையில் மகிந்த ராஜபக்ச உள்ளார். சில சந்தர்ப்பங்களில் அவர் அரசியலில் இருந்து ஒதுங்கிவிடலாம் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.




கனுஷியா புஷ்பகுமார்

# ரணிலின் தந்திர திட்டம்



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியலில் இருந்து நாடாளுமன்றத்துக்கு பிரவேசித்து எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்கவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதற்கு மேலும் பல ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.க்கள் ஆதரவளிக்கவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

சஜித் பிரேமதாசவுடன் இணைந்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு குறிப்பிடத்தக்க சவாலை மேற்கொள்ள முடியாது என அந்த எம்.பி.க்கள் குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கருதுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. அந்த நிலைமையின் அடிப்படையில் அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்க்கட்சித் தலைமையின் கீழ் செயற்பட தீர்மானித்துள்ளதாகவும் அறியமுடிகிறது.

# மகிந்தவின் பிறந்தநாளன்று குவிந்த சொகுசு வாகனங்கள்!

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பிறந்ததினம் கடந்த 18ஆம் திகதி கொண்டாடப்பட்டது. 79 வயது பூர்த்தியடைந்த மகிந்த ராஜபக்சவை நேரில் கண்டு வாழ்த்து தெரிவிக்க அரசியல் தலைமைகள் பலரும் கலந்துக்கொண்டிருந்ததாக தகவல்கள் கூறுகின்றன.

கடந்த 14ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் இடம்பெற்றிருந்த நிலையில் அதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கடும் தோல்வியை தழுவியிருந்தது. இந்நிலையில், கடந்த 18ஆம் திகதி கொண்டாடப்பட்ட மகிந்தவின்



பிறந்த நாளை முன்னிட்டு தேர்தலில் தோல்வியடைந்த பலர் அவரின் இல்லத்திற்கு சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பலரும் கலந்துகொண்டிருந்த நிலையில் அதிசொகுசு வாகனங்களில் அவர்கள் வருகைத் தந்துள்ளமை காணொளியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்ற பின்னர், அதிசொகுசு வாகனங்கள் பல பிரதேசங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதோடு, அவற்றில் போலியான இலக்கத்தகடுகள், சட்டவிரோதமாக இணைக்கப்பட்டமை போன்ற விடயங்கள் வெளிவந்தன.

அவ்வாறு சட்டவிரோத குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக பேதமின்றி சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.



## ரணிலுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கை!

நாடாளுமன்ற தேர்தலில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபாவுக்கு இரண்டு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளில் ஒன்றை வழங்குமாறு புதிய ஜனநாயக முன்னணியின் மூன்று முக்கிய பங்குதாரர்கள் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் துமிந்த திஸாநாயக்க, புதிய ஜனநாயக கூட்டணியின் தலைவர் நிமல் லான்சா, ஐக்கிய மக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் லசந்த அழகியவன்ன ஆகியோர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

# எதிர்வரும் ஜனவரியில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்

[illegible]




[illegible]

## (சிறுகதை)

# ஒற்றைத் தென்னை

தேங்காய் பொறுக்குவதற்கென்றே ஊரவர்கள் அந்தத் தெருவழியாய் நடந்து செல்வார்கள். அவர்களுடைய அனுபவத்தின்படி எந்தெந்த நேரங்களில் அந்தத் தென்னை மரத்திலிருந்து தேங்காய் விழுந்து கிடக்கும் என்று நினைக்கின்றார்களோ அந்தந்த நேரங்களில் செல்வார்கள். ஒரு சிலருக்கு காலை நேரம் ஆறு மணி, இன்னும் சிலருக்கு பகல் பன்னிரெண்டு தொடக்கம் மூன்று மணி, வேறு சிலருக்கு மாலை நேரம் ஆறு மணி தொடக்கம் ஏழு மணிவரை என்பது அவர்களுக்கான தேங்காய்கள் விழுகின்ற நேரங்கள்.

ஒரு தேங்காயைப் பொறுக்கிக் கொண்டால் ஒரு குடும்பத்திற்கு மூன்று நாளைக்குப் போதுமானதாயிருக்கும். ஊரவர்கள் யாருக்காவது மூன்று தேங்காய்கள் பொறுக்கிக் கொள்வதற்குக் கிடைத்தால் அதிலிருந்து ஒரு போத்தலிற்கு குறையாத உருக்கெண்ணெய் எடுத்துக் கொள்ளலாம். அத் தேங்காயை உடைக்கின்ற பொழுது அதிலிருந்து வருகின்ற இளநீர் இரு பிள்ளைகளின் தாகம் தீர்ப்பதற்கும் போதுமானதாய் இருக்கும்.

தேங்காயைத் துருவுகின்றபோது பிள்ளைகள் ஓடி வந்து தேங்காய்ப் பூவை அள்ளியெடுத்து வாயிலிட்டு தின்று மகிழ்வதுண்டு. அத்தேங்காய்ப்பூவின் சுவை மிகவும் பிரமாதமாக இருக்கும். செத்தல் மிளகாய், உப்பு, சின்ன வெங்காயம், தேசிப்புளி இட்டு அத்தேங்காய்ப்பூவில் சம்பல் இடித்தெடுத்தால் அது தேவலோகத்திலிருந்து பெற்றுக் கொண்ட சம்பல் போல் மிகவும் சுவையானதாக இருக்கும். அதனால்தான் அந்த தென்னை மரத்திலிருந்து தேங்காயைப் பொறுக்கிக் கொள்வதற்கு சனங்கள் முண்டியடித்துக் கொள்கின்றார்கள். கோடை காலங்கள் நெருங்கி விட்டால் வெய்யில் கொடுமை தாங்க முடியாத இளம்பெடியங்கள் ஒன்றுகூடி அந்தத் தென்னை மரத்தில் ஏறி இளநீர் பிடுங்கி வெட்டிக் குடித்து அதன் வழுக்கையை



சாப்பிட்டு ஏப்பம் விடுவதுமுண்டு. எத்தனையோ அம்மாமார் அடுப்பெரிப்பதற்காக விறகு தேடி அந்த வெற்றுக் காணிக்குள் சென்று தென்னை மர மட்டைகளைப் பொறுக்கியெடுத்து அடுப்பெரித்த அனுபவமும் உண்டு.

மட்டக்களப்பில் கிளை பிரியும் சந்தியிலேதான் அந்த ஒற்றைத் தென்னை மரம் ஓங்கி வளர்ந்து நிற்கின்றது. அந்த வெற்றுக் காணியின் சொந்தக்காரர் நாளடைவிலே எங்கு சென்றுவிட்டார் என்பது பற்றிய தகவல் எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. யுத்த காலத்திலே இடம்பெற்ற இடம்பெயர்வு அவரையும் வேறு நாட்டிற்கு குடிபெயரச் செய்திருக்கலாம்.

எப்படியோ இன்று அந்தக் காணியில் வல்லிபுரத்தார் வீடுகட்டிக் குடியிருக்கிறார். இவர்களுக்கு அயல் வீட்டிலிருப்பவர் அரச நிறுவனம் ஒன்றில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றுகின்றார். இடமாற்றம் பெற்று மட்டக்களப்பிற்கு வந்தபோதுதான் வல்லிபுரத்தாரின் வீட்டிற்கு அடுத்த வீட்டில் வாடகைக்கு வந்திருக்கிறார். ஒரு நாள் காலை அவர் அலுவலகத்திற்கு செல்ல முற்பட்டபோது வல்லிபுரத்தாரின் தென்னை மரத்திலிருந்து விழுந்த தேங்காய் உத்தியோகத்தரின் தோளில் விழுந்ததால் காறை என்பு முறிந்து போனது.

முறிவு வைத்தியரிடம் சென்று முட்டைப்பத்து போட்டு ஆறு வாரங்களாக வீட்டிலிருந்தார். அவருடைய மகன் ஒரு நாள் பாடசாலைக்குச் செல்கின்றபோது அவன் மீதும் தேங்காய் விழுந்து பாதிப்புகள் எதுவும் இன்றி தப்பித்துக் கொண்டான். தேங்காய்கள் உத்தியோகத்தரின் வீட்டிலே விழுவதனால் கூரை ஓடுகள் உடைந்து போவதும் மழை பெய்தால் வீடு முழுவதும் தண்ணீரால் நிரம்பிவிடும். இதனால் அவர் பல முறை அவதிப்பட்டிருக்கிறார்.

உத்தியோகத்தர் வல்லிபுரத்தாரிடம் இந்த பிரச்சினை பற்றி பல முறை எடுத்துச் சொன்னாலும் வல்லிபுரத்தார் மாற்று நடவடிக்கை எடுத்ததாய் இல்லை.

அன்றொருநாள் அலுவலகம் முடிந்து வந்து கொண்டிருக்கும்போது அவர்களுக்கான கிராம சேவகரிடம் சென்று தென்னை மரத்தால் தங்களுக்கு இருக்கிற பிரச்சினை பற்றி முறைப்பாடு எழுதிக் கொடுத்து விட்டு வந்தார். கிராம சேவகர் இந்த பிரச்சினை பற்றி வல்லிபுரத்தாருக்கு தெரியப்படுத்தி மாற்று நடவடிக்கை எடுக்கும்படி அறிவுரை கூறியிருந்தார். ஆனால் வல்லிபுரத்தார் மாற்று நடவடிக்கை எதுவும் எடுத்ததாய் இல்லை.

அன்று காலை பதினொரு மணியாகிக் கொண்டிருந்தது. வேலைப்பரபரப்பின் மத்தியிலே பொலிஸ்காரர்கள் வல்லிபுரத்தாரின் கேற்றைத் தட்டி "உங்கள் தென்னை மரத்தினாலே அயலவர்கள் இடர்பாடுகளைச் சந்திப்பதாக முறைப்பாடு செய்திருக்கிறார்கள். இன்னும் இரண்டு நாட்களிலே இந்தத் தென்னை மரத்தை நீங்கள் வெட்டவில்லையானால் உங்களை நீதிமன்ற நடவடிக்கைக்கு கொண்டு செல்வோம்" என்று எச்சரித்துவிட்டுச் சென்றனர்.

இன்னும் இரண்டு நாட்கள் கழிந்தன. அந்த வீதிவழியாக, "மரம் தறிக்கிறது, வளவு துப்பரவு செய்கிறது" என்று கூவிக் கொண்டு மூன்று பேர் வந்திருந்தனர். அவர்களை மறித்து தென்னை மரத்தினை வெட்டுவதற்கான பொருத்தம் பேசி கூலியையும் பேசிக் கொண்டார்.

இப்போது ஓங்கி வளர்ந்த தென்னை மரம் முற்றாக வெட்டப்பட்டாயிற்று. ஆனால் அந்தத் தேங்காயைத் தன்னால் அனுபவிக்க முடியவில்லை எனும் கவலை மட்டும் அவரை வாட்டிக் கொண்டிருந்தது.

வெட்டப்பட்ட தென்னை மரத்திலிருந்து எடுக்கப்பட்ட குருத்துக்களை சிறுவர்கள் இரசித்து ருசித்து தின்று கொண்டிருந்தனர். தென்னை மரத்திலிருந்து இருபத்துநான்கு கை மரங்களையும், மரம் வெட்டிகள் வெட்டிக் கொடுத்திருந்தனர்.

வெட்டப்பட்ட கை மரங்களை மரக்கடையில் கொடுத்து விட்டு அதற்கான பணத்தோடு வீடு திரும்பினார். அந்த மரத்திலிருந்து வீழ்ந்த காவோலைகளைக் கொண்டு இளைக்கப்பட்ட கிடுகுகள் ஒரு பக்கமாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

வல்லிபுரத்தார் சேர்த்து வைத்திருந்த வட்டிக்காசுகளைக் கொண்டு தூரத்திலே ஒரு காணியை வேண்டி இப்போது இரண்டு வருடங்களாகின்றன. இந்த காணியில் ஒற்றைத் தென்னை மரத்திற்குப் பதிலாக ஐம்பது தென்னங்கன்றுகளை நட்டு பராமரித்து வருகின்றார். தினமும் மாலை நேரத்தில் அதற்கு நீர் இறைத்து பராமரித்தும் வருகின்றார்.

தன்னிடமிருந்த ஒற்றைத் தென்னை மரம் போல இந்த ஐம்பது தென்னைகளும் வளர்ந்து பலன் தரும் என்பது அவரின் எதிர்பார்ப்பாய் இருக்கின்றது. ஆனால் அந்தத் தென்னை மரங்கள் வளர்ந்து பலன் தருவதை அவரால் அனுபவிக்க முடியுமா இல்லையா என்பதுதான் தெரியவில்லை. இன்று என்னுடையது நாளை இன்னும் ஒருவருடையது என்பது போல சில வேளைகளில் அந்தத் தென்னை மரங்கள் நாளை இன்னும் ஒருவருடையதாய் இருக்கும் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

கு. குணறுபேஸ்
தாமரைக்கேணி




# ஒடுக்கப்பட்ட இனத்தின் உரிமைக்குரலாக ஒலித்த தெணியான்



ஈழத்து இலக்கிய களத்தில் குறிப்பிடத்தக்க ஒருவராக தெணியான் காணப்படுகின்றார். இவரது எழுத்துக்களானது மனிதநேயத்துக்குப் புறம்பான வலிகளையும் வேதனைகளையும் சுமந்து வந்தன.

ஒரு படைப்பாளி தனது வாழ்க்கைப் பரப்பின் மேல் கிளம்புகின்ற அனுபவத் திரட்டுகளின் அடியாகவே இலக்கியங்களை படைக்கின்றான். அவனது வாழ்வின் அடியான அனுபவத் தேடலானது கடந்த கால நிகழ்கால அனுபவச்சாரல்களைக் கொண்டதாக அமையும்.

அந்தவகையில் அனுபவப் பிரதட்சணத்தின் அடியாகப் பிறப்பெடுத்த ஓர் எழுத்தாளனே தெணியான். இவரின் எழுத்துக்கள் ஒடுக்கப்பட்ட இனத்தின் உரிமைக் குரலாக விளங்குகின்றது. ஈழத்தில் தமிழர் கலாசாரத்தில் சாதியம் என்பது தவிர்க்க முடியாத ஒரு பிரச்சினையாகக் காணப்பட்ட காலத்தில் தெணியான் இலக்கிய உலகில் அடி எடுத்து வைக்கின்றார். இவர் மத்திய தரவர்க்கத்தைச் சேர்ந்தவராகக் காணப்படுகின்றார்.

ஆதிக்கம் பெற்ற ஒரு மனிதக்குழு ஆதிக்கம் இழந்த ஒரு மனிதக் குழுவினை அடிமைகளாகப் பாவித்து அவர்களின் மீது நடாத்திய மனித வலிகள் தெணியானின் கதைகளில் நிறையவே காணப்படுகின்றன. இத்தகைய அடிமைப்படுத்தப்பட்ட மனிதக் குழுக்களின் பிரச்சனைகளை வலியோடும் வேதனையோடும் இவர் தன் கதைகளில் கருப்பொருளாக்கினார்.

இவர் 1942 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆறாம் திகதி வல்வெட்டித்துறை பொலிகண்டி என்ற இடத்தில் பிறந்தார். இவரது இயற்பெயர் கந்தையா நடேசு. இவரின் தாய் செல்லம்மா. தந்தை கந்தையா இவரது மனைவி பெயர் மரகதம். இவருக்கு நான்கு பிள்ளைகள்.. இவர் 1984 களில் இலக்கிய உலகுக்கு வருகை தருகின்றார். சிறந்த ஆசிரியராகவும் எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் பல் துறை ஆற்றல் உள்ள ஒருவராகவும் இவர் காணப்பட்டார். இவர் 120க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார் இவரின் சிறுகதைத் தொகுதிகளாக 'சொத்து'– 1984, மாத்து 'வேட்டி' – 1990, 'இன்னொரு புதிய கோணம்', 'ஒடுக்கப்பட்டவன் 'என்பன தொகுதிகளாக வெளிவந்துள்ளன இவரின் நாவல்களாக 'விடிவை நோக்கி' –1973, 'கழுகுகள்'–1981, 'பொற்சிலையில் வாடும் புனிதர்கள்'–1989, 'மரக்கொக்கு'– 1994, 'காத்திருப்பு' – 1999, 'கனவில் மான்' – 2002 , 'தவறிப் போனவன் கதை', என்பனவும் வெளிவந்துள்ளன

## தெணியான் என்ற படைப்புலகு......




இதேபோன்று இவரின் குறு நாவல்கள் சிதைவுகள், பனையின் நிழல், என்பனவற்றையும் குறிப்பிடலாம். இவரின் இலக்கிய நுட்பங்கள் இந்தியர்களால் தலித்திலக்கிய வகைக்குள் அடக்கப்பட்டுள்ளது.

இவரின் இலக்கிய படைப்புகள் ஒவ்வொன்றும் தமிழ் மக்களின் வரலாற்று அசைவியக்கத்தினை அறிவதற்கும் மிக முக்கியமான எழுத்துக் கருவியாகும். தனக்கென்று தனித்துவமான எழுத்துப் பாணியைக் கொண்ட இவர் பல விருதுகளைப் பெற்றுள்ளார். அந்த வகையில் கலாபூஷண விருது,இலங்கை சாகித்திய மண்டல விருது, கு. சின்னப்ப பாரதி அறக்கொடை விருது, கொடகே விருது ஆளுநர் விருது, என பல விருதுகளைப் பெற்றுள்ளார்

இவர் கட்டுரைகளிலும் கவனம் செலுத்தியுள்ளார் . அந்த வகையில் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களைப் பற்றி 19 அத்தியாயங்கள் கொண்ட கட்டுரை ஒன்றையும் எழுதியுள்ளார். படைப்புக்கான அனைத்துத் தகுதியினையும் கொண்ட தெணியான் காலத்தினை வென்று வரலாறாக மிளிருவார் என்பதில் ஐயமில்லை.

-எஸ் தனேஸ்வரி, யாழ்ப்பாணம்

### தெணியானின் இலக்கிய ஆக்கங்கள்:

(1) இன்னும் சொல்லாதவை – 2011 (வாழ்க்கை வரலாறு)
(2) இன்னொரு புதிய கோணம் –2007 (சிறுகதைகள்)
(3) ஈழத்திலிருந்து ஓர் இலக்கிய குரல் – 1992 (இலக்கியக் கட்டுரைகள்)
(4) ஏதனம் – 2016 (நாவல்)
(5) ஒடுக்கப்பட்டவர்கள் –2010 (சிறுகதைகள்)
(6) கழுகுகள் –1981 (நாவல்)
(7) காத்திருப்பு –1999 (நாவல்)
(8) கானலில் மான் – 2002 (நாவல்)
(9) குடிமைகள் – 2013 (நாவல்)
(10) சிதைவுகள் – 2003 (நாவல்)
(11) தவறிப்போனவன் கதை – 2010 (நாவல்)
(12) தெணியானின் ஜீவநதி சிறு கதைகள் – 2012 (சிறுகதைகள்)
(13) தேவராளி இந்து அதிபர் திரு மு சி சீனித்தம்பி அவர்கள் சேவை மலர் 1980 (பாடசாலை மலர்)
(14) நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில் பேராசிரியர் கா சிவத்தம்பி – 2012 (வாழ்க்கை வரலாறு)
(15) பனையின் நிழல் – 2006 (நாவல்)
(16) பூச்சியம் பூச்சியமல்ல –2013 (அனுபவக் கட்டுரைகள்)
(17) பொற்சிலையில் வாடும் புனிதர்கள் – 1989 (நாவல்)
(18) மனசோடு பழகும் மல்லிகை ஜீவா – 2014 (இலக்கியக் கட்டுரைகள்)
(19) மரக்கொக்கு – 1994 (நாவல்)
(20) மல்லிகை ஜீவா – 1999 (வாழ்க்கை வரலாறு)
(21) மல்லிகை ஜீவா – 1988 (நந்தி, தெணியான் தொகுப்பு)
(22) மல்லிகை ஜீவா மணிவிழா மலர் 2007 (மணி விழா மலர்)
(23) மாத்து வேட்டி – 1996 (சிறுகதைகள்)
(24) வெந்து தணிந்தது – 2017 (நாவல்)
(25) வெளியில் எல்லாம் பேசலாம் – 2023 (சிறுகதைகள்)

# உலக அரங்கில் தமிழை ஒலிக்கச் செய்த பெருந்தகை தவத்திரு தனிநாயகம் அடிகள்



"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!"

என்ற முகவரியுடன் உலக அரங்கில் தமிழை ஒலிக்கச் செய்த பெருந்தகையாளர் தவத்திரு தனிநாயகம் அடிகள். தமிழருக்குப் பெருமை சேர்த்த அடிகளாரின் தமிழ்த் தொண்டினை நினைவு கூருவது ஒவ்வொரு தமிழரதும் தலையாய கடமையாகும்.

குறுகிய வட்டத்துக்குள் குடமிட்ட விளக்காக இருந்த தமிழை, உலகெங்குமுள்ள பல்கலைக்கழகங்களில் "தமிழியல்" என ஆரம்பித்து வைத்து அதன் தொடர்ச்சியாக உலகத்தமிழாராய்ச்சி மாநாடுகள் மூலமாக "உலக மொழி"யாக்கிய பெருமைக்குரியவர் தவத்திரு தனிநாயகம் அடிகள். சிங்கப்பூர், மலேசியாவுக்கும் அடிகளுக்குமான தொடர்புகள் அளப்பரியன. சிங்கப்பூரில் அடிகள் பார்த்துக் கலந்து கொண்ட தமிழ் நிகழ்வுகளே அவரது "உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக் கனவுக்கு வித்திட்டமை குறிப்பிடத்தக்கது.

-விக்கி

# ஈழமும் தமிழும்

## -வட்டார மொழி வழக்குகள்

தமிழில் வட்டாரமொழி வழக்குகள், பெரும்பாலும் சொற்களை ஒலிப்பதிலேயே மாறுபடுகின்றன. மற்றும் பல்வேறு பழைய செந்தமிழ்ச் சொற்களினின்றும் பிறந்தவையாகும். எடுத்துக்காட்டாக, "இங்கே" என்ற சொல், தஞ்சாவூர் பகுதிகளில் "இங்க" என்றும், யாழ்ப்பாணம் (இலங்கை) பகுதிகளில் "இங்கை" என்றும் வழங்கப்படுகின்றது. ஆயினும் திருநெல்வேலி பகுதிகளில் "இங்கனெ" என்றும், இராமநாதபுரம் பகுதிகளில் "இங்குட்டு" "இங்கிட்டு" என்றும் வழங்கும் சொற்கள் "இங்கே" என்ற சொல்லில் கிளைத்தவை அல்லாமல் வேறு செந்தமிழ்ச் சொற்களினின்றும் பிறந்தவையாகும். இங்கனெ என்பது "இங்கணே" அல்லது "இங்கனே" என்பதன் மாற்றமும் "இங்குட்டு" "இங்கிட்டு" என்பது "இங்கட்டு" என்னும் செம்மொழிச்சொல்லின் மாற்றமும் ஆகும். "கண்" என்னும் சொல்லின் பொருள் இடம் ஆகும். சான்றாகச் சென்னைத் தமிழகராதி: lace site இடம். ஈர்ங்கண்மா ஞாலம் (குறள், 1058)". கட்டு என்னும் சொல்லும் கண் என்பதோடு–விகுதி சேர்ந்து வழங்கும்




சொல்லாகும். கொங்குநாட்டார் இன்றும் "அக்கட்டாலே போய் உட்கார்" என்று சொல்வதைக் கேட்கலாம். "இங்கன்" அல்லது "ஈங்கன்" என்பதும் பழைய இலக்கியங்களில் காண்பவை (சென்னைப்பல்கலைக் கழகத் தமிழகராதி காண்க). ஒரே சொல்லே பலவாறு சிதைந்ததாகக் கருதும் கோட்பாட்டைத் திருத்த உதவும். மேலும் வட்டாரவழக்குகள் பழைய இலக்கியச்சொற்கள் உண்மையிலேயே பேச்சில் வழங்கியதற்கு நல்ல சான்றாகவும் இருப்பதைக் காட்டும்.

பெரும்பாலான வட்டார மொழி வழக்குகளின் சொல் அகராதியில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை என்றாலும், சில வழக்குகள் பெரிதும் மாறுபடுகின்றன. இலங்கையில் பேசப்படும் தமிழின் சில சொற்கள், தமிழகத்தில் அன்றாட வழக்கில் பயன்படுத்தப் படுவதில்லை. "பாலக்காடு ஐயர்" போன்ற தமிழில் பல மலையாள சொற்கள் கலந்திருக்கும். சில இடங்களில் மலையாள வாக்கிய அமைப்பும் காணப்படும். இறுதியாக, ஹெப்பர் மற்றும் மாண்டையம் வட்டாரங்களில் பதினோறாம் நூற்றாண்டில் புலம் பெயர்ந்த வைணவ கோட்பாட்டைப் பின்பற்றும் தமிழர்களால் பேசப்படும் தமிழில் வைணவ பரிபாசையின் எச்சம் காணப்படுகிறது.

எத்னொலோக் (Ethnologue) என்ற மொழிகள் பற்றிய பதிப்பு நிறுவனம், தமிழில் 22 வட்டார வழக்குகள் இருப்பதாக தெரிவிக்கின்றது. அவையாவன: ஆதி திராவிடர், ஐயர், ஐயங்கார், அரவா, பருகண்டி, கசுவா, கொங்கர், கொரவா, கொர்சி, மதராஸ, பரிகலா, பாட்டு பாஷை, இலங்கை தமிழ், மலேயா தமிழ், பர்மா தமிழ், தெனாப்பிரிக்கா தமிழ், திகாலு, அரிஜன், சங்கேதி, கெப்பார், மதுரை, திருநெல்வேலி. கொங்கு மற்றும் குமரி ஆவன வேறிரு தெரிந்த வட்டார வழக்குகள். புவியியல் தொடர்பான வட்டார வழக்குகள் ஒருபுறமிருக்க, சமுதாய அடைப்படையிலும் பல்வேறு மட்டங்களில் தமிழ் மொழிப் பயன்பாட்டில் வேறுபாடுகளை கவனிக்கலாம். புதிய வழக்காக, தொலைக்காட்சி முதலான தொடர்புச் சாதனங்களும் இன்று பெருமளவுக்கு ஆங்கிலம் கலந்த தமிழைத் தமிழ் மக்கள் மத்தியில் புழக்கத்துக்கு விட்டுள்ளன. மேனாட்டுக் கல்வி மற்றும் அறிவியல் வளர்ச்சி தொடர்பில் புதிய சொல்லாக்கம், கலைச் சொல்லாக்கம் முதலிய அம்சங்களில் ஒருங்கிணைவு அற்ற முயற்சிகள் வேறுபட்ட மொழி வழக்குகளை உருவாக்கியுள்ளன. முக்கியமாக, இலக்கியம் மற்றும் அது போன்ற பண்பாட்டு மற்றும் மரபுவழிப் பயன்பாடுகளுக்கு அப்பால், கல்வி, அறிவியல், நிர்வாகம் மற்றும் இன்னோரன்ன நவீன துறைகளிலும் தமிழ் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு, இலங்கை போன்ற நாடுகளில் உருவாக்கப்படும் ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள், ஒரு பகுதியினர் பயன்படுத்தும் தமிழை இன்னொரு பகுதித் தமிழர் புரிந்து கொள்ளமுடியாத அளவுக்கு வேறுபாடுள்ள மொழி வழக்குகள் உருவாகக் காரணமாக உள்ளன.

தமிழ், தென் இந்திய மாநிலமான தமிழ் நாட்டின் பெரும்பான்மையினரதும், இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் மக்களதும் முதன் மொழியாகும். தமிழ் மேற்படி நாடுகளின் பிற பகுதிகளிலும், குறிப்பாக, இந்திய மாநிலங்களான கர்நாடகம், கேரளம் மற்றும் மகாராட்டிரத்திலும், இலங்கையில் கொழும்பு மற்றும் மத்திய மலை நாட்டுப் பகுதிகளிலும் வழங்கி வருகின்றது.

> மேனாட்டுக் கல்வி மற்றும் அறிவியல் வளர்ச்சி தொடர்பில் புதிய சொல்லாக்கம், கலைச் சொல்லாக்கம் முதலிய அம்சங்களில் ஒருங்கிணைவு அற்ற முயற்சிகள் வேறுபட்ட மொழி வழக்குகளை உருவாக்கியுள்ளன

தமிழ் மக்கள், 19 ஆம் நூற்றாண்டிலும், 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும், ஒப்பந்தக் கூலிகளாகவும், கீழ்நிலை அரசப் பணியாளர்களாகவும், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து பிரித்தானியப் பேரரசின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டனர். அவ்வாறு அவர்கள் சென்ற இடங்களில் தமிழ் பேசும் சமுதாயங்கள் உருவாகின. இவர்களின் வழிவந்தவர்கள் இன்று சிங்கப்பூர், மலேசியா, மொரீசியஸ் போன்ற நாடுகளில் குறிப்பிடத்தக்க குடித்தொகை கொண்டவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள். தென்னாப்பிரிக்கா, கயானா, பிஜி, சுரினாம் மற்றும் ட்ரினிடாட்டும் டொபாகோவும் போன்ற நாடுகளிலும் பலர் பூர்வீகத் தமிழராக இருந்தும், அந்நாடுகளில் தமிழ் மொழியை அவர்கள் பேசுவதில்லை.

மிக அண்மைக்காலங்களில், பெரும்பாலும் இலங்கையின் இன முரண்பாடுகள் காரணமாக அகதிகளாக அங்கிருந்து இடம் பெயர்ந்தவர்களும், ஓரளவு பொருளாதாரக் காரணங்களுக்காக இடம் பெயர்ந்தவர்களுமாக, பல தமிழர்கள் ஆஸ்திரேலியா, கனடா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள். தற்போது இவர்களில் பழைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் தமிழ் மொழியை ஓர் உயிர்ப்புள்ள மொழியாக வழங்கி வந்த போதிலும், இளைய தலைமுறையினர் பலர் தமிழ் மொழியைப் பயன்படுத்த இயலாதவர்களாகவும், ஆர்வமற்றவர்களாகவும் வளர்ந்து வருவதை கவனிக்க முடிகின்றது.

நன்றி : sites.google.com




# அவிழா முடிச்சுகள் - 02

(எஸ்.டொரின்)

# வசீம் தாஜுதீன் கடத்தப்பட்டாரா? | நடந்தது என்ன?

வசீம் தாஜுதீன் கொடூரமான முறையில் தாக்கப்பட்டு, கழுத்தில் கூரிய ஆயுதத்தினால் காயப்படுத்தப்பட்டு, இடுப்பு எலும்பு அடித்து உடைக்கப்பட்டுள்ளதுடன் , விலா எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ளது எனவும் பல ஆதாரங்கள் குற்றப்புலனாய்வு பிரிவினரால் முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஆவணங்களின் அடிப்படையில், நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன் பின்னர், இந்த வழக்கு விசாரணை வேறு ஒரு கட்டத்துக்கு நகர்ந்தது. 2015 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதமளவில் மற்றுமொரு உத்தரவு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது.






அதாவது , மேலதிக விசாரணைகளுக்கு தேவையான ஆதாரங்களை திரட்டுவதற்காக தெஹிவளை பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்பட்டிருந்த வசீம் தாஜுதீனின் சடலத்தை மீண்டும் தோண்டி எடுப்பதற்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

அதன் பின்னர், குறித்த பிரதேசம் கண்காணிப்பிலான பாதுகாக்கப்படும் பகுதியாக மாறியது. தாஜுதீனின் சடலம் தோண்டி எடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பள்ளிவாசலுக்கு முன்பாக ஒரு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

அந்த போராட்டமும் ராஜபக்ஷர் களுக்கு எதிரான ஒரு போராட்டமாகவே முன்னெடுக்கப்பட்டது. காரணம் ஆர்ப்பாட்டகாரர்கள் அவர்களுக்கு எதிரான கோசங்கள் பதாகைகள் என்பவற்றை தாங்கியவாறு குறித்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஒருவழியாக போராட்டங்களை கடந்து தாஜுதீனின் உடலும் தோண்டி எடுக்கப்பட்டது. தொடர்ந்து மேலதிக உடற்கூற்று ஆய்வுகளுக்காக தாஜுதீனின் உடற்பாகங்கள், அதற்கான சான்று பொருட்கள் ஆகியன ஒரு குறிப்பிட்ட நிறுவனத்துக்கு அனுப்பபட்டது. ஆனால், குறித்த நிறுவனத்திலிருந்தும் தாஜுதீனின் உடற்பாகங்கள் மற்றும் சான்று பொருட்கள் ஆகியன காணாமல் போயிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து, சிலவருடங்கள் கழியவே திட்டமிடப்பட்டே தாஜுதீனின் உடற்பாகங்கள் காணாமல் ஆக்கப்பட்டதாகவும் பேசப்பட்டது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் தாஜுதீனின் கொலை விவகாரம் அணையா தீ போல பற்றி எரிய ஆரம்பித்தது. அந்த சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த முஜிபூர் ரஹ்மான் நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி, தாஜுதீனின் கொலை தொடர்பில் நாடாளுமன்றில் பல விடயங்களை பகிரங்கப்படுத்தினார்.

முஜிபுர் ரஹ்மானின் கருத்துக்களை கூட தடுக்கும் விதமாக ராஜபக்சவின் மிக தீவிர ஆதரவாளர்களாக இருந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவரை பேச விடாது தடுக்கும் விதத்தில் செயற்பட்டிருந்ததோடு அதனை தொடர்ந்து ஏற்பட்ட அமளிதுமளியில், நாடாளுமன்றம் சிறிது நேரம் ஒத்திவைக்கபட்ட சம்பவம் மறக்க முடியாத ஒரு நிகழ்வாகவே அமைந்து விட்டது. இந்த உரையை நாடாளுமன்றில் ஆற்றியமைக்காக முஜிபூர் ரஹ்மானுக்கு கொலை மிரட்டல், தாக்குதல் ஏற்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது. இந்த கொலை மிரட்டல் சம்பவத்தில் மிகவும் முக்கியமாக பேசப்பட்டவர் தான் அண்மையில் கார் விபத்தில் உயிரிழந்த முன்னாள் அமைச்சர் சனத் நிஷாந்த ஆவார். அதுமட்டுமன்றி, இந்திக்க அநுருத்த, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ ஆகியோரும் முஜிபுர் ரஹ்மானுக்கு அழுத்தம் பிரயோகித்ததாக கூறப்பட்டது.

## தொடர்ந்து கொலை சம்பவத்தில் பொலிஸ் தரப்பில் என்ன நடந்தது?

மேல் மாகாணத்தில் கொலை நடந்த அன்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்த அனுர சேனநாயக்க, அப்போது கொலை நடந்த பொலிஸ் பிரிவின் குற்றவியல் பொறுப்பதிகாரியாக இருந்த பொலிஸ் பரிசோதகர் சுமித் பெரேரா ஆகியோருக்கு எதிராக தகவல்களை மறைத்தமை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டது. அக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். வஸீம் தாஜுதீன் விவகாரத்தில், கொலையின் பின்னர் மேலதிக ஆய்வுக்காக எடுக்கப்பட்ட வஸீமின் உடற் பாகங்கள் சில காணாமல் போனமை தொடர்பில் சி.ஐ.டி. முன்னெடுத்த விசாரணைக்கு அமைவாக முன்னாள் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், அவர்களில் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்க, முன்னாள் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர ஆகியோருக்கு எதிராக சட்ட மா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் தண்டனை சட்டக் கோவையின் 198 ஆவது அத்தியாயத்தின் கீழ் தண்டனைக் குரிய குற்றம் ஒன்றினை செய்துள்ளதாக கூறி வழக்கு தொடரப்பட்டது. எவ்வாறாயினும், வழக்கு விசாரணை ஆரம்பத்தில் ஆனந்த சமரசேகரவும், பின்னர் அனுர சேனநாயக்கவும் உயிரிழந்தனர். எனினும் கொலையாளிகள் இதுவரை கண்டறியப்படவில்லை.








( விபரங்கள் அடுத்த வாரம் ..)



# ட்ரம்பின் மீள் வருகையின் பின்னரான சூழலில் இஸ்ரேல் - பலஸ்தீன போர்..!

# பணயக் கைதிகளை மீட்க புதிய உத்திகளைக் கையாளும் இஸ்ரேல்: பலஸ்தீன மக்கள் விலைபோவார்களா?

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஒரு வருடத்திற்கும் மேலாக நீடிக்கும் நிலையில் குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட அப்பாவி பொதுமக்களோ தினம் தினம் கொன்று குவிக்கப்படுகிறார்கள்.

மத்திய கிழக்கில் நிலவும் போர் தீவிரத்தால் காசா மயான பூமியாக மாறிவரும் அவல நிலையை வார்த்தைகளால் விபரிக்க முடியாது. தரைவழியாகவும் வான்வழியாகும் நாளுக்கு நாள் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் காசாவில் பணய கைதிகளை மீட்பதற்கு இஸ்ரேல் புதிய உத்திகளை கையாண்டுள்ளது. பணய கைதிகளை கண்டுபிடித்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு காசாவிற்கு விஜயம் மேற்கொண்ட போதே



இந்த அறிவிப்பை விடுத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பணய கைதிகளை கண்டுபிடித்து ஒப்படைப்பவர்களுக்கு ஒவ்வொரு பணய கைதிக்கும் தலா 05 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற அடிப்படையில் இந்த சன்மானம் வழங்கப்படும். பணய கைதிகளை ஒப்படைப்போரின் அடையாளம் பாதுகாக்கப்படும்.மேலும் குடும்பத்துடன் காசாவில் இருந்து பாதுகாப்பான இடத்திற்கு செல்ல இஸ்ரேல் அனைத்து ஏற்பாடுகைளையும் மேற்கொள்ளும்.

பணய கைதிகளின் இருப்பிடத்தை அறிந்து அவர்களை மீட்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறோம். அந்த முயற்சிகளை கைவிடப்போவதில்லை. அனைத்து பணய கைதிகளையும் உயிருடனோ? பிணமாகவோ? மீட்கும் வரை எமது போர் தொடரும். எவரேனும் கைதிகளுக்கு தீங்கு விளைவிக்க முயற்சி செய்யும் பட்சத்தில் அவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள்" என நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காசாவில் தற்போது 101 கைதிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் பலர் உயிரிழந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஏழாம் திகதி திகதி ஹமாஸ் அமைப்பு மேற்கொண்ட தாக்குதலில் இசை கச்சேரியில் பங்கேற்றிருந்த இஸ்ரேல் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். அவர்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் 250 இற்கும் மேற்பட்டோர் பணய கைதிகளாக சிறை பிடிக்கப்பட்டனர். பெண்களில் சிலர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட செய்திகளும் வெளியாகின. சில பெண்கள் நிர்வாணமாக வாகனத்தில் இழுத்து செல்லப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன.

அன்று ஹமாஸ் அமைப்பை ஒழிக்கும் வரை ஓயமாட்டோம் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு சபதம் செய்தார். இந்நிலையில் ஒரு வருடமாகியும் போர் தொடர்கின்றது. இஸ்ரேல் – ஹமாஸ் மோதலால் இதுவரை 45 ஆயிரம் பேர் வரை உயிரிழந்துள்ளதுடன் காயமடைந்தவர்களின் எண்ணிக்கையும் ஒரு லட்சத்தைக் கடந்துள்ளது. எவ்வாறாயினும் போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கமைய, இஸ்ரேல் பணய கைதிகள் சிலரை மீட்டுள்ளதுடன் தொடர்ந்தும் அந்த முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

இதேவேளை, பலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக, ஹிஸ்புல்லா அமைப்பும் போரில் ஈடுபட்டு வருகிறது. அதேபோன்று, ஏமன் நாட்டில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களும் இஸ்ரேல் மீது தாக்குதல் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் இந்த அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா மீது இஸ்ரேலும் தொடர்ச்சியாக தாக்குதல் மேற்கொண்டு வருகின்றது.



**இஸ்ரேல் – ஹமாஸ் மோதலால் இதுவரை 45 ஆயிரம் பேர் வரை உயிரிழந்துள்ளதுடன் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைக் கடந்துள்ளது**

## ட்ரம்பின் வருகையால் மத்திய கிழக்கில் போர் பதற்றம் தணியுமா?

மத்தியக் கிழக்கு பிராந்தியம் தொடர்பான தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அணுகுமுறை தொடர்பிலான தகவல்கள் இதுவரை தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் ட்ரம்ப், இஸ்ரேலின் நிபந்தனைகளுக்கமையவே செயற்பட அனுமதிக்கலாம் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாக கருதப்படும் இஸ்ரேலுக்கு ட்ரம்ப் தனது முதல் பதவிக் காலத்தில் சாதகமான பல நடவடிக்கைகளை எடுத்திருந்தார்., ஆனால் தான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் போர் நிறைவடைவதை பார்க்க விரும்புவதாக நெதன்யாகுவிடம் ட்ரம்ப் கூறியதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. எவ்வாறாயினும் இஸ்ரேலிய அரசின் மீது அமெரிக்க நிர்வாகத்தின் அழுத்தம் குறைவாகவே இருக்கும் என்பது அனைவரும் அறிந்ததே.

எனவே, தற்போதைய சூழ்நிலையில் உடன்பாடொன்றை எட்டுவதற்கு ஹமாஸ் மீது அழுத்தம் கொடுக்க அமெரிக்கா முயற்சித்தாலும் அந்த முயற்சி கைகூடுவது கட்டார் நாட்டைச் சார்ந்துள்ளது என கூறலாம். ஏனெனில் நீண்ட காலமாக அமெரிக்காவின் நட்பு நாடாக இருந்து வரும் கட்டார், இந்த விடயத்தில் அதற்கு ஆதரவாக இருக்குமா என்பது சந்தேகமே. போர்நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பாக இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தராகச் செயல்படுவதிலிருந்தும் கட்டார் விலகியுள்ளது.

இஸ்ரேலும் ஹமாஸும் பேச்சுவார்த்தைக்குத் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தும் போது தான் இந்தப்பணி மீண்டும் ஆரம்பமாகும் எனவும் கட்டார் கூறியுள்ளது. ஹமாஸ் பிரதிநிதிகள் கட்டாரில் இருப்பதை அமெரிக்கா இனி ஏற்காது என அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ள நிலையில் கட்டார் இந்த முடிவை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



பாலகணேஷ் டிலுக்ஷா



# சிவகார்த்திகேயனின் இமாலய வளர்ச்சி

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகரான சிவகார்த்திகேயன் நடித்த 'அமரன்' திரைப்படம் 300 கோடி ரூபாய் வசூல் செய்துள்ளதாக கூறப்படுவது திரை உலகை பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

நடிகர் சிவகார்த்திகேயன் கடந்த 2012 ஆம் ஆண்டு 'மெரினா' என்ற திரைப்படத்தின் மூலம் நாயகனாக தமிழ் சினிமாவில் அறிமுகமானார். தற்போது 12 ஆண்டுகளில் தமிழ் சினிமாவின் தவிர்க்க முடியாத நடிகராகவும், ரஜினி, கமல், அஜித், விஜய் ஆகியோருக்கு அடுத்த இடத்தையும் பிடித்து விட்டார் என்று கூறப்படுகிறது.

சிவகார்த்திகேயன் நடித்த 'மான்கராத்தே' திரைப்படம் முதல் முதலாக 50 கோடி ரூபாய் வசூல் செய்த நிலையில், 'ரெமோ' 75 கோடியும், 'டாக்டர்' 100 கோடியும், 'டான்' 125 கோடியும் வசூல் செய்தது.

இதனையடுத்து தீபாவளி அன்று வெளியான 'அமரன்' திரைப்படம் தற்போது 300 கோடி ரூபாய் வசூல் செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தகவல் சிவகார்த்திகேயன் இரசிகர்களுக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

12 ஆண்டுகளில் நடிகர் சிவகார்த்திகேயன் படிப்படியாக தனது உழைப்பு மற்றும் திறமையால் முன்னேறி இன்று மிகப்பெரிய இடத்தை பிடித்துள்ள நிலையில் அவருக்கு வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன.

ஒருவன் சினிமா

# அஜித் இரசிகர்களுக்கு ஒரு நற்செய்தி

அடுத்த ஆண்டு பொங்கல் தினத்தில் அஜித்தின் 'விடாமுயற்சி' அல்லது 'குட் பேட் அக்லி' ஆகிய இரண்டு படங்களில் ஒன்று வெளியாகும் என்று செய்திகள் வெளியான நிலையில் தற்போது 'குட் பேட் அக்லி' திரைப்படம் வெளியாவது கிட்டத்தட்ட உறுதி செய்யப்பட்டு விட்டதாக கூறப்படுகிறது.

அஜித் நடிப்பில் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் உருவாகி வரும் 'குட் பேட் அக்லி' திரைப்படத்தின் 'பர்ஸ்ட் லுக்' போஸ்டர் வெளியான போதே இந்த படம் அடுத்த ஆண்டு பொங்கல் தினத்தில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அவ்வப்போது புரமோஷன் போஸ்டர்கள் வெளியான போதெல்லாம் பொங்கல் வெளியீடு என்பது உறுதி செய்யப்பட்ட நிலையில், திடீரென 'விடாமுயற்சி' திரைப்படம் தான் பொங்கல் தினத்தில் வரும் என்று கூறப்பட்டது.


இந்த நிலையில், பிரபல விநியோகஸ்தர் ஒருவரிடம் 'குட் பேட் அக்லி' படத்தின் தயாரிப்பு தரப்பு பொங்கல் ரிலீஸ் என்பதை உறுதி செய்துள்ளதாகவும், இதையடுத்து பொங்கல் தினத்தில் இந்த திரைப்படம் வெளியாகும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் 'விடாமுயற்சி' திரைப்படம் மே முதலாம் திகதி அஜித்தின் பிறந்த நாளில் வெளியாக வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

அஜித், த்ரிஷா, பிரசன்னா, சுனில், ராகுல் தேவ் உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகி வரும் இந்த படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்து வருகிறார். அபிநந்தன் ராமானுஜம் ஒளிப்பதிவில், விஜய் வேலுக்குட்டி படத்தொகுப்பில் உருவாகி வரும் இந்த படத்தை மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் பிரமாண்டமாக தயாரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




Face of the week



ஆஷிகா ரங்கநாதன்

# திருமணத்துக்கு தயாராகும் கீர்த்தி சுரேஷ்



நடிகை கீர்த்தி சுரேஷ் தனது 15 ஆண்டுகால காதலரை திருமணம் செய்யப் போவதாகவும், அடுத்த மாதம் இந்த திருமணம் நடைபெற இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ், தெலுங்கு மற்றும் மலையாள திரையுலகின் முன்னணி நடிகைகளில் ஒருவர் கீர்த்தி சுரேஷ் என்பதும், இவரது நடிப்பில் உருவாகியுள்ள 'ரிவால்வர் ரீட்டா', 'கன்னிவெடி' மற்றும் அட்லி தயாரிப்பில் உருவான பொலிவுட் திரைப்படமான 'பேபி ஜோன்' ஆகிய படங்கள் வெளியீட்டுக்கு தயாராக உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. அடுத்தடுத்து இந்த மூன்று படங்களும் வெளியாகவுள்ளன.

இந்த நிலையில், நடிகை கீர்த்தி சுரேஷ் தனது 15 ஆண்டுகால நண்பரான அந்தோணி என்பவரை திருமணம் செய்யப் போவதாகவும், துபாயை சேர்ந்த தொழிலதிபரான இவர் கீர்த்தி சுரேஷின் சிறுவயது முதலே நண்பர் என்றும் கூறப்படுகிறது.

இந்த திருமணம் டிசம்பர் மாதம் கோவாவில் நடைபெற இருப்பதாகவும், மிகவும் எளிமையாக நெருங்கிய குடும்ப உறவினர்கள் மற்றும் நண்பர்கள் இந்த திருமணத்தில் கலந்து கொள்வார்கள் என்றும் கூறப்படுகிறது.

சரியான திருமண திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்று கூறப்படும் நிலையில், இரசிகர்கள் நடிகை கீர்த்தி சுரேஷ்'க்கு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

# இசைப்புயலின் காதல் கதை தெரியுமா?

இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மான் வாழ்க்கையில் விவாகரத்து வரும் என யாரும் கனவில் கூட நினைக்கவில்லை. ஆனால் வந்துவிட்டது. ஏ.ஆர். ரஹ்மானிடம் இருந்து விவாகரத்து பெறுவதாக சாஹிரா பானு அறிவிப்பு வெளியிட்டார்.

இதையடுத்து விவாகரத்தை சமூக வலைதளத்தில் உறுதி செய்தார் ஏ.ஆர். ரஹ்மான். மனைவியை பிரிந்தது குறித்து ஏ.ஆர். ரஹ்மான் போட்ட ட்வீட்டை பார்த்தவர்களால் அவர்களின் கண்களை அவர்களாலேயே நம்ப முடியவில்லை. இந்த ஜோடி பிரியும் என்று நினைக்கவில்லையே, ஏன் இப்படி ஆகிவிட்டது என இரசிகர்கள் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் ஏ.ஆர். ரஹ்மான் மற்றும் சாஹிரா பானு இடையே எப்படி காதல் ஏற்பட்டது என்பதை தெரிந்து கொள்வோம்.

இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான். இந்த பெயருக்கு தனியே அறிமுகம் தேவையில்லை. உலக அரங்கில் இந்தியாவின் அடையாளம். இந்தியாவிற்கு ஒஸ்கார் விருதுகளை வாங்கிக் கொடுத்து பெருமை சேர்த்தவர். சிறுவயது முதலே இசை மீது மட்டுமே பெருங்காதல் கொண்டிருந்ததால் இளம் வயதில் எந்த பெண்ணையுமே காதலிக்கவில்லையாம். திருமணத்துக்கு பிறகு சாஹிராவை தான் முதன்முதலாக காதலித்தாராம். நிச்சயிக்கப்பட்ட திருமணம் தான். ஆனால் ரஹ்மானுக்கும் சாஹிராவுக்கும் இருந்த காதல் சுவாரஷ்யமிக்கது.

ஏ.ஆர்.ரஹ்மான் 1967ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி சென்னையில் பிறந்தார். படித்தது வளர்ந்தது எல்லாமே சென்னை தான். அடிப்படையில் இசைக்குடும்பத்தில் பிறந்த ரஹ்மான் தந்தையின் மறைவுக்கு பிறகு, மிகச்சிறு வயதிலேயே குடும்பத்தை பார்த்துக் கொள்ளும் பொறுப்புக்கு வந்தார். அதனால் கடினமாக உழைத்து தனக்கான வெற்றிகளை குவித்துக் கொண்டிருந்த சமயம் அது.

எல்லா குடும்பங்களிலும் குறிப்பிட்ட வயதுக்கு மேல் மகனுக்கு பெண் பார்க்க ஆரம்பிப்பது போல தான் ஏ.ஆர். ரஹ்மானின் வீட்டிலும் நடந்தது. அவரின் 27 ஆவது வயதில் அவருடைய அம்மா ரஹ்மானுக்கு தீவிரமாகப் பெண் தேட ஆரம்பித்தார்.

எல்லோருக்குமே தனக்கு வரப்போகும் வாழ்க்கைத் துணையைப் பற்றிய கனவு என்று ஏதாவது இருக்கும். ஆனால் ரஹ்மான் அந்த சமயத்தில் பல முக்கியமான



படங்களுக்கு இசையமைத்துக் கொண்டிருந்த நேரம். பெரிதாக ஆசை, கனவு என்றெல்லாம் எதுவும் இல்லையாம். ஆனால், அவருக்கு வாழ்க்கை துணையாக வருபவர் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று 3 கண்டிஷன் மட்டும் அவருக்கு இருந்ததாம்.

1. நன்கு படித்த பெண்ணாக இருக்க வேண்டும். அப்போது தான் இசை சம்பந்தமாகவும் மற்ற விடயங்களை எளிதில் கற்றுக் கொள்ளும் ஆர்வமும் இருக்கும்.

2. அன்பாக நடந்து கொள்ளும் பெண்ணாக இருக்க வேண்டும்.

3. மனித நேயம் மிக்க பெண்ணாக இருக்க வேண்டும்.

இந்த மூன்று குணங்களும் பெண்ணுக்கு இருக்கும்படி பாருங்கள் என்று சொன்னாராம்.

ஒருமுறை ரஹ்மானின் அம்மா தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு சென்றிருந்த போது அங்கே ஒரு பெண்ணை பார்த்ததும் அவருக்கு மிகவும் பிடித்துப் போகவே, யாரென்று விசாரித்திருக்கிறார்.

சென்னையிலுள்ள ஒரு தொழிலதிபரின் பெண் என்று தெரிந்ததும் வீட்டுக்கு சென்று அவருடைய தந்தையை சந்திக்கவே, நீங்கள் பார்த்தது என்னுடைய மூத்த மகள். அவளுக்கு திருமணம் ஆகிவிட்டது. என்னுடைய இளைய மகளுக்கு தான் திருமணம் ஆகவில்லை. மாப்பிள்ளை தேடிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லவே அப்போதுதான் ரஹ்மானின் அம்மா சாஹிரா பானுவை பார்த்திருக்கிறார்.

பார்த்ததும் சாஹிராவை அம்மாவுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. அவருடைய தந்தையிடம் விருப்பத்தை சொல்லிவிட்டு மகனை அழைத்துக் கொண்டு பெண் பார்க்க வருவதாக சொல்லி சென்றிருக்கிறார்.

சாஹிராவை குடும்பத்துடன் பெண் பார்க்கச் சென்றிருக்கிறார்கள். அப்போது வழக்கமான பெண் பார்க்கும் படலம் போல தான் ரஹ்மானுக்கும் நடந்ததாம். ரஹ்மானுக்கும் பெண்ணை பிடித்திருந்தது. இருவரும் தனியே பேசிக்கொள்ளும்படி பெரியவர்கள் சொல்லவே இருவரும் பேசிக் கொண்டார்களாம்.

அப்போது ரஹ்மான் சாஹிராவிடம் என்னை உங்களுக்கு திருமணம் செய்து கொள்ள சம்மதமா என்று கேட்க, சாஹிராவும் ஆம, சம்மதம் என்று சொல்லியிருக்கிறார்.

ஒரு பிரபலத்தின் மனைவியாகிவிட்டால் சுதந்திரமாக வெளியில் கூட போக முடியாது. நினைத்த இடத்துக்கெல்லாம் நினைத்த நேரத்துக்கு செல்ல முடியாது. அதற்கு சம்மதமா என்று ஏர்.ரஹ்மான் கேட்க, இந்த ஒப்பந்தத்துக்கு சரி என்று சாஹிரா சொன்ன பிறகு தான் சாஹிராவை இன்னும் பிடித்ததாம். திருமணம் ஆன புதிதில் சாஹிரா கொஞ்சம் சிரமப்பட்டிருக்கிறார். அதன்பின்னர், அவர் இந்த வாழ்க்கைக்கு பழகிவிட்டாராம்.

ஒருவழியாக 1995ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ரஹ்மான் – சாஹிரா திருமணம் நடந்து முடிந்தது. அப்போது ரஹ்மானுக்கு வயது 27. சாஹிரா பானுவுக்கு 21.

ரஹ்மானின் குடும்பத்தை அவருடைய அம்மா தான் வழிநடத்திக் கொண்டிருந்தார். கடந்த ஆண்டு அவர் இறந்த பின் குடும்பத்தை முழுமையாக கவனித்துக் கொள்ளும் பொறுப்பு சாஹிராவுக்கு வந்துவிட்டது. மேலும், ரஹ்மான் – சாஹிரா தம்பதிக்கு 3 குழந்தைகள். இரண்டு பெண் குழந்தை. ஒரு மகன். அதில் மூத்த மகள் கதீஜாவுக்கு கடந்த ஆண்டு 2022இல் தான் திருமணம் முடிந்தது.

இப்படி அழகாக சென்றுகொண்டிருந்து இசைப்புயலின் 29 வருட திருமண வாழ்க்கை, இப்போது முடிவுக்கு வந்துள்ளமை அவரின் இரசிகர்கள் மற்றும் சினிமா வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரீரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 நவம்பர் 24 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.